



கல்கி
KALKI 3-2-80 90 காசு
MEN ONLY
''என்னம்மா, கேர்ள் ஃபிரண்ட்ஸோட நான் வீட்டுக்கு வந்தா என்னைப்பற்றி எதுக்கு இப்படிக் கவலைப் படறே?''
''உன்னைப் பற்றிக் கவலை இல்லேடா.... உங்கப்பாவைப் பற்றி!''

எதிரொலிக்கும் எல்லா திசைகளிலும்




நம்புங்கள் திருப்தியோடு
உங்களுக்கு நல்லவையே
கிடைக்கும். பேரானந்தம்
பெருக அணிந்திடுவீர்
அளவிலா மகிழ்ச்சியை.

மபத்லால் இன்டஸ்ட்ரீஸ் நியூ ஷொராக் மில்ஸ்
மபத்லால் ஃபைன்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், சேலைகள்
உடுப்புத் துணிகள், மற்றும் டெனிம்கள்.

MAFATLAL INDUSTRIES
MAFATLAL FINE

79/MFI/313-tm



காப்டன் பதவியிலிருந்து, கவாஸ்கர் ராஜினமா செய்தது பற்றி அவரிடமே கேட்டால் அவர் என்ன சொல்வார், பாவம்! ''சொந்தக் காரணங்களுக்காக நான் காப்டன் பதவியைத் துறக்கிறேன்'' என்றுதான் சொல்வார். வேறு என்ன கூற முடியும் அவர்?

அவரைக் கேட்பதற்குப் பதில் அரசியல் தலைவர்கள் பலரைக் கேட்டால் சுவாரஸ்ய மான பதில்கள் கிடைக்கு மல்லவா? இதோ சில கற்பனைகள்:

கவாஸ்கர் ராஜினமா: தலைவர்கள் பேட்டி!

— கி. ராஜேந்திரன்



மு. கருணாநிதி:


கவாஸ்கர் என்ன, 'இந்தியா டெஸ்டில் வெல்வது என் மானப் பிரச்னை' என்று சொன்னார்? இல்லையே? அப்படி இருந்தும் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றும் காப்டன் பதவியை ராஜினமா செய்தார். ஆனால் நமக்குத் தெரிந்த ஒருவர் 'பா.ரா. வெல்வது என் மானப் பிரச்னை' என்றார். சொன்ன பின் பா.ரா. தோற்றார். தோற்ற பின்னும் இவர் பதவியை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார். உடன்பிறப்பே! நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்: கவாஸ்கரைப் பார்! என்று. இது என்ன பல்கேரியா — பால்டிகா கப்பல் பேரமா மூடி மறைக்க? கிரிக்கெட் மைதானத்தில் போலீஸ் மிகச் சிறப்பாகச் செயலாற்றியதாம்! அதற்காக வெகுமதி அளித்துக் கௌரவித்திருக்கிறார் முதல்வர். ஆனால் சேப்பாக்கம் மைதானத்துக்குள் ஆரஞ்சு தோலி எறியப்பட்டது நமக்குத் தெரியாதா? ஏன் ஒரு முழு ஆரஞ்சு கூட வீசப்பட்டதை நாம் அறிவோம். இந்தியா வெற்றியை நெருங்கும்போது பலர் பட்டாசு கொளுத்தியிருக்கிறார்கள். சில நாற்காலிகள் கூட உடைக்கப்பட்டன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருந்த போலீசுக்கு வெகுமதியாம்! இதிலிருந்தே தெரியவில்லையா, மாநிலத்தில் சட்ட ஒழுங்குப் பிரச்னை தலைவிரித்தாடுகிறது என்று?



இந்திரா காந்தி:

எப்படி ருஷ்யாவின் ஆப்கன் படையெடுப்புச் சரியில்லையோ அதுபோல் கவாஸ்கரின் ராஜினமாவும் சரியில்லை. ஆனால் கார்மால் அழைத்துத்தான் ருஷ்யப் படையெடுப்பு நடந்தது என்பது போல் கவாஸ்கரும் சொந்தக் காரணங்களுக்காகத் தான் ராஜினமாச் செய்திருக்கிறார் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. நமக்கு கவாஸ்கர் ராஜினமா பற்றியோ அவரது சொந்தக் காரணங்கள் பற்றியோ கவலையில்லை. இதனால் இந்திய கிரிக்கெட் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதுதான் நமக்குப் பிரச்னை.

இப்படி வெற்றி பெற்றதும் அவர் காப்டன் பதவியை ராஜினமாச் செய்தார் என்றால் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்ட நான் பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்துவிட வேண்டுமோ என்பது பற்றி எனக்குக் கவலையே கிடையாது. அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு எனக்குப் பாதகமாய்ப் போய் என் ராஜினமா தேசமெங்கும் எதிர்பார்க்கப்பட்ட போதோ ராஜினமா செய்யாதவள் இப்போதா செய்யப் போகிறேன்? அல்லது கேரளத்தில் தேர்தலில் தோற்றதற்காகத் தான் ராஜினமாச் செய்யப் போகிறேனா? ஹரியானாவின் ஜனதா [illegible]



நான் அப்படியே சுவீகரித்துக் கொண்டு சுபரீகரம் பண்ணியது போல் கவாஸ்கரும் பாகிஸ்தான் டீமையே முழுங்கி யிருக்கலாமே? அதை விட்டு ராஜினமா செய்ய அவசியமே இல்லையே?

தேவராஜ் அர்ஸ்



தேர்தலில் என் கட்சி தோற்றதும் நான் ராஜினமா செய்தேன். ஆனால் பாகிஸ்தான் அணி தோற்றதும் அஸிஃப் இக்பால் தார்மிகப் பொறுப்பேற்றுப் பேசிய போதிலும் ராஜினமா செய்யவில்லை. அஸிஃப் செய்யாததை கவாஸ்கர் செய்து காட்டி யிருக்கிறார். மக்கள் இந்திரா காங்கிரஸ் ஒன்றைத்தான் காங்கிரஸாக நினைக்கிறார்கள் என்பது போல் இன்று கிரிக்கெட் ரசிகர்களும் இந்திய அணியைத்தான் கிரிக்கெட் அணியாக எண்ணுகிறார்கள். எனவே பாகிஸ்தான் அணி இந்தியா அல்லாத வேறு எதிர் கிரிக்கெட் அணிகளுடன் இணைந்து விடுவதே சிறந்தது. சி. சுப்பிரமணியமும் விரைவில் பத்திரிகை நிருபர்



விஸிட்டிங் கார்டு!

ஸால்ஸ்புர்க்கிலிருந்து மூனிச் நகரத்துக்குப் போகும் எக்ஸ்பிரஸ் ரயிலில் முதல் வகுப்பில் ஒரு பிரயாணி எல்லோர் கோபத்துக்கும் ஆளானான். காரணம் அந்த ரயில் பெட்டியில் யாரும் புகைபிடிக்கக் கூடாது. ஆனால் அவனோ புகையை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தான். பார்த்தார், பக்கத்திலிருந்த பெரியவர். நயமாக சொல்லிப் பார்த்தார். அவனோ காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பெரியவருக்குக் கோபம் வந்துவிட்டது. ''நான் யார் தெரியுமா? பார்!'' என்று இரைந்து கொண்டே தம் விஸிட்டிங் கார்டை அவனிடம் நீட்டினார், அதில் அவர் பெயரும், அவர் ரயில்வே மந்திரி என்ற விவரமும் இருந்தன. அந்தப் பிரயாணி பேசாமல் அந்தக் கார்டை வாங்கி தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு மீண்டும் புகை பிடிக்கத் தொடங்கினான். அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றதும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கீழே இறங்கி நடந்தான். பெரியவருக்கு ஒரே ஆத்திரம். ஜன்னல் வழியாகப் பார்த்து, ஸ்டேஷன் மாஸ்டரைக் கூப்பிட்டு ''அந்த ஆளைப் பிடியுங்கள். அவனை யாரென்று விசாரித்து, அவனிடம் முதல் வகுப்பு டிக்கெட்டு இருக்கிறதா என்று சோதியுங்கள்'' என உத்தரவிட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டரும் அவனைப் பிடித்து விசாரிக்கையில் அவன் அலட்சியமாகத் தன் பாக்கெட்டிலிருந்த விஸிட்டிங் கார்டை எடுத்துக் காண்பித்தான்.

ஸ்டேஷன் மாஸ்டர் பரக்க பரக்க பெரியவரிடம் ஓடி வந்து ''ஸார், நான் அவரை ஒன்றும் செய்ய முடியாது. அவர் யார் தெரியுமா? நம் ரயில்வே மந்திரியாக்கும்!'' என்றார்.

—ராதா சுப்பிரமணியன்
(ஜெர்மானியக் குட்டிக்கதை)

கூட்டம் கூட்டி தம் கருத்தை விளக்குவார் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.



ஸ்டீபன்

பாகிஸ்தான் தோற்றதற்கும் இந்தியா வென்றதற்கும் வேறு காரணங்கள் இருக்கின்றன. கிரிக்கெட் ரசிகர்கள் பலர் டிக்கெட் வாங்கியிருந்தும் அவர்களுக்கு நாற்காலிகள் போடப் படவில்லை. வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர்கள் மறைந்தது போல கிரிக்கெட் ரசிகர்கள் பட்டியலில் இப்படி ஏராளமானவர்களின் பெயர்கள் எப்படி விடுபட்டுப் போயின என்பது மர்மமாக இருக்கிறது. இதற்கு ஒரு விசாரணை நடத்த வேண்டும். நான் நாடாளுமன்றத்துக்குப் போக வேண்டும் என்றால் எனக்காக ஒரு எம். பி. ராஜினாமா செய்தால் தானே நான் உபதேர்தலில் நின்று நாடாளுமன்றத்துக்குப் போக முடியும்? அதுபோல் விசுவநாத் காப்டனாக வேண்டுமென்றால் அதற்கு கவாஸ்கர் ராஜினாமா செய்தால்தானே முடியும்?

ராஜ்நாராயண்



கவாஸ்கர் ராஜினாமா அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. தேர்தலில் சூழ்ச்சி நடந்தது போல் கிரிக்கெட்டிலும் சூழ்ச்சி நடந்திருக்கிறது. நாட்டு அரசியலை நாற்றமெடுக்கச் செய்த நான் காந்தி சமாதியை கங்கா ஜலத்தால் புனிதப் படுத்தியது போல் கிரிக்கெட் அரசியலை நாற்றமெடுக்கச் செய்தவர்கள் சேப்பாக்கம் மைதானத்தைக் கங்கா ஜலத்தால் புனிதப்படுத்தட்டும்!

எம். ஜி. ஆர்.



எனது மதிப்புக்குரிய கலைஞருக்கு நான் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் வென்றவர்தோற்பதும் தோற்றவர் வெல்வதும் நடக்கக் கூடியதுதான் என்றாலும் கவாஸ்கர்வென்ற பின் ராஜினாமா செய்ததுபோல் கலைஞர் தமது கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ராஜினாமா செய்து விடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் நேரத்தில் தோற்றவரான அவர் இப்பாதும் ராஜினாமா செய்து விடவில்லை என்பதைக் கவனிக்குமிடத்து, வென்றவரின் ராஜினாமா தோற்றவரைப் பாதிக்காது ஆனால் தோற்றவர் பதவியில் நீடிப்பது சென்றவரைப் பாதிக்கலாம் என்பதால், வாங்காத கப்பலில் ஊழலைக் கண்டு பிடிப்பவர் நடக்காத மாட்டில்கூட சட்ட ஒழுங்குச் சீர்குலைவைக் காண்பார் என்பதைக் குறிப்பிட்டு, நமக்கு முன் உள்ள பிரச்னை நிலையான இந்திய அணி என்பதுதான் என்பதை மனத்தில் கொண்டு என் ரத்தத்தின் ரத்தங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவெனில் கவாஸ்கர் போய் விசுவநாதனோ அல்லது வேறு யாரேனும் ஒருவரோ காப்டனாக வந்தாலும் அவருக்கு நமது ஆதரவை அளிப்போம்; கம்ப்யூட்டரின் ஆதரவு நமக்கு இருக்கிறது என மொழிந்து அண்ணா நாமம் வாழ்க எனக் கூறி விடைபெறுகிறேன்.


சிவசங்கரி
எழுதும் நவீனம்
கல்கி பிப்ரவரி 17
மகளிர் சிறப்பிதழில் ஆரம்பம்

filmotsav'80

பஞ்சு அருணசலம்

விமரிசனங்கள்



விழாவில் கிட்டத்தட்ட 111 படங்கள் காண்பிக்கப்பட்டன. சந்தோஷ் தியேட்டரில் பத்திரிகையாளர் காட்சி நடந்தாலும் இரண்டாவது வாரத்திலிருந்து அலங்கார் தியேட்டரிலும் பதாமி ஹவுஸ் என்ற இடத்திலும் பத்திரிகையாளர் காட்சிகள் தொடர்ந்தன. எந்தப் படம் நல்ல படம் என்று தேர்ந்தெடுத்துப் பார்க்க வேண்டிய நிலைமை. சாப்பிடக்கூட நேரமின்றி சினிமா பார்த்தோம்! தியேட்டரிலேயே சிற்றுண்டி அருந்தலாம் என்றால் சந்தோஷ் தியேட்டரிலே 2 இட்டிலி 1 ரூபாய் விலை. படவிழா நிர்வகித்தவர்களுக்கு இம்மாதிரி சிறு விஷயங்களில் கவனம் செலுத்த அவகாசம் இல்லைபோலும்!

முடிவு விழா பெங்களூர் ஸைப்பில் நடைபெற்றது. வேடிக்கை என்னவென்றால் இதில் பங்கு பற்றிய இரு பிரமுகர்களும் இதில் பங்கேற்போம் என்று நாலுநாட்கள் முன்னதாகக் கனவு கூட கண்டிருக்க முடியாது! ஒருவர் முதல்வர் குண்டுராவ், மற்றொருவர் வசந்த் சாதே – மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர். இருவருமே இரண்டு நாளைக்கு முன்புதான் பதவி யேற்றிருந்தனர்!

சென்னையில் நடந்த பிலிமோத்சவ்'78-ன் போது படங்கள் நன்றாக இருந்தன. ஆனால் உலகப்புகழ் பெற்ற இயக்குனர்களோ, தொழில் நுட்பக் கலைஞர்களோ, நடிகர் நடிகைகளோ வரவில்லை.

பெங்களூரில் உலகப் புகழ் பெற்ற இயக்குனரான ரோமன் போலன்ஸ்கி போன்ற பலர் வந்திருந்ததால் தானோ என்னவோ படங்கள் சாதாரணமாகி விட்டன! இனி, விழாப் படங்கள் சிலவற்றைத் திரைப்படக் கதாசிரியர், தயாரிப்பாளர் பஞ்சு அருணசலம் விமர்சிக்கக் காண்போமா?

The Guns (பிரேசில்)

கறுப்பு வெள்ளைப்படம். வறுமையின் கொடுமையை இந்தப் படம் விளக்குவது. மூட நம்பிக்கையை மறைமுகமாகக் கேலி செய்கிறது. கிராமத்தில் பல வருடங்களாக மழை இல்லை. கிராமத்து மக்கள் ஒரு காளையைக் கொன்று பூஜை செய்து சாப்பிட்டால் மழை பெய்யும் என்று நம்புகிறார்கள். கிராமத்தின் தலைவன் ஆயிரக்கணக்கான தானிய மூட்டைகளை அரசாங்கக் காவலர்கள் உதவியுடனேயே லாரிகளில் ஏற்றிக்கொண்டு போகிறான். அதைத் தடுக்கத் திராணி அற்ற அப்பாவி மக்கள் காளையைக் கொன்று பூஜை நடத்துகிறார்கள். இதை எதிர்த்த ஒரே ஒருவன் போராடி உயிர் இழக்கிறான். நல்ல கருத்துத்தான். ஆனால் படம் படு ஸ்லோ. புதிய கருத்து அல்ல. பழசையே மீண்டும் மக்களுக்கு வலியுறுத்தும் போது அது மனத்தில் பதியும் வண்ணமாவது படமாக்க வேண்டாமா? எரிச்சலூட்டும் படியாகவா படமாக்குவது? விழாவில் பெரும்பாலான படங்கள் இப்படித்தான் இருந்தன.

The Deadly Sin (ஹாலந்து)

ஹாலந்தைச் சேர்ந்த இந்தப் படத்தில் தலையும் இல்லை வாலும் இல்லை. சில செக்ஸ்





✕ யுகோஸ்லாவியப் படம்: ''ஆக்குப்பேஷன் இன் டுவெண்டி ஸிக்ஸ் பிக்சர்ஸ்.''

✕ மேற்கு ஜெர்மானியப் படம்: ''டி புன் டிரம்.''



டைரக்டர் ரிச்சர்ட் கேப்லானுடன்
நடிகை லிவ் உல்மான்:
''எ லுக் அட் லிவ்''

காட்சிகள் இருந்தன. அதுவும் படு அபத்தமாக இருந்தன. கிறிஸ்தவ மத சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கிண்டல் செய்யும் காட்சிகள் அதிகம். ஏன் இந்தக் கிண்டல் என்றுதான் புரியவில்லை.

Mouth to Mouth *(ஆஸ்திரேலியா)*

ஒரு சமூக நல நிலையத்தில் பயிற்சி பெறும் இரண்டு இளம் பெண்கள் சுதந்திரமாக வாழ வேண்டித் தப்பித்துச் செல்கிறார்கள். எங்கெங்கோ அலைந்து திரிகிறார்கள். வேலை இல்லாதஇரண்டு ஆண்களைத்துணைக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுடன் உறவு கொள்கிறார்கள். வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். உண்மையை ஒப்புக் கொள்கிறேன். பாதிப் படத்தைக் கூடப்பார்க்க எனக்குப் பொறுமை இல்லை. முடிவு என்ன என்று பார்த்தவர்களைத்தான் கேட்க வேண்டும்.

In a year with 13 Moons *(மேற்கு ஜெர்மனி)*

கதை, திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, டைரக்ஷன், இப்படி எல்லா அம்சங்களிலும் ரொம்ப சாதாரணமாக இருந்த பல படங்களில் இதுவும் ஒன்று. கல்யாணம் செய்து கொண்ட ஒருவன் தன் நண்பன் மேல் கொண்ட அபார அன்பினால் அவனைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக ஓர் ஆபரேஷன் செய்து கொண்டு பெண்ணாக மாறுகிறான். அவன் பெண்ணாக மாறின பிறகு அவன் நினைத்தபடி அவன் நண்பனைத் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை. அதே சமயம் அவன் ஆணாக இருந்த போது அவனிடம் அன்பாக இருந்த மனைவியும் அவன் பெண்ணாவை பிறகு அவனை வெறுக்கிறாள். மனம் வெறுத்த அவன் தற்கொலை செய்து கொள்கிறான். கதையைக் கேட்கும் போது ஏதோ புதுமையாக இருப்பது போல்தோன்றுகிறதல்லவா! ஆனால் எடுத்திருக்கும் முறை படு அறுவை.

✱ ஹங்கேரியப் படம்:
''லெகாடோ''



A LOOK AT LIV ULLMANN (யு.எஸ்.ஏ.)

Liv Ullmann என்பவர் புகழ்பெற்ற ஸ்வீடிஷ் நடிகை. சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக அவர் நடித்த பல படங்களிலிருந்து சில காட்சிகளைத் தொகுத்து அந்த நடிகையின் பேட்டியுடன் படமாக்கியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது அந்த நடிகையின் பல படங்களைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் ஏற்படுகிறது. எவ்வளவு அற்புதமாக நடித்திருக்கிறார்?

DANCE OF THE VAMPIRES

எல்லோருக்கும் தெரிந்த டிராகுலா கதையை ரோமன் போலன்ஸ்கி நகைச்சுவை ததும்ப, அதே சமயம் விறுவிறுப்பாக எடுத்துள்ளார். பேய் ஆராய்ச்சி செய்யும் பேராசிரியராக நடித்திருக்கும் வயதான கிழவரை மறக்கவே முடியாது. அந்தப் பேராசிரியரின் உதவியாளராக ரோமன் போலன்ஸ்கி நடித்துள்ளார். பேய்கள் வாழும் கோட்டைக்குள்ளேயே போய்ப் பேராசிரியரும், அவர் உதவியாளரும், ஆராய்ச்சி செய்வதும், பேய்களிடம் மாட்டிக்கொண்டு விழிப்பதும் அவைகளை அழிப்பதற்கு முயற்சி செய்வதும், அந்த முயற்சியில் தோற்றுத் தப்பித்தால் போதும் என்று ஓடுவதும் நினைத்து நினைத்துச் சிரித்து ரசிக்கத்தக்கது.

TESS

டெஸ் என்ற ஒரு கிராமத்துப் பெண்ணின் காதல் கதை. யாரோ பிரபல நாவலாசிரியரின் கதை என்று சொன்னார்கள். கொஞ்சம் ஸ்லோவாக இருந்தாலும் மனத்தில் ஆழப்பதியும்படி ஒரு கவிதை போல போலன்ஸ்கி எடுத்திருந்தார். டெஸ்ஸாக நடித்த பெண் ரொம்பப் பிரமாதம். ஸ்ரீபிரியா போல இருந்தார். (தோற்றத்தில் மட்டும்) கண்களிலேயே உணர்ச்சிகளைப் பிரதிபலித்தார். காதலுக்காகக் கணவனையே கொலை செய்து விட்டு ''டெஸ்'' காதலனுடன் ஓடுவதும், சில நாட்கள் காதலனுடன் போலீஸுக்கு மறைந்து வாழ்வதும் கடைசியில் போலீஸாரிடம் மாட்டிக் கொள்வதும் உருக்கமான காட்சிகள்.

TENANT

குடி இருக்க வீடு கிடைப்பது கஷ்டம் என்பது எல்லா நாட்டிலும் உள்ளதுதான் போலிருக்கிறது. கதை என்று ஒன்றும் இல்லை. அங்கங்கே நகைச்சுவை ததும்பும் காட்சிகள் இருந்தாலும் இந்த ரோமன் போலன்ஸ்கியின் படம் திருப்தியாக இல்லை. அவருடைய ஆரம்ப நாட்களில் இந்தப் படத்தை எடுத்திருப்பார் என்று நினைக்கிறேன்.

பெருவழி அம்பலம் (மலையாளம்)

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இதோ ஓர் இந்தியப் படத்தின் விமரிசனம்.

இந்தப் படத்தை எதற்காக விழாவுக்குத் தேர்ந்தெடுத்தார்கள் என்றே புரியவில்லை. ஒரு பெண்ணைக் கற்பழித்து விட்டு ஜெயிலுக்குப் போன ஒருவன் ஊருக்குத் திரும்புகிறான். கிராமமே அவனைப் பார்த்து நடுங்குகிறது. சந்தர்ப்பவசத்தால் பயந்தாங்கொள்ளிப் பையன் அவனைக் கொலை செய்து விடுகிறான். சில நாட்கள் தலைமறைவாகச் சுற்றுகிறான். போலீஸில் மாட்டிக் கொண்டாலும் பரவாயில்லை என்ற எரிச்சலுடன் ஊருக்குத் திரும்புகிறான். அவனைப் பார்த்ததும் அந்தக் கிராமத்து மக்கள் பயப்படுகிறார்கள். இவ்வளவு தான் கதை. இதில் என்ன அற்புதமான கருத்து இருக்கிறது என்று தேர்வு செய்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. கருத்துத்தான் போகட்டும் படமாவது ஏதாவது ஒரு அம்சத்தில் சிறப்பாக இருக்க வேண்டாமா? சுற்றுக் குட்டிச்சுவ(ர்)ாக இருக்கிறது. எந்த அடிப்படையில் விழாக்களுக்குப் படங்களைத் தேர்வு செய்கிறார்கள் என்று புரியாத புதிராக இருக்கிறது. உண்மை கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

1900 (இத்தாலி)

இந்தப் படம் தான் விழாவில் பார்த்த படங்களிலேயே மிகச் சிறந்த படம். **CLOSED CIRCUIT** என்ற படத்தையும் இந்தப் படத்தையும் பார்த்த பிறகு இத்தாலிய படத் தயாரிப்பாளர் மீது எனக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டு விட்டது. முன்னது ஒரு அதிதமான கற்பனை உள்ள படம். இதுவோ உண்மையாக நடந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு உருவான யதார்த்தமான கதை. சுமார் 300 நிமிடங்கள் ஓடுகிறது! சம்பவங்கள் நடந்த அந்தச் சூழ்நிலைக்கே நம்மை அழைத்துச் செல்கிறது. இத்தாலியில் எடுக்கப்பட்ட ஆங்கிலப்படமான இது இந்தியாவில் பல தியேட்டர்களில் திரையிடப்பட வேண்டும் என விரும்புகிறேன். **Burt Lancaster, Robert - De - Nero** போன்ற மிகச் சிறந்த நடிகர்கள் நடித்திருக்கும் இந்தப் படத்தைப் பார்த்த போது நம் வாழ்நாளில் இப்படி ஒரு படத்தை எடுப்போமா என்ற ஆதங்கம் தான் என் மனத்தில் எழுந்தது.

—பேட்டி: சலன்

சினிமா தியேட்டரில் உட்கார்ந்திருந்த அவனுக்கு ஒரே ஆச்சரியம். தன் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணியும் அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு நாயும் படத்தின் நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தனர். அடக்கமாட்டாமல் அவன் கேட்டான்: ''என்னங்க இது, ஒரு நாய் இப்படி ரசித்து சிரிக்க படம் பார்க்குது!''

பெண்மணி சொன்னாள்: ''எனக்கும் அது தாங்க ஆச்சரியம். இதே கதை புத்தகமாக வந்த போது படிச்சுட்டு நல்லாயில்லேன்னு சொன்னது இது''

—ராமுசாமி





வட்டமேஜை

● 'ரியலிஸம்' என்ற பெயரில் சமீப காலமாகச் சில வக்கிரமான திரைப்படங்கள் ''ஏ'' போர்வையில் புற்றீசல் போல் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றுள் மகுடம் போன்று விளங்குவது 'அழியாத கோலங்கள்'. மூன்று பள்ளி மாணவர்களையும் ஓர் ஆசிரியையும் பற்றியது கதை. படத்தின் சாராம்சம் செக்ஸ்...செக்ஸ்... பள்ளி மாணவர்களுக்கு 'செக்ஸ்'தான் முக்கிய பிரச்னையா? 'ரியலிசம்' என்றால் செக்ஸ்தானா? தவறான எண்ணத்துக்குப் பட அதிபர்கள் அடிமையாகி இருக்கிறார்கள்.

'அழியாத கோலங்கள்' போன்ற படங்களைப் பார்ப்பதன் மூலம் மாணவர்கள் பல தவறான செயல்களுக்கு அடிமைகளாக வாய்ப்பு உள்ளது. இதுதான் 'ஏ' படம் ஆயிற்றே என வாதிடலாம். ஆனால் படம் பார்ப்பவர்களில் பாதிக்கு மேல் சிறுவர்கள்தான். இதற்கு என்று எந்த நடவடிக்கையும் கிடையாது. பத்திரிகைகள் இப்படத்தை 'ஆகா', 'ஓகோ' எனப்புகழ்கின்றன. ''உலகக் குழந்தைகள் ஆண்டின்'' இறுதியில் சிறுவர்களை மையமாக வைத்து இப்படித்தான் ஒரு திரைப் படம் வரவேண்டுமா?

சேலம்-4 — வா. அர்த்தநாரீஸ்வரன்

● மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் நடித்த ''ஜம்பு'' படத்தில் ஆபாசங்கள் ஏராளம். இந்த ஜம்பு ''யு'' அத்தாட்சி பெற்றிருக்கிறது. ''ஏ'' படமாக வரவேண்டிய அளவுக்குக் காட்சிகள் உள்ளபோது எப்படி 'யு' கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை.

கருத்துள்ள ஆபாசம் இல்லாத ''பசி'' படத்துக்கு 'ஏ' அத்தாட்சி; இந்த ஆபாச ''ஜம்பு''வுக்கு 'யு'வா?

கும்பகோணம் — கே. ரகுபதி

● 'பசி' உலகப் பட விழாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படமாக இருக்கலாம். அதற்காக இப்படியா ஒரேயடியாகப் புகழ்வது? பல இடங்களில் வசனம் விரசமாக இருந்ததைக் கண்டித்து ஒரு வரி எழுதியிருக்கக் கூடாதா?

மாமல்லபுரம் — ஆர். சாம்பசிவம்

● அட்டை முகப்பில் 'வித்யாவ்ரதா'வின் வண்ணப் படப்பிடிப்பில் இந்திராவின் தோற்றம் கலை கட்டுகிறது. ஜமாய்த்துள்ளீர்கள். (சமாளிக்கிறீர்கள் என்றும் சொல்லலாம்!)

இராஜபாளையம் — எஸ். விஜயன்

● இந்த இதழின் தலையங்கம் 'க்ளாஸிக்', அபாரம் என்று சொன்னால் மிகையாகாது. வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதை வென்றோர்க்கு வேண்டாம் என்ற உங்கள் எண்ணம், தோல்வி கண்டவர்களுக்கு உங்களின் உற்சாக இன்ஜெக்ஷன், மக்களுக்கு நல்லாட்சி நிலவவில்லையென்றால் 'எழுபத்தேழை மறவாதீர்கள்' என்ற அறிவுரை வாசகம் உண்மையில் அருமை.

சென்னை—4 — சி. எஸ். பாஸ்கரன்

● ''எழுபத்தேழை மறவாதீர்'' என்று அதற்கு முந்தி எழுதிய தலையங்கத்துக்கு என்னதான் விளக்கம் கொடுத்து, பூசி மெழுகினாலும் தேர்தல் முடிவு தங்களுக்கு ஒரு பலத்த அடிதான்!

பரம்பை — நா. ஆறுமுகம்

● கல்கி இதழ் கண்டேன். முகத்தைச் சுளித்தேன். (அட்டைப் படத்தைப் பார்த்துத்தான்!) ''எழுபத்தேழை மறவாதீர்'' என்ற தங்களின் தலையங்கத்தைப் படித்ததும் தான் என் அகமும் முகமும் ஒன்றாக மலர்ந்தன!

வீரபாண்டி — வறிஞ அன்புச்செல்வன்

● இலக்கியச் செல்வன் ஜானகிராமன்
மூன்முடி என்ற கதைதந்தான்
அதனைப் படித்து அகமகிழ்ந்தேன்
அற்புதம் அற்புதம் என்னென்பேன்
பதிலைக் கூறு அனுகூலசாமி
பதிந்தார் நெஞ்சில் சித்திரமாய்
இதனைத் தந்த கல்கிதனக்கோ
எப்படி நன்றி சொல்லிடுவேன்!

மதுரை-7 — மா. வஜ்ரவேலு

● போட்டிக் கதையான 'வாழ்க்கையின் அர்த்தங்கள்' அப்பப்பா! என்னை மெய் மறக்கச் செய்து விட்டது. வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன? பிறருக்காக வாழ்வது தானே? கதையின் ஒவ்வொரு கதாபாத்திரமும் பிறருக்காகவே வாழ்ந்து தம் வாழ்வை அர்த்தமாக்கிக் கொண்டவர்கள்.


பொன்மலை — எஸ். சுகுந்தம்

● ஏ. வி. எம். கணேஷ் எழுதிய 'விரக்தி நதிகள்' படித்தேன். இன்றையச் சூழ்நிலையில் ஊழியர்கள் போராட்டத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தேச விரோத சக்தியை இனம் காட்டியிருக்கிறது கதை. ஆனால் பைசா உலகத்தில் நாம் இருக்கிறோம் என்பதைக் கதாசிரியர் மறந்தது ஏனோ? கதையின் நடுவில் எட்டணா... நாலணா என்று குறிப்பிட்டுள்ளாரே!

தஞ்சாவூர் — ரமணி சுதர்சனம்

● தாம் கண்ட ரஷ்ய பூமியைப் பற்றி அகிலன் அவர்கள் திறம்படச் சொல்லி முடித்தார். '32 ஆண்டுகள் ஆன பிறகும் எத்தனை சதவீதம் மக்களுக்கு இந்த நாட்டில் அந்த உரிமைகள் கிடைத்துள்ளன?' என்ற கேள்வியின் அர்த்தம் மெய்யாகவே வேதனையை உண்டாக்குகிறது.

சென்னை—33 — சுப்ரபாலன்


உங்களுக்கு மந்திரி பதவி கொடுக்கலேன்னு யோசிக்காதிங்க. (இ)காங்கிரஸல்லாத மாநில அரசுகளைக் கவிழ்ப்பதும் கைப்பற்றுவதும் உங்கள் இலாகா!
யஷ்பால் கபூர்
யோவ், பார்ட்டில்! கதைப்படி நீ தான் ஜெயிக்கணும்! என்னைப் போயி ஓட ஓட விரட்டறியே?
மது அரக்கன்
நான் ஜனதாவில் தான் இருக்கேன்! சி·எஸ்· கூப்பிட்டால் போய் பார்ப்பேன்!
பா·ரா
நான் அர்ஸ்-காங்கிரசில் தான் இருக்கேன்-இந்திரா கூப்பிட்டால் போய் பார்ப்பேன்!
சி.எஸ்
நானும் அர்ஸ் காங்கிரஸில் தான் இருக்கேன்! ஆனால் அர்ஸ் காங்கிரஸ் இருக்கா இல்லையான்னு தான் தெரியலே!
அர்ஸ்

1980 பிப்ரவரி 3
சித்தார்த்தி தை 20
மலர்: 38 இதழ்: 27



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அமைச்சரவை என்ன விலை?

அமைச்சரவைகளை விலைக்கு வாங்க மாநில மார்க்கெட்டுகளில் புகுந்திருக்கிறார் இந்திரா. ஏற்கெனவே ஹரியானா அமைச்சரவையை அவர் வாங்கியாகி விட்டது. இதற்குத் தரப்பட்ட விலையாக பஜன்லால் பதவியில் நீடிப்பார். இந்திரா நாம சங்கீர்த்தன பஜனை செய்ய ஆரம்பித்துள்ள பஜன்லாலுக்குத் திடீரென்று ஜனதா பிரயோஜனமில்லை என்றும் இந்திரா காங்கிரஸில் இருக்கவே தாம் பிறந்திருப்பதாகவும் ஞானோதயம் உண்டாகி விட்டது! மானமுள்ள ஒரு சிலர் தவிர தமது அமைச்சரவையுடனும் எம். எல். ஏக்களுடனும் ஒட்டு மொத்தமாக இந்திராவிடம் சரணாகதி அடைந்திருக்கிறார். சமீபத்திய நாடாளுமன்ற தேர்தலில் ஜனதா தப்பித் தவறி வென்றிருந்தால் பஜன்லாலுக்கு இந்திராவிடம் இவ்வளவு பக்தி ஏற்பட்டிருக்குமா? சந்தர்ப்பவாத அரசியல் ஆபாசமெனில் இத்தகைய சந்தர்ப்பவாதிகளுக்கு இந்திரா இடமளிப்பதும் அவர்களை ஊக்குவிப்பதும் அதை விடக் கேவலம். இன்றைக்கு மாபெரும் வெற்றியாகத் தோன்றுகிற விஷயமே நாளைக்குத் தம் கட்சியைப் பலவீனப்படுத்தவும் செய்யும் என்பதை இந்திரா உணர வேண்டும். கட்சி மாறிகள் பதவியில் நீடிக்கும் போது நீண்ட கால விசுவாசிகளுக்கு ஏமாற்றம் ஏற்படும்.

உத்தரப் பிரதேச சட்டசபையில் பேச ஆளுனர் வந்த போது ஆயிரக்கணக்கான (இந்திரா) இளைஞர் காங்கிரஸ்காரர்கள் ரகளை செய்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். அவர்கள் சட்டசபைக்குள் நுழையாதிருக்க போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ய நேர்ந்திருக்கிறது. இந்த அமளி துமளிக்குத் தலைமை தாங்க சஞ்சய் காந்தி வருவதாக இருந்தது. 'வேண்டாம்' என்று தடுத்து விட்டார் இந்திரா. மகனைத் தடுத்தவர், இளைஞர் காங்கிரஸையும் நிதானிக்கச் செய்திருக்கலாம் அல்லவா? அப்படி அவர் செய்யவில்லை எனில், 'இந்திரா காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளுக்குத் தொந்தரவு தரமாட்டேன்' என்று அவர் கொடுத்த உறுதி மொழிக்கு என்ன மதிப்பு?

வேறு பல மாநிலங்களிலும் பேரம் நடக்கிறது. கும்பலாகக் கோவிந்தா போட ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

தேர்தல் முடிந்து நாடாளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றதுமே 'மாநில அரசுகளின் கதி என்ன?' என்ற கவலைதான் பலர் உள்ளங்களில் எழுந்தது. 'முன்பு ஜனதா பதவிக்கு வந்ததும் மாநில அரசுகளைப் பதவி நீக்கம் செய்யவில்லையா?' என்று விஷமத்தனமாகச் சிலர் கேட்ட போது வாஜ்பாயி தக்கபடி பதிலளித்தார். 'அன்றைய மாநில அரசுகள் பல தங்களது நியாயமான ஆட்சிக் கால வரம்பு தாண்டி ராஷ்டிரபதியின் உத்தரவுகளால்தான் பதவியில் நீடித்துக் கொண்டிருந்தன. இன்று நிலைமை அப்படியல்ல. ராஜ்ய அரசுகளின் பதவிக்காலம் முடிவுறாத நிலையில் அவை பதவி நீக்கம் செய்யப்பட்டால் நீதி மன்றத்துக்குப் போக நேரும்' என்று எச்சரித்தார்.

அதனால்தான் இந்திரா வேறு முறைகளைக் கையாள்கிறார். மாநில அரசுகளுடன் மோதும் நோக்கம் தமக்குச் சிறிதும் இல்லை என்று வெளிப்படையாகக் கூறி, தமக்கு நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டு, அதே நேரத்தில் தமது கட்சிக்காரர்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார். பல்வேறு மாநில அமைச்சரவைகளை அவர் எதற்காக டிஸ்மிஸ் செய்து சிரமப்பட வேண்டும்? அந்த அந்த அமைச்சரவைகளே இந்திரா காங்கிரஸ் அமைச்சுக்களாக மாறி விட்டால் போதாதா? இதற்கு அவரவர்க்கும் ஏதேனும் ஒரு விலை கொடுத்து விட்டால் போகிறது! அப்படி யாரேனும் வசியப்பட மறுத்தால் இருக்கவே இருக்கிறார் செல்லப்பிள்ளை. அவரது இளைஞர் காங்கிரஸும் இருக்கிறது. ஆர்ப்பாட்டங்களை நடத்தி சட்ட ஒழுங்குப் பிரச்னையைத் தோற்றுவித்து மக்களுக்கு மாநில ஆட்சி மீது அதிருப்தி ஏற்படச் செய்ய எவ்வளவு காலமாகும்? அவரது உள்நோக்கம் நமக்குத் தெளிவாகிறது.

சென்ற வாரத் தலையங்கத்தின் இறுதியில் 'பசுவின் தோலா, பசுவே தானா? மெல்ல மெல்ல மாறுவாரா?' என்று கேட்டிருந்தோம். மாறியிருக்கிறார் பிரதமர். வெளிப்பட்டிருப்பது புலி அல்ல, நரி!

புஷ்பா தங்கதுரை



கடலுக்குள் ஜ்வாலை

ஜூலியைப் புயலின் ஆரம்பங்கள் தாக்க ஆரம்பித்தன.

கேப்டன் பால்மர்ஸன் தள்ளாடி எழுந்தார். இட்டுத் திட்டாகச் சருமம் வெளிறிப்போயிருந்தது. ஈறு கொழுத்து விச்சம் அடித்தது. கால்கள் வீங்கி இருந்தன.

அவருக்கு ஸ்கர்வி பிடித்திருந்தது. துவக்கம்.

எழுந்தார். வெளியே வந்து பார்த்தார். கிளாஸை (டெலஸ்கோப்) எடுத்து ஒருவன் கொடுத்தான். ஒற்றைக்கண்ணால் பார்த்தார். கிழக்கே இருண்ட அந்தகாரம். அலைகள் பயங்கரமுடன் வீங்கி ஓடி வந்தன. கப்பல் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு!'

மீப்ரட்ரிக் டோரியின் சடலம் முன்னால் கிடந்தது.

-கம் ஆன், என்றார் உத்தியோகக் குரலில். தளர்வு காட்டவில்லை.

.....சடலத்தை எடுத்துப் போங்கள்! யார் பாய்களைக் கவனிப்பது? உடனே பாய்களை மூடுங்கள்! ராயல், டாப் காலண்ட், லோயர் காலண்ட் மூன்றையும்! சீக்கிரம் சீக்கிரம்.

தோரணை வந்த அளவுக்குச் செய்ய ஆட்கள் இல்லே.

மேலே ஏறுவது என்றால் ஆகாசத்தில் ஏறுவது போல.

அதற்கான சக்தி யாரிடமும் இல்லை. மனமும் இல்லை.

-கம்ஆன்! என்றார் உக்கிரமுடன். -தோழர்களே! நிலத்தைப் பார்த்துவிட்டு இறப்போம்! கடலில் மூழ்க வேண்டாம்.

கப்பலுக்கு மூன்று துவஜங்கள்! 23 பாய்கள்:

காற்று விசையில் மேலே ஏறுவது கடினம். பாய்களைச் சுருட்டுவதற்கு ராட்சத பலம் தேவை.

மாலுமிகளிடம் அது இல்லை.

-கம் ஆன், ஆன்ஸன், கம்ஆன் சார்லஸ்! நீங்கள் வீரமுள்ள இளைஞர்கள். சீக்கிரம்.

இளைஞர்கள் கிழவர்களாக இருந்தார்கள். பாதி மனத்துடன் திரும்பினார்கள்.

கப்பல் பயங்கரமாக ஆடியது. மேல் தளத்தில் அலைகள் பாய்ந்து ஓடின.

நான்கு பேர்கள் லொடக் லொடக் என்று நான்கு பம்புகளை அடித்துத் தண்ணீரை வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள்.

எந்த நிமிடமும் அவர்கள் வேலையை நிறுத்தி விடுவார்கள் போல இருந்தது.

எல்லோருக்கும் கேப்டன் மீது கோபம்.

கடவுளின் மீது கோபம்.

மேலே சிலர் ஏறினார்கள்.

கப்பல் மேலும் பயங்கரமாய் ஆட, அதன் பல கைகள் சத்தத்துடன் முனுமுனுத்தன.

அங்கங்கே ஆணிகள் கழல்வது போலவும் சேர்ப்புகள் உடைவது போலும் சத்தங்கள்.

காற்றின் விசை அதிகமாக,

வானம் இருட்டாக மூடி விட,

ஒரு துவஜக்கம்பத்தில் கால்வாசி ஏறிய ஒருவன் கீழே பார்த்து,-காப்டன், நீ ஒரு முட்டாள்! என்று சொல்லி, கடலுக்குள் காட்!-ஸேவ் மீ சொல்லிக் குதித்தான்.

கப்பல் உருளத் தொடங்கியது.

5

Arise, my soul, Arise.
Shake off thy guilty fears.

ஆளில்லாத் தென் அமெரிக்கத் தீவின் கரையில் தரை தட்டி உடைந்துபோன கப்பலில் எஞ்சிய கடைசி மூவர் உதவி கிடைக்காமல் பட்டினியால் இறப்பதற்கு முன் கோரஸாகப்பாடிய பாட்டு, அவர்கள் விட்டுப் போன டயரியிலிருந்தது.

நிகழ்ச்சி நடந்த கப்பல்—ஸ்பீட் வெல்,
நடந்த தேதி — 28 ஜூன் 1851

மல்லிக் காகிதத்தை விரித்தபோது. ஒரு பதினேழாம் நூற்றாண்டு ஆசியக் கடல் வெளி, சோகையான கோடுகளுடனும், பழங்காலப் பூவேலை ஆங்கில எழுத்துக்களுடனும் தெரிந்தது. ஆப்பிரிக்கா, அடி குறுகி, தலை பருத்து இருந்தது. இலங்கை ஒரு போண்டா! இந்தியா ஒரே ஒரு நதியுடன் கூடிய கைசூப்பி விரல்!

படம், மற்றொரு காகிதத்தின் மீது ஒட்டிக் கொண்டு இருந்தது.

படத்தின் பழமையைப் பார்த்ததும் கோபியின் மனம் மல்லிக்குக்கு ஒரு சபாஷ் போட்டது.

—எங்கேடா கிடைச்சது?

—மூர் மார்க்கெட்தான்டா! தேடறதுக்குத் தனிக் கண் வேணும்.

படம் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் உற்பத்தியாகி, நெடுந் தொலைவு காலத்திலும் இடத்திலும் கடந்து ஒரு தற்காலப் பிரஜையின் கையில் இருக்கிறது. அப்படி நினைக்கும்போது கோபியின் மனம் குளிரிட்டது. படத்தை லேசாகத் தொட்டான். அதன் மூலம் ஒரு பழைய காலத்தைத் தொட்டது போல உணர்ச்சி!

—இந்த அரை குறை பூகோளப் படம்தான் அந்தக் காலத்திலே புழங்கியது! இதப் பாரு! இப்படித்தான் ஜூலி வந்தா.

நீளமான விரலை இங்கிலாந்திலிருந்து இழுத்து மடீரா வழியாக ஆஃப்ரிக்கா மண்டையைத் தாண்டி செயிண்ட் ஹெலினாவில் வந்து நிறுத்தினான். சுற்றிச் சூழ அட்லாண்டிக் கடல்.

—ஏண்டா நடுக் கடல்லே நிக்கறே!

—ஹெலினாத் தீவுடா! இதுவரைக்கும் ஜூலி வந்ததா ரிக்கார்ட் உண்டுடா!

—அப்புறம்?

அப்புறம் எங்கே போனா தெரியாது. அமெரிக்கா பக்கம் போயிட்டதுன்னு சில பேர் சொன்னாங்க! மடகாஸ்கர் வரை போய் அங்கே கடற்கொள்ளைக்காரங்க கிட்டே அகப்பட்டதுன்னு சிலபேர் சொன்னாங்க! ஆக மொத்தம் கப்பல் இந்தியா வந்து சேரலைன்னு நம்பிக்கை.

—உனக்கு மட்டும் ஞானோதயம் ஏற்பட்டதாக்கும்?

—ஞானோதயம் இல்லேடா! குருட்டு அதிர்ஷ்டம்!

—எப்படிச் சொல்லு!

—சொல்றேன். ஜூலி போன திசையைப் பாரு. இப்படிக் கீழே இறங்கி...

ஆஃப்ரிக்காவின் தென் மூலையைத் தாண்டி, மடகாஸ்கர் கீழே வழியாக மோரிஷியஸில் வந்து நின்றான். சுற்றிவர இந்திய மகா சமுத்திரம் அலை மோதியது.

—இங்கே வந்ததா? (கோபி)

—ஆமாங்கறேன்.

—என்னடா ஆதாரம்?

—காரைக்கால் கலியபெருமாள் டயரிடா!

தலை சுற்றியது: —யார்ரா அது கலிய பெருமாள்?

மல்லிக் நிமிர்ந்தான். —ஒரு கங்காணி. பத்தொன்பதாம் நூற்றாண்டு முன் பகுதியிலே வாழ்ந்தாரு. ஆனந்தரங்கம் பிள்ளை மாதிரி அவருக்கும் கியாதி அடையணும்னு ஆசை. மோரிஷியஸ் தீவிலே இருந்தப்போ டயரி எழுதினாரு.

—அந்தத் தீவுக்குப் போனாரா?

—1835லே போனாரு. கரும்புத் தோட்டத்திலே கங்காணியா. பணம் சம்பாதிச்சு பெரிய மனுஷனாகி போர்ட் லூயியிலே பங்களா கட்டி வாழ்ந்தாரு. இருபது வருஷமா டயரி எழுதினாரு.

—அந்த டயரி உனக்குக் கிடைச்சதா?

—ஆமாம்.

—யாரிட்டே ரீல் விடறே?

—ரீல் இல்லே, பாருடா மக்கு!


சடங்குகள் செய்து எடுப்பது போல் ஒரு துணிப் பையுள் கைவிட்டு அட்டை போன பழங்காலப் புத்தகத்தை சர்வ ஜாக்கிரதையாக எடுத்தான். —இதப் பார்ரு!

பார்த்தான்.

சென்னை கோமளீஸ்வரன் பேட்டை சுந்தர மனமோகன விலாசத்தில் 1888ல் அச்சிடப்பட்டிருந்தது. அரங்கசாமிப் பெருமாளால் பிழையற பரிசோதிக்கப்பட்டிருந்தது. அதன் தலைப்பு.

பிரத்தியேகமான
காரைக்கால் கலியபெருமானார்
தினப்படி சேதி குறிப்பு
சொஸ்த லிகிதம்

பிரித்தால் தான் பொடியாகும். பூப் போலப் பிரித்தான்.



ஐப்பசி பீ 30க்கு நொவம்பர் பீ 11வ சோமவாரம் (நொவம்பர் — பிரஞ்சு உச்சரிப்பு)

....இற்றை நாள் காலையில் முக பிரக்ஷணம் பண்ணிக் கொண்டு பழயது சாப்பிட்ட பிறகு....

கோபிக்கு அந்த வார்த்தைகளும், புத்தகத் தோற்றமும் ஒரு மந்திரப் பிரயோகம் போல வேலை செய்தன.

அவற்றில் அமானுஷ்யமாக ஏதோ இருப்பதுபோல் நினைத்தான். உற்சாகமாகவும் திகிலாகவும் இருந்தது.

—ஏண்டா! உன்னை என்னமோன்னு நினைச்சேன். பெரிய ஆளா இருக்கியே! இன்னும் என்னெல்லாம் சேர்த்து வச்சிருக்கே!

—நிறைய இருக்கு. போகப் போகக் காண்பிக்கிறேன்.

—இந்தப் புஸ்தகம் எங்கே வாங்கினே?

—நீ சொன்னா நம்ப மாட்டே! மயிலாப்பூர் கோவில் வாசல்லே.

கோபியின் மூக்கில் விரல் வைத்தது வைத்தபடி!

—சரி, நம்ப ஆராய்ச்சியைக் கவனி. உலகத்திலே யாருக்கும் தெரியாத சமாசாரம் எனக்குத் தெரிஞ்சிருக்கு. அது ஒரு அதிர்ஷ்டம்டா!

கோபிக்கு எச்சில் ஊறியது.—சொல்லுடா!

—கோபி! கோடிக் கணக்கான மதிப்புள்ள தங்கம், வெள்ளியோடு ஜூலி மறைஞ்சு போயிட்டா! பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் அதைத் தேடிக் கைவிட்டாச்சு. புதையலைத் தேடி அலைவாங்களே, அவங்க நூறு வருஷமா ஜூலியைத் தேடி அலுத்தாச்சு! லாயிட்ஸ் ரிஜிஸ்டர் ஆஃப் ட்ரெஷர் ஷிப்ஸ்லே, ஜூலி தீர்மானமாக் கிடைக்கவேயில்லேனு எழுதியாச்சு. இந்த நேரத்திலே ஜூலி இருக்கிற இடம் எனக்குத் தெரிஞ்சுபோச்சுடா!

கோபிக்கு கார்ட்டர் போல் வாயெல்லாம் பல்! —சரி, விட்ட குறைக்கு வாடா! என்று இழுத்தான்.

—வர்றேன். கனியபெருமாள் டயரியிலே ஜூலை மாசக் கடைசி வாரத்திலே ஒரு செய்தி இருக்கு! வாசிக்கிறேன் பாரு!

....வெல்லச் சிப்பம் கொண்டு போன தோணிகள் புயலிலே அலமாந்து போக, நயினாரப்பன் தோணி தாறுமாறாகப் போய்க் கடலிலே வெகு தூரம் போய்விட, அவ்விடத்திலே மழை அடிச்சடடியினாலே எல்லாமே மூடி திசை தெரியாமல் போனவாறே நயினாரப்பனும், தோணியாட்களும் விசனப்பட்டுக் கொண்டு இருக்க, மற்றைய நாள் விடிந்தவாறே நாலு நாழிகைக்குப் பின்னாலே வானம் வெறிச்சு எல்லாம் நல்லபடியாச்சு. அந்த வேளையிலே ரொம்ப சமீபத்திலே ஹெச். எம். எஸ். ஜூலிகா பெயரோடு ஒரு கப்பல் வடகிழக்கு நோக்கி ஓடிப் போனதாகவும், அதன் பாய்மரம், துவஜஸ்தம்பம், சுக்கான் எல்லாம் பழுதுபட்டுப் போனதாகவும், ஆள் இல்லாக் கப்பல் போல அது இஷ்டப்படி போனதாகவும் பார்த்து என்னிடம் வந்து சேதி சொன்னான். கப்பலிலே எந்தச் சீமான்கள் போனார்களோ, என்னென்ன கஷ்டப்பட்டார்களோ....

மல்லிக் இனப்படி சேதியை முடிஞன். —இந்த விஷயம் யாருக்கும் தெரியாத ஒரு சேதிடா! தமிழ்ல ஒருத்தர் எழுதினதாலே, நமக்குத் தமிழ் தெரியறதுனாலே இந்த விஷயம் நமக்குத் தெரிஞ்சது. அதாவது மோரிஷியஸ் பக்கம் வழியாக வடகிழக்காலே ஜூலி போயிருக்கா!

கோபிக்கு விஷயம் சுறுசுறு என்று பற்றியது.

உண்மையிலேயே உலகத்தில் யாருக்கும் கிடைக்காமல் மறைந்த ஒரு மாபெரும் ரகசியம் அவர்கள் கையில் சிக்கி விட்டதா?

உச்சி குளிர, —அப்போ கப்பல் மோரிஷியஸுக்குப் போகல்லேயா? என்று கேட்டான்.

—ஆமாம். அதன் மடியிலே கனம் இருந்தது. மோரிஷியஸ்லே பிரஞ்சு அனுதாபிங்க நிறைய! அங்கே போனா ஆபத்து! அதுனாலே நேரே இந்தியா நோக்கிப் போயிருக்கு.

கோபிக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது.

—இன்னொரு விஷயம்! இந்த டயரி சமாசாரம் மேனாட்டுக்காரன், யாருக்காவது தெரிஞ்சா, இந்நேரம் இந்திய சமுத்திரத்தைச் சலித்து எடுத்திருப்பான்.

—சரி, ஜூலி அங்கிருந்து நேரே இந்தியாவுக்கு வந்ததுக்கு என்ன சாட்சி?

—எறும்புக் கூடுடா! பாட்டு! டெலஸ்கோப், எழுத்து! இதை வச்சுத்தான் இந்தியாவரை அந்தக் கப்பல் வந்திருக்குன்னு தீர்மானம் பண்ணிட்டேண்டா!

மூட்டை கட்டி எழுந்தான் மல்லிக். —இப்போ சொல்லு என்னோடு கனிதாகலாபுரம் வர்றியா, இல்லையா?

சிட்டி சிட்டி பாங் பாங் என்று தாராளப் புகை விட்டு ஓடியது சல்தி கா நாம் காடி!

கிராமப்புறம் நடுங்கிக்கொண்டு இரண்டு புறமும் வழிந்தது.

மெக்கானிகல் சல்லடையில் பண்டங்கள் அகப்பட்டாற் போல் பிரயாணிகள் கிடுகிடுத்தார்கள்.

க்வாங் க்வாங் என்று உயிரை விட்டு ஹாரன் ஓரம்போ பாட, இரண்டு பக்கப்

உணவுப் பொருட்கள் அடைத்து வந்த டின்களைத் தூக்கி எறிவதால் சுற்றுப்புறம் அசுத்தமாகிறது. இதைத் தடுக்க ஓர் அமெரிக்க விஞ்ஞானி சாப்பிடக் கூடிய 'டின்'களைக் கண்டு பிடித்திருக்கிறார்! உணவுப் பொருட்களோடு இந்த 'டின்'னையும் சாப்பிட்டு விடலாம்!

காரவானிலிருந்து —கோ. தீபா



பறுதாக்கள் கிறகடிக்க, நாட்டுப்புற அமைதியைக் கடகட என்று பெயர்த்துக்கொண்டு ஒரு விசித்திரப்பிராணி போன்று பஸ் ஓடியது. நடன சபாபதி சர்வீஸ்.

கோபி தாங்கிக் கொண்டிருக்க, மல்லிக் எதிரே இருக்கும் இருவரின் தோள்களுக்கு இடையே, அதற்கு அப்பால் உள்ள ஸீட்டில் அடிக்கடி தெரிந்து கொண்டிருக்கும் புதிரான பெண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தெரிந்து கொண்டிருக்கிறாளா, தெரிய வைத்துக் கொண்டிருக்கிறாளா?

கண்ணில் நம்பகமுள்ள மினிர்வைக் காட்டி இடையே துளியான புன்னகையைச் சொட்டுகிறாள்.

அவளது கறுப்பு ஒரு பழக்கமில்லாத கறுப்பாக இருந்தது. அசல் நாட்டுப்புறமோ? இல்லை; நெற்றியில் படிப்பு இருந்தது. ஸ்கை-புளூ பாலியெஸ்டர் ஸாரியும், சோளியும் அவளை உயர் வர்க்கத்துக்கு இழுத்தன.

கழுத்துக்குக் கீழ் எப்படி இருப்பாள் என்று பார்க்க அடங்காத அவா. ஆனால் ஸீட் மறைத்தது.

இடையில் பஸ் ஏதோ ஒரு சாவடியில் நிற்க, பிரயாணிகள் கீழே உதிர்ந்தார்கள்.

பலர் பக்கத்திலிருந்த மேட்டில் ஏறி வாய்க்கால்களைத் திறந்துவிட,

பலர் இளநீர்க்காரியைச் சுற்றி மொய்த்தார்கள். 'இளநி இளநி' என்று இரண்டு சின்னவர்கள் அந்த சினிமா —இருபொருள் பாட்டைப் பாட, இளநீர்க்காரிக்கும் அந்த அசப்புத்தான்!

இளநீரைப் பெற்று ஸ்ட்ராவுடன் வெளிவர, கறுப்புப் பெண் டக்கென்று நின்றாள். கறுப்பு சொன்னால் ரோஸ்வுட் கறுப்பு. பழபழவென்று மினுக்க, கறுப்பு மார்பிளில் கடைந்தது போல.

உடம்பு ஒரு தேகாப்பியாச வனப்பைக் காட்டியது. வைரமான நெஞ்சுகள். இடுப்பு இரும்பான வார்ப்பு. தசைகள் முறுகிய மெழுகு போல் மெழுகிக் கீழே வழிந்தன.

தேகம் பார்த்த இடமெங்கும் குறுகுறுவென்று அழகும் ஆரோக்கியமும்.

இளநீரை முழுவதுமாக உறிஞ்சு முன் இருமுறை பார்க்க, இரண்டாவது முறையில் அவன் அவன் பார்வைக்குப் பதில் கொடுத்தாள்.

ஐந்து நிமிடத்தில் எல்லாச் சிதறல்களையும் சேர்த்து பஸ் ஏக ரூபமாகிப் புறப்பட,

மீண்டும் நாட்டுப் பாட்டையிலே சிட்டி சிட்டி, பாங், பாங்!

தென்னை வரிசைகள் வந்த பிறகு, கண்டக்டர் உச்சமாக, ரங்கூன் பங்களா என்று கத்தினான்.

பஸ் உதறல்களைக் குறைத்து, சீக்கிரம் அடங்கி, பெட்ரோல் சாப்பிடாமல் கொஞ்ச தூரம் ஓடி நின்றது.

அந்தப் பெண் இறங்கினாள்.

இரண்டடி தள்ளிப் போனதும் திரும்பி முழுசாக ஒரு பார்வை அவன் மீது அழுத்தினாள். இதயம் இறக்கை அடித்தது.

பஸ் மீளவும் புறப்பட்டது. டீசென்று அது நிற்க வெளியே போனிசார்கள்.

(தொடரும்)

ஆர்.எஸ்.எஸ்

தேவரஸிடம் சில கேள்விகள்!



ஆர். எஸ். எஸ்ஸின் அகில பாரத தலைவரான திரு பாளா சாகேப் தேவரஸ் தமிழக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். அவரிடம் ஆர். எஸ். எஸ்ஸின் நோக்கங்கள் பற்றிக் கேள்விகள் எழுப்பிய போது:

கேள்வி: பெரும்பான்மையான மக்களால் ஆர். எஸ். எஸ் ஒரு ராணுவ ரீதியான (Para-military) இயக்கம் என்று கருதப்படுகிறது. இம்மாதிரி செயல்படுவது நாட்டு நலனுக்கு எதிரானது என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

திரு தேவரஸ்: ஆர். எஸ். எஸ். மீது குறை காண வேண்டும் என்று எண்ணுபவர்கள் சாட்டும் அர்த்தமற்ற குற்றச்சாட்டாகும் இது. ஆர். எஸ். எஸ். ஸ்வயம்சேவகர்கள் சீருடை அணிந்து ஆரம்பநிலை உடற்பயிற்சி செய்வதுதான் அவர்கள் இம்மாதிரி குற்றம் சாட்டுவதற்கான ஒரே ஆதாரமாகும். ஹிந்துஸ்தான் சேவாதளம், காங்கிரஸ் சேவா தளம், ராஷ்ட்ர சேவா தளம் போன்ற தன்னார்வ முனைப்பாக இயங்கும் பல அமைப்புகள் இம்மாதிரிச் சீருடை அணிந்து உடற்பயிற்சிகள், அணிவகுப்புகள் நிகழ்த்தத்தான் செய்கின்றன. மக்கள் மத்தியில் ஒழுங்கு முறை சகோதர மனப்பான்மை ஆகியவற்றை வளர்க்கப் பல நாடுகளிலும் இம்மாதிரியாக அடிப்படைப் பயிற்சிகளை மக்கள் மேற்கொள்வதுண்டு.

கேள்வி: தன்னை மதசார்பற்றதாக ஆர். எஸ். எஸ் கூறிக் கொள்கிறது. ஆனால் ஆர். எஸ். எஸ்ஸின் முன்னாள் தலைவரான திரு கோல்வல்கர் முஸ்லிம்களும் ஸ்ரீராமரைத் தங்களது தலைவராக ஏற்றுக் கொண்டால், மத சார்பான பிரச்னைகள் எல்லாவற்றிற்கும் தீர்வு கிடைத்துவிடும் என்று கூறியுள்ளாரே?

திரு தேவரஸ்: ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு புராதன சரித்திரம் உண்டு. பாரத நாட்டுக்கும் பல்லாயிரம் ஆண்டு காலம் கொண்ட ஒரு பெருமை வாய்ந்த சரித்திரம் உள்ளது. வீரம் மிக்க தங்களது மூதாதையரின் பெருமையை அறிந்து புகழ் பாடுவது எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும் பொதுவானது. இதனை மதசார்பானது என்று மட்டம் தட்டுவது சரியாகாது. ஷோரப்பும், ருஸ்தும் இஸ்லாம் தோன்றுவதற்கும் முன்பானவர்களாயினும், இரானிய முஸ்லிம்கள் ஷோரப்பையும் ருஸ்துமையும் தங்களது தேசியத் தலைவர்களாக இன்றைக்கும் போற்றுகிறார்கள். இங்கிலாந்தைத் தங்கள் தேசமாகக் கொண்டு நிரந்தரமாகத் தங்கிவிட்ட ஜெர்மானியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் நெல்சனையும், வெல்லிங்டனையும், ஏன் சர்ச்சிலையும் கூடத் தங்களது தேசத்தைக் காத்த தலைவர்களாகக் காண்பது இன்றும் கண்கூடு. ஏன் பாகிஸ்தானியர் தங்களது தேச சரித்திரத்தை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கொண்டு போய் பாணினியைத் தங்களது மூதாதையராகக் கொள்வதையும் காண்கிறோம். இப்படி இருக்க, நமது நாட்டில் உள்ள இஸ்லாமியர்களிடம், உலகெங்கும் உள்ள நியதி போல், ஸ்ரீராமரையும், ஸ்ரீ கிருஷ்ணரையும் தங்களது மத போதகராக இல்லாவிடினும் கூடத் தேசத் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளும்படி கூறுவது தர்க்க ரீதியாகவும், தேச ஒற்றுமை அடிப்படையிலும் மிகச் சரியானதுதான்.

கேள்வி: தென்னிந்தியாவில், ஆர். எஸ். எஸ். 'ஓர் உயர் ஜாதி ஹிந்துக்கள் அமைப்பு' என்றதோர் அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகிறது. இதில் ஓரளவு உண்மை உள்ளது என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

திரு தேவரஸ்: இந்த அபிப்பிராயம் முழுமையாக ஆதாரமற்றதாகும். ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகளில், எல்லா ஜாதி மதத்தினரும், எல்லா மட்டத்தினரும் பங்கு கொள்கின்றனர். ஆர். எஸ். எஸ்.ஸின் கிளைகள் கிராமங்கள், காட்டு பிரதேசங்கள், நகரங்களில் குடிசைப் பகுதிகள் உட்படப் பல இடங்களில் பல ஆயிரக்கணக்கில் பரந்து கிடக்கின்றன. கிராமங்களிலும், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் மிகக் குறைந்த அளவே உயர்ஜாதி ஹிந்துக்கள் என்று பேசப்படுபவர்கள் இருப்பார்கள். நீங்கள் குறிப்பிட்டது போன்ற ஓர் அபிப்பிராயத்தை வேண்டுமென்றே, சுய ஆதாயத்திற்காகச் செயல்படுவோர் கிளப்புகின்றனர் என்பது எனது அனுமானம்.

கேள்வி: ஜனசங்கம் ஜனதாவுடன் ஐக்கியமான பின்பும் ஆர். எஸ். எஸ்.ஸுடன் இணைப்புகள்

வைத்திருந்தது ஜனதா அரசு கவிழ ஒரு காரணமானது. இரட்டை அங்கத்தினர் பிரச்னைக்கு இடம் தந்தது தேச நலனுக்கு உகந்தது அல்ல தானே?

திரு தேவரஸ்: ஜனதா கட்சியில் ஆதிக்கம் செலுத்த வேண்டும், அல்லது அதனை அழிக்க வேண்டும் என்று விரும்பிய சக்திகள் எழுப்பிய விஷமத்தனமான கூச்சல் இது என்று சமீப காலத்திய நிகழ்ச்சிகள் உணர்த்தியுள்ளனவே! ஆர். எஸ். எஸ். — ஜனசங்கம் தொடர்பான பிரச்னை என்று பேசப் படுவதெல்லாம் உண்மையான பிரச்னையல்ல, என்று மொரார்ஜியும், சந்திரசேகரும் அடிக்கடி வலியுறுத்தியது அனைவருக்கும் தெரியுமே!

கேள்வி: சில மாதங்களுக்கு முன்பு, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வாஜ்பாய், ''ஆர். எஸ். எஸ். தனக்கு அரசியலில் எவ்வித எதிர்பார்ப்பும் கிடையாது என்பதை இன்னும் தெளிவாக உணர்த்தும் பிரயாசைப்படவேண்டும்'' என்று கூறினாரே. அவர் இம்மாதிரி கூறக் காரணம் என்ன?

திரு தேவரஸ்: ஆர். எஸ். எஸ். ஸ்வயம் சேவகர்கள் தங்களது நோக்குகளையும், கருத்துக்களையும் கூறப் பூரண சுதந்திரம் பெற்றவர்கள். வாஜ்பாயியும் தமது சொந்த அபிப்பிராயத்தைத் தான் கூறியிருக்க முடியும். அம்மாதிரி அவர் எதனால் கூறினார், எவை அதற்குக் காரணமாக அமைந்தன என்பதை வாஜ்பாய்தான் கூற முடியும். அரசியலில் இருப்பவர்களுக்குத் தமக்கே உரித்தான நிர்ப்பந்தங்கள் இருக்குமல்லவா?

கேள்வி: 'ஹிந்து ராஷ்ட்ர'வின் விளக்கம் என்ன? 'ஹிந்து ராஷ்ட்ர'வைத் தோற்றுவிக்க முயல்வதின் நோக்கம் என்ன? இது ஒரு குறுகிய மனநோக்குள்ள செயல் என்று ஒப்புக் கொள்கிறீர் களா?

திரு தேவரஸ்: 'ஹிந்து ராஷ்டர'வைப் பற்றிப் பேசுவது நாங்கள் மட்டுமல்ல, நாங்கள்தான் முதன் முதலாகப் பேசுகிறோம் என்பதுமல்ல. ஸ்வாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்த மகரிஷி, லோகமான்ய திலக் போன்றவர்களும் நமது நாட்டை 'ஹிந்து ராஷ்ட்ர' என்று குறிப்பிட்டதுண்டு.

நமது தேசிய அமைப்பைக் குறிப்பிடுவோரில் இரு வகையானவர்கள் உண்டு. ஆரம்பத்தில் நமது நாட்டில் தேசிய மனநோக்குடனான வாழ்க்கை இல்லை என்றும், பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் குடியேறிய பிறகுதான் நமது நாட்டில் தேசிய மனப்பான்மை உண்டானது என்பதும் ஒரு சாராரின் கருத்து. தனக்கான கலாசாரம் வழிமுறைகள், ஆதர்ச வாழ்வு அமைப்புகள் கொண்டு, தேசிய மனநோக்குள்ள வாழ்க்கையுடன் பாரதம் ஆயிரக்கணக்கான வருடங்களாக இருந்து வருகிறது என்பது இரண்டாம் சாராரின் கருத்து. ஆர். எஸ். எஸ்ஸில் உள்ள நாங்கள் இரண்டாம் சாராரின் கருத்தை ஒப்புக் கொள்பவர்கள். இக் கருத்து ஒப்புக் கொள்ளப் படுமானால் 'ஹிந்து 'ராஷ்ட்ர' என்பது நமது புராண தேசிய வாழ்க்கையைப் பிரதி பலிப்பதாக உள்ளது. ஆர். எஸ். எஸ் கூறும் ஹிந்து ராஷ்டிர, எனும் நோக்கு எல்லா மதத்தினருக்கும் பொதுவானது. இங்குள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லா விதத்திலும் ஹிந்துக்களுடன் சமமானவர்கள். எல்லோர் உடலிலும் ஒரே ரத்தம்தான் ஓடுகிறது. எல்லோருடைய மூதாதையரும் வித்தியாசமில்லாதவர்கள்தான்! மாறுபட்ட மத நம்பிக்கை கொண்டிருப்பதனால் மட்டுமே ஒரு நாட்டைச் சேர்ந்தவர்களின் கலாச்சாரமும், தேசியத் தன்மையும் மாறுபடுவதில்லை.

கேள்வி: ஆர். எஸ்: எஸ்ஸின் போதிய ஒத்துழைப்பும் உற்சாகமான பங்கேற்பும் சமீபத்திய பொதுத் தேர்தலின்போது கிட்டாதது ஜனதா தோல்வியுற்றதற்கான காரணங்களில் ஒன்று என்று ஜனதா கட்சிக்காரர்களிடையே பரவலாக ஓர் அபிப்பிராயம் நிலவுகிறதே, இதைப்பற்றி ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?

திரு. தேவரஸ்: நமது நாடும், ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் 1977ல் தேர்தல்கள் நடந்த போது அசாதாரணமானதும் மிகவும் முக்கியமானதுமான ஒரு கால கட்டத்தில் இருந்தன. ஜனதா கட்சிக்குத் தான் ஒத்துழைப்புத்தர வேண்டிய சூழ்நிலையில் அப்போது ஆர். எஸ். எஸ். ஸ்வயம் சேவகர்கள் இருந்தனர். ஆனால் சாதாரண சமயங்களில் தேர்தலுக்காக வேலை செய்வது என்பது ஸ்வயம் சேவகர்களின் மனநோக்கிற்கோ, செயல் சித்தாந்தத்திற்கோ பொருத்தமாகாது. 1977-78ல் நடந்த சட்டசபைத் தேர்தல்களின் போதே இக்கருத்தை நான் திட்டவட்டமாகக் கூறியுள்ளேன். சமீபத்தில் முடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னும் எனது இக்கருத்தை வலியுறுத்தியுள்ளேன். ஜனதா கட்சி தேர்தலில் அடைந்த தோல்விக்கும் ஸ்வயம் சேவகர்களின் செயல் முறைக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஜனதா கட்சி தோற்றதற்குக் காரணம் அவர்களிடையேயான உட்பூசலும், மக்கள் மனத்தில் ஜனதா பற்றி இருந்த மதிப்பை அவர்களே பாழ்படுத்திக்கொண்டதுமாகும்.

கேள்வி: திருமதி இந்திரா காந்தி தலைமையிலான அரசைக் குறித்து ஆ. எஸ். எஸ்ஸின் நோக்கு எவ்விதம் இருக்கும்?

திரு தேவரஸ்: மக்கள் பலம் வாய்ந்த, நிலையான மத்திய அரசு ஏற்பட வாக்களித்துள்ளனர் என்பது எல்லோரும் அறிந்ததே. மக்கள் எவ்வித சந்தேகமுமற்ற ஆணை வழங்கியுள்ளனர். இதனை மனமார ஏற்றுக்கொண்டு, தற்போது ஆட்சிக்கு வந்துள்ளவர்களைத் தங்களுக்கு அளிக்கப்பட்ட கால அளவு வரை ஆட்சி புரிய அனுமதிக்க வேண்டும். இதற்கிடையில் மற்ற கட்சிகள் தங்களுக்கான சமூக, பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு, கட்சி ஊழியர்களைப் பெருக்கி, அடுத்த தேர்தலில்தான் மக்களின் ஆணையைப் பெற முயல வேண்டும்.

பேட்டி: பி. ரங்காயனி

மறு நாட் காலை. முத்துமாரியின் தீமிதித் திருவிழா. முதல் நாள் இரவே திருநெல் லூரின் சுற்றிலுமிருந்த பல கிராமத்து மக்கள் விழாவில் கலந்துகொள்ள வந்து காவேரிக் கரையிலே இரவு முழுவதும் தங்கிவிட்டிருந்தனர். விடியு முன்பே ஊர் மக்களும் அங்கே வந்து சேர்ந்து கொண்டதும் ஆற்றங் கரையிலே திரளானதொரு பெரிய கூட்டம்.

கோயில் நிர்வாகிகள் மாரியம்மன் கோயி லுக்கு முன்னிருந்த திறந்த வெளியில் வெட்டப்பட்டுத் தயாராக இருந்த குழிக்குள் விடியு முன்னரே கட்டைகளைப் போட்டு எரித் துத் தணலாக்கிக் குவித்து வைத்திருந்தனர். அதை ஒட்டி சதுர வடிவில் ஒரு முழ ஆழத் துக்கு அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் பூசிய பால் குழியையும் கழுவித் துடைத்து அதில் சிறிதளவு நீர் நிரப்பித் தயாராக வைத்திருந் தனர்.

முத்துமாரியின் உற்சவ விக்கிரகத்தைப் பக்தர்கள் சுமந்துகொண்டு வந்து ஆற்றங் கரையின் அருகே இருந்த அரச மரத்து மேடை மீது வைத்து விட்டிருந்தனர். சூரியன் உதிக்கு முன்பே காவிரியில் தலை முழுகி மஞ்சள் ஆடை உடுத்தி—மஞ்சள் மலர் மாலை அணிந்து கொண்டு தீமிதிக்குப் பக்தர்கள் தங்களைத் தயாரித்துக் கொண்டு விட்டனர். அத்துடன் தாங்கள் பூக்குழியில் இறங்கும் போது தாங்கிக் கொண்டு வரப் போவதாகப் பிரார்த்தனை எடுத்துக் கொண்டபடி பால் காவடிகள், கரகங்கள், பால் குடங்கள், அக் னிச் சட்டிகள் இத்யாதிகளைத் தயாரிக்கத் தொடங்கினர்.

ஒரு மண்டலம் கடும் விரதம் இருந்த பூசாரி இளைத்துக் காய்ந்த குச்சி போலாகி விட்டிருந்தார். மஞ்சள் வேட்டியும் மாலையு மணிந்து நெற்றியில் பட்டையாக விபூதி யும் நடுவே குங்குமமும் தரித்துக்கொண்டு அவர் பூஜைக்கு ஆயத்தமாகி விட்டிருந்தார்.

சூரிய உதயத்துடனே உற்சவ விக்கிரகத் துக்கு அபிஷேக ஆராதனைகள் விமரிசை யாக நடந்தேறின.

சிவப்புப் பட்டுச் சேலை உடுத்தி, செவ் வரளி மலர் மாலை சூடி, செக்கச் செவே லென்று குங்குமம் நெற்றியில் துலங்கத் தங்கக் கிரீடமும் காசு மாலை, ஒட்டியாணமும் தகதகக்க தேவி அலங்கார நாயகியாகக் காட்சி தந்ததைக் கண்டு பக்தர்களிடையே பரவச ஆரவாரம்.

கற்பூர ஜோதியை அம்மன் திருமுகத் தருகே பூசாரி சுழற்றியதை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற காமேஷ் மெய் சிலிர்த்துப் போனான்.

நாதஸ்வரம் இசைக்க—பக்தர்கள் சுமக்கப் பவனி புறப்பட்ட முத்து மாரியின் அலங் காரக் கோலத்தைக் கண்டு ஆனந்தப்பட்டு அழுத பக்தர்கள் சிலருக்கு ஆவேசம் வந்து விட்டது. இரண்டு பெண்கள் மயங்கி விழுந் தனர். குழந்தைகள் மகிழ்ச்சியில் கூச்ச லிட்டனர்.

கரகம் எடுத்தவர்கள் முன்னால் ஆடிக் கொண்டு நடக்க, சிலம்பம் ஒலிக்க, தாரை தம்பட்டங்கள் சப்திக்க, பக்தர்கள் தேவியின் துதி பாட, முத்துமாரி ஊர்வலமாக ஆற் றங்கரையினின்று புறப்பட்டாள்.

அந்தச் சில கிலோமீட்டர் தூரம்வரை பக்தர்கள் பின்னால் கோஷமிட்டுப் பாடி ஆடிக்கொண்டு வந்த அதிசயத்தைக் கண்ட காமேஷ் அயர்ந்து போய்விட்டான்.

நகரத்து நாகரிக வாழ்விலே நாட்டமாக இருந்தவன். — நம்பிக்கைகள் ஏதுமின்றி ஒட்டாது போலியாக வளைய வந்துகொண் டிருந்தவன் அவன். ஆயிரத்துக்கு மேல் திரண்டு வந்திருந்த கிராமத்து மக்களின் முகத்திலே பரவி நின்ற பரவசத்தை வியப் போடு பார்த்தான்.

இத்தனை பேருக்குள்ளும் ஏதோ ஒரு நம் பிக்கை இருக்கவேதானே இங்கே கூடி யிருக்கிறார்கள்?

பக்திக்கும் அன்புக்கும் அடிப்படையான உணர்வுதானே நம்பிக்கை...

இரவு முழுவதும் அடிவயிற்றைப் பிசைந்த திகில் உணர்வு கரைந்து மனத்துக்குள்ளே தானே ஒரு தெம்பு மெல்ல மெல்ல உரு வாகிப் பலப்படுவதை அவன் புரிந்து கொள்ள முடிந்தது.

திரும்பிப் பார்த்தான். அவன் அண்ணி அகல்யா மஞ்சள் புடவையை இறுக்கமாக இடையில் தார் பாய்ச்சி உடுத்திக் கொண்

பூக்குழி

லக்ஷ்மி





டிருந்தாள். பொன்னாக மின்னத் தேய்த்து மஞ்சள் குங்குமப் பொட்டு வைத்து, கூழைப் பசுவின் பாலை நிறைத்து எடுத்து வந்த பால் குடத்தைத் தலையில் சுமந்து கொண்டு நெற்றியில் குங்குமம் துலங்க உற்சவ விக்கிரகத்தின் பிரதி பிம்பமாகப் பக்தி பரவசத்துடன் பாடியபடி நடப்பதைக் கண்ட போது அவனுள் இருந்த பயம் வேகமாகக் கரையத் தொடங்கியது.

அண்ணி அகல்யாவும் தீக்குழியில் முதல் முதலாகத்தான் இறங்கப் போகிறாள். அவளுக்கு இருந்த துணிவும் நம்பிக்கையும் ஆண் பிள்ளையான அவனுக்கு இல்லாவிடில்?


அண்ணி சொன்னது போல் அவனது மனத்தைக் கவ்விக் கொண்டிருந்த மாசு படிந்த எண்ணங்கள்.... அம்பாளின் பூக்குழியில் பொசுங்கிப் பொடியாகிப் போகட்டும்......

தன்னுள் எண்ணிய மாத்திரம் அவனுக்குத் திடீரென்று ஆவேசம் வந்ததைப் போன்ற தெம்பும் துணிவும் ஏற்படவே...

முத்துமாரிக்கு ஜே... முத்துமாரிக்கு ஜே... கத்திக்கொண்டே பின்னால் நடந்தான்.

ஊர்வலம் கோயில் வாசலை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் ஆலயத்தின் நிர்வாகிகள் பரபரத்தனர். முன்னாடியே எரித்துக் கனலாகக் குவித்து வைத்திருந்த நீறு பூத்த நெருப்பைக் கிளறி விட்டுக் குழி முழுதும் பரத்தி விட்டனர்.

அன்னையின் அருளை வேண்டிக் கொண்டிருந்த பக்தர்கள் தங்கள் கையிலிருந்த சொம்பிலும் வெண்கல டம்ளரிலும் பத்திரமாக நிறைத்துக் கொண்டு வந்திருந்த பசும் பாலைப் பால் குழியிலே ஊற்றி நிரப்பத் தொடங்கினர். உற்சவ விக்கிரகத்தைச் சுமந்து வந்தவர்கள் பால் குழிக்கு முன்னால் அமைக்கப் பட்டிருந்த மேடை மீது அம்மனை நிறுத்தி வைத்தனர்.



எதிர்ப் புறத்திலே தீமிதிக்க வேண்டிக் கொண்டிருந்தவர்கள் மற்றும் வரிசையாக ஒழுங்காகப் பூசாரிக்குப் பின்னால் கரகங்கள்—பால் குடங்கள் முதலியவற்றைத் தாங்கியபடி நின்று கொண்டிருந்தனர். கோயில் உள்ளே இருந்து வந்த ஒருவர் ஈரமான மஞ்சள் துணி யொன்றைக் கொண்டு வந்து பூசாரியிடம் கொடுத்தார். அவர் அருகிலிருந்த ஒரு பித்தளைக் கரண்டியால் கையளவு நெருப்பை அள்ளித் துணியில் போட்டு மூட்டையாகக் கட்டி முடிந்து அந்த நெருப்பு முடிப்பை மேடையில் எழுந்தருளியிருக்கும் அம்மனது பட்டுப் புடவை மடியில் வைத்து மடித்துக் கட்டினார்.

கணகணவென்று எரிந்து கொண்டிருந்த தீக்குழியின் பிரகாசம், பனிச்சென்று எழுந்த சூரியனின் ஒளி இரண்டும் பட்டுச் செக்கச் செவேலென்று செங்கோலம் பூண்ட மாரி யம்மன் திருவுருவம் முழுதும் நெருப்பாக ஜொலிப்பதைக் கண்ட பக்தர்கள் பலருக்கு ஆவேசம் வந்து விட்டது.

''முத்துமாரித் தாயே....'' அவர்களது கோஷம் வானைப் பிளந்தது. தேங்காய் உடைத்து அம்மனுக்குத் தூப தீப ஆராதனை களை முடித்த பின்னர் பூசாரி தாம் சுமக்க வைத்திருந்த கரகத்தைத் தலையில் வைத் துக்கொண்டார். வலது கையில் வேப்பிலைக் கொத்தைப் பிடித்துக் கொண்டு விநாய கருக்குத் துதி பாடிவிட்டுத் தாரை தம் பட்டைகளையும் மீறிய கணீர் குரலில்,

''ஆயிரம் கண்ணுடைய அலங்காரியே
வாருமம்மா
பதினாயிரம் கண்ணுடையாள் பராசக்தியே
வாருமம்மா...''

என்று பாடியபடி — தம்மை மறந்த நிலையில் தீக்குழிக்குள் காலை வைத்து நிதானமாகக் கரகமாடியபடி நடக்கத் தொடங்கினார்.

தாரை தம்பட்டைகள் அதிர்ந்தன.

சிலம்பம் ஆர்ப்பரித்தது.

உடுக்கை ஓங்கி ஒலித்தது.

முத்துமாரித் தாயே... கருணை கொண்டு பாரம்மா... ஜனங்களிடையே பரவசக் கோஷம்.

அடுத்தபடியாக நின்ற அகல்யா சட் டென்று திரும்பி காமேஷை உறுத்துப் பார்த் தாள்.

ஊருக்குப் பெரிய மனிதரான கனக சபையின் மருமகள் கூட பூக்குழியில் இறங் கப் போகிறாங்களாமே... விஷயம் ஏற்கனவே பரவி விட்டிருந்தது. வேடிக்கை பார்க்க வந்த சிலர் கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு முன் வந்து நிற்க முயன்றனர்.

அவர் மகன் ஏன் இப்படி இளைச்சுக் கறுத்துப் போயிருக்கார்?

அவரும் இறங்கப் போகிறாரா?

அவங்க அம்மாவுக்கு உடம்புக்கு முடியலை யாமே....

பற்பல விமரிசனங்களும் இடையிடையே இருக்கத்தான் செய்தன.

தன் முன் தெரிந்த மேடையில் திருக் கோலம் கொண்டெழுந்தருளியிருந்த முத்து மாரியின் கனல் விழிகளில் கருணையைத் தேடி உள்ளம் உருகி உணர்ச்சி பொங்கப் பிரார்த்தித்துக் கொண்ட அகல்யா

''சமயபுரத்தானே சாம்பிராணி வாசனையே
சமயபுரத்தெல்லை விட்டுத் தாயாரே
வாருமம்மா!
மாதாவே பெற்றவளே மனம் வைத்துப்
பாருமம்மா!
பார்வதியே பெற்றவளே பக்ஷம்வைத்துப்
பாருமம்மா!''

பொங்கிப் புரண்ட கண்ணீர் கன்னங் களில் வழிந்தோடத் தன்னை மறந்த நிலையில் இனிய குரலில் பாடிக் கொண்டே பூசா ரிக்குப் பின்னால் தீக்குழியில் மெல்ல இறங்கி நிதானமாக நடந்தாள்.

முத்துமாரித் தாயே! அம்மா... உன் மகிமையே மகிமை....!

கோஷமிட்ட பக்தர்கள் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருக்கையில் பூவிதழ்கள் மீது நடப்பது போன்று மெல்ல நடந்து சென்றாள்.

அந்த அதிசயத்தைக் கண்டு அயர்ந்து போன காமேஷ் அவனையும் அறியாததொரு வேகத்திலே கைகளைச் சிரமேல் கூப்பிக் கொண்டு கண்கள் பனிக்க நெஞ்சை உணர்வுகள் அடைக்க 'தாயே! உன் பாதம் சரணம் அம்மா...' என்று கத்திக்கொண்டு பூக்குழியில் இறங்கிப் பின்னால் நடந்து வெளியே வந்தான்.

என்ன அதிசயம்! தீ அவன் பாதங்களைச் சுடவேயில்லையே? கற்குவியல் மீது நடப்பது போன்றதொரு விசித்திரமான அனுபவம். அவனுக்கா இப்படி ஓர் அற்புதம் நிகழ்ந்து விட்டிருக்கிறது!

முதலில் வெளிவந்த பூசாரி எதிரே இருந்த பால் குழியில் இறங்கிக் காலை நனைத்துக் கொண்டு வெளிப்பட்டார். எல் லோரும் அவரைப் பின்பற்றினர்.

பின்னர் மேடையைச் சுற்றிலும் அவர வர்கள் சுமந்து வந்த காவடிகள் — பால் குடங்கள் — கரகங்கள் அனைத்தும் இறக்கி வைக்கப்பட்டன. பூசாரி மறுபடியும் தேங் காய் உடைத்து அம்மனுக்குத் தூப தீபம் காட்டி வழிபட்டார். பின்னர் பக்தர்கள் சுமந்து வந்த பால் குடத்துப் பாலையெல்லாம் ஒரு பெரிய அண்டாவில் ஊற்றி ஆட்கள் கோயிலுக்குள் எடுத்துச் சென்றனர்.

அந்தப் பாலைக் கொண்டு உள்ளே எழுந் தருளியிருந்த தேவியின் திருவுருவத்துக்குக் குளிரக் குளிர அபிஷேகம் நடந்தது. அதற் குப் பின்னர் அம்மனுக்கு மஞ்சள் புடவை அணிவித்துச் செவ்வந்தி மாலை சூட்டி அலங் கரித்து, பூசாரி தீபாராதனை செய்து முடித் தார். ஊர் உபயமாகத் தயாரிக்கப்பட்டிருந்த உணவு வகைகள் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டன.

நேரம் நடுப்பகலைத் தாண்டி விட்டது. பூரணியின் துணையில் விட்டு வந்திருந்த மாமி யாரின் நினைப்பு வரவே அகல்யா வீட்டுக்குக் கிளம்பினாள்.

அதற்குள் ஆறி விட்டிருந்த பூக்குழியி லிருந்து ஒரு பிடி சாம்பலை அள்ளித் தன்

''நாளைக்கு ஒரு சின்ன பெற்றோர்-ஆசிரியர் மீட்டிங் இருக்குப்பா!''

''அது என்னடா 'சின்ன' மீட்டிங்?''

''ஆமாம், என் வாத்தியார் - நீங்கள்-நான் மூணுபேர் தானே நாளைக்குச் சந்தித்து என்னைப் பற்றிப் பேசப்போகிறோம்!''

-முத்து



முந்தானையில் பத்திரமாக முடிந்துகொண்டு வெளியே வந்தாள்.

கூட்டத்தின் முன்னதாக வந்து நின்று கொண்டிருந்தார்கள் அவளது பெற்றோர்கள்.

''அம்பா இருபையாலே எல்லாம் நல்ல படியா நடந்திரிச்சம்மா...'' — கவலை நீங்கிய வராக மகளைப் பெருமையுடன் பார்த்தார் குருநாதன்.

''ஆத்தா உனக்குச் சகல நலன்களையும் கொடுக்கட்டும்.... அம்மா அகல்யா பூமேலே நடக்கிறப் போல் பொறுமையா நடந்து வந்துட்டியே கண்ணே!'' பெற்றவள் மகளைப் பூரிப்புடன் அணைத்துக் கொண்டாள்.

நாள் முழுதும் பட்டினியாக இருந்த களைப்பு — பற்பல கவலைகளால் உழன்ற உணர்வுக் குழப்பம் அவளுக்கு. மற்றுமொரு முறை கோயிலுக்குள் குடியிருந்த தெய்வத்தின் திருவுருவத்தை ஆசை தீரப் பார்த்தாள்.

உலகத்து நாயகியே முத்துமாரி! நான் நேர்ந்து கொண்டதைச் செய்து முடிச்சுட்டேன். இனி நான் கேட்ட வரம் கொடுப்பதும் கொடுக்காததும் உன் கருணை.—தனக்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டபடி கண் கலங்க நடை தள்ளாட மெல்ல வீட்டை நோக்கிப் பெற்றோர்களுடன் புறப்பட்டாள்.

சற்று தூரம் மகளுடன் நடந்து வந்த குருநாதன் தம்பதியர் வீட்டை நெருங்கிய போது விடை பெற்றுக் கொண்டு பிரிந்தனர்.

உள்ளே நுழைந்த அகல்யா தலைப்பில் முடிந்து கொண்டு வந்த பூக்குழிச் சாம்பலை துளி எடுத்துத் தன் மாமியாரின் நெற்றியில் தடவினாள். சிறிது தானும் அணிந்து கொண்டு, சிறிது பூரணிக்கும் கொடுத்து விட்டு மற்றதைப் பத்திரமாக ஒரு கிண்ணத்திலே போட்டு பூஜை அறையிலே கொண்டு வைத்தாள்.

பின்தொடர்ந்து வந்த சிங்காரம் பற்களைக் காட்டி மகிழ்ச்சியுடன் சிரித்தான்.

அப்பப்பா! என்ன கூட்டம்.... என்ன கூட்டம்! இதுமாதிரி விழா நான் இதுவரை பார்த்ததே யில்லை. ஆர்ப்பரித்த வண்ணம் தன் மனைவியுடன் தன் வீட்டுக்கு நடையைக் கட்டினான். நடந்ததை யெல்லாம் விவரமாகத் தன் மனைவியிடம் சொல்ல வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு.

அபிஷேகப் பாலைச் செம்பிலே நிறைத்து எடுத்துக் கொண்டு மெல்ல நடந்து வீட்டுக்குள் காமேஷ் வந்தபோது அகல்யா பூக்குழியில் இறங்கியபோதிருந்த மஞ்சள் ஆடையுடன் — மாலையைக் கழற்ற மறந்து சிந்தனையுடன் ஹாலுக்குள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

''அண்ணி!''

திடுக்கிட்டுப் போன அகல்யா திரும்பினாள்.

பால் செம்பை மேடை மீது வைத்து விட்டுச் சமாளிக்க இயலாதவனாக நடால் என்று தரையில் வீழ்ந்து அவளை வணங்கினான்.

''கோயில்லே சித்த முன்னே பார்த்த அந்த முத்து மாரியை இந்த வீட்டுக்குள்ளே இப்பப் பார்க்கிறப்பல எனக்குத் தோணுது.... அண்ணி! அறிவு கெட்டதனமாக உங்கிட்ட நடந்து கொண்டதை மறந்து மன்னிச்சுருங்க... சுபாவத்திலே நான் அவ்வளவு கெட்டவன் இல்லை... சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வக்ர புத்தி என்னை எப்படியெல்லாமோ செய்துடுச்சு....''

அவனது குரல் தழுதழுத்தது.

''எழுந்திரு. ஆண்பிள்ளையா அழகா துணிவா இருந்துக்கத் தெரிஞ்சுக்க.''

''அண்ணி! நீங்க கொடுத்த தெம்பிலே பூக்குழியிலே இறங்கிப் புனிதமாயிட்டேன். இனி என் வேலை முடிஞ்சுது. நான் இன்னிக்கே ஊைம்பி....'' அவன் முடிக்கவில்லை.

''நீ இங்கேயிருந்து இப்பத் திடீர்னு கிளம்பிப் போக முடியாது. உனக்கு இன்னொரு பெரிய வேலை இருக்கு.''

திகைப்புற்று அவன் எழுந்து நின்றான்.

''போய் முதல்லே துணியை மாத்திக்கோ ஏதாவது சட்டுனு சாப்பிடு.... சிங்காரத்தை விட்டு உடனடியா டாக்டரைக் கையோடு அழைச்சு வரச் சொல். அவர் வந்தும் பயன் கிடையாது.''

''என்ன சொல்றீங்க அண்ணி?''


''சித்த முன்னே என் கையாலே ஒரு கரண்டி பால் வாயில் ஊற்ற நான் உள்ளே போனபோது தெரிஞ்சுக்கிட்டேன். என் மாமியார் இறந்து சில நிமிஷங்கள் ஆகி விட்டிருக்கு போலத் தெரிஞ்சுது...''

''இறந்துட்டாங்களா?''... உரத்த குரலில் அலறிவிட்டான் காமேஷ்.

''ஏன் கத்தறே? அவங்க போயிட்டாங்க. இனி நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டியது நம்மெல்லோருடைய பொறுப்பாகிவிட்டது. கொள்ளி போட அவங்க பிள்ளை இப்போ அருகில் இல்லை. அதனால் முதலில் ஆரம்பித்த நாடகத்தைத் தொடர்ந்து நீ இன்னும் சில நாட்கள் நடத்த வேண்டியிருக்கும். என் மாமியாருக்கு நீயே உன் அண்ணனுக்குப் பதில் கொள்ளி போட்டு...''

பேச முடியாது கண்களில் பெருகிய நீரை வழித்தெறிந்து விட்டு உள்ளே சென்றுவிட்டாள்.


(தொடரும்.)



9 மாதம் கெடாத முட்டைகள்!

முட்டைகள், பொதுவாக ஒருசில நாட்களுக்குப் பின்னர் கெட்டுப் போய்விடும், கோழிமுட்டைகளை 8 அல்லது 9 மாதங்கள் வரை கெடாமல் பாதுகாக்கும் முறையை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உருகிய மெழுகில் முட்டைகளைச் சில விநாடிகளுக்கு மூழ்கச் செய்து எடுத்துவிட வேண்டும். பின்னர் பிராணவாயு அடங்கிய கூண்டுகளில் 20 அல்லது 30 நிமிடங்களுக்கு முட்டைகளை வைத்து இருக்க வேண்டும். முட்டை மீதுள்ள மெழுகு அதற்கு மற்றொரு கவசம் போல அமைகிறது. இவ்விதம் பக்குவம் செய்யப்பட்ட முட்டைகள் எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்குக் கெடாமல் இருக்கும். —(பிரஸ்-இந்தியா)



ஐக்கோட் ராஜா

எம்.கே. சங்கரன்

கோவில் செலவுக்கு மூந்நூறு ரூபாய் பணம் பேங்கிலிருந்து எடுத்து வரச் சொல்லி மாசானம் பேச்சியம்மாளிடம் பாஸ் புத்தகத்தைக் கொடுத்தனுப்பினார். பேங்க் கவுண்டரில் கிளார்க்காகப் பணியாற்றிக் கொண்டிருந்த புது ஆளைப் பார்த்துப் பேச்சியம்மாள் திகைத்தாள்.

இக்கோட் ராஜா!

இந்த பாங்கில் எப்போது சேர்ந்தான்?

அது ஒரு பெரிய பாங்கின் கிராமக் கிளை. ஒரு மானேஜர், ஒரு கிளார்க், ஒரு பியூன். மூன்றே ஊழியர்கள்தாம். கிளார்க், காஷியர், அப்ரைசர் எல்லாம் இக்கோட் ராஜாதான்!

''பழைய கிளார்க் எங்கே?'' — பேச்சியம்மாள் பியூனிடம் கேட்டாள்.

''அவரு மாறிப்போயி ஆறு மாசத்துக்கு மேலாச்சே! அவருக்குப் பிறகு தம்பி இக்கோட் ராஜாதான் கிளார்க். நல்ல சுருசுருப்பு நம்ம ஊர்க்காரங்களுக்கு ரொம்ப உதவி செய்யுது.''

இக்கோட் ராஜாவைப் பற்றி பியூன் மிகவும் புகழ்ந்து கொண்டிருந்தான்.

இக்கோட் ராஜாவுக்கு அவள் தெருதான். கிழக்கோடி வீடு.

''அந்த வீட்டுக்குப் போகக் கூடாது. அந்த வீட்ல சொட்டுத் தண்ணி வாங்கிக் குடிச்சிடப்படாது. அவங்க கூடப் பேசினக்கூடத் தப்பு. ஆறுமங்கலத்துச் சாமி கண்ணை அவிச்சுடுவாரு.''

சின்ன வயதில் தாய் தந்தையர் எச்சரித்தது அழிக்க முடியாத கல் எழுத்தாய் நெஞ்சில் பதிந்து கிடக்கிறது.

அந்தக் காலத்தில் பேச்சியம்மாள் தாத்தாவுக்கும் இக்கோட்டின் தாத்தாவுக்கும் ஒரு தகராறு. ஆறுமுக மங்கலம் கடலை மாடசுவாமி பீடத்தின் முன் பிரமாணம் செய்துவிட்டனர். அன்று முதல் இரண்டு தலைமுறைக்கும் மேலாக இரண்டு குடும்பங்களுக்கும் பேச்சு வார்த்தை, நன்மை தீமை கிடையாது.

தெருப் பிள்ளைகளோடு, விளையாடும் போதோ, ஒரே பள்ளியில் படிக்கும்போதோ பேச்சியம்மாள் இக்கோட்டிடம் பேசியதில்லை.

ஊரிலேயே காலேஜ் படிகளில் காலை வைத்தவர்கள் இக்கோட்டும் பேச்சியம்மாளும்தான்.

அவன் முந்திய வருடம் பி. எஸ் ஸி. முடித்திருந்தான். பேச்சியம்மாள் இந்த வருடம் பி.ஏ. பாசானுள். பாளையங்கோட்டைக்கு ஒரே பஸ்ஸில் அவர்கள் போய் வந்ததுண்டு. அவன் யாரோ இவள் யாரோ என்றுதான் நடந்து கொண்டனர்.

இப்போது ஐக்கோட்டிடம் எப்படித் தொடர்பு கொள்வது?....

அவள் தயங்கி நின்றாள்.

ஐக்கோட் பெல் அடித்து பியூனைக் கூப்பிட்டு ஏதோ சொன்னான். பியூன் பேச்சியம்மாளிடம் வந்து. 'அந்த பாஸ் புக்கைக் கொடம்மா' என்று வாங்கி ஐக்கோட்டிடம் கொடுத்தான். உடனடியாக லெட்ஜரில் பதிவு செய்து முந்நூறு ரூபாயை பியூனிடம் கொடுத்தனுப்பினான் ஐக்கோட்.

அவன் கடமையைத்தான் செய்தான். என்ன பெருந்தன்மை என்று வியந்து நின்றாள் பேச்சியம்மாள். 'தாங்க் யூ' என்று வாய்க்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

ஆறுமுக மங்கலம் கோவில் திருவிழா கலகலப்பில் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. பூம்.... பூம்...... என்று உறுமி மேளம் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

மாசானம் மனைவி - மக்களை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டார். முத்தம்மாள் தன் மகள் பாஸ் பண்ணனும் என்று சுவாமிக்கு நேர்ந்திருந்த நூற்றி ஒரு ரூபாயைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டாள்.

மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு உயர்ந்து கம்பீரமாகக் காட்சி யளித்தார் சுடலை மாட சுவாமி. சுவாமிக்கு எதிரே ஐக்கோட் ராஜாவும் அவன் அம்மாவும் கண்களை மூடியவாறு தியானத்தில் நின்று கொண்டிருப்பதைப் பேச்சியம்மாள் பார்த்தாள்.

முத்தம்மாள் நூற்றி ஒரு ரூபாய் காணிக்கையைப் பேச்சியம்மாள் கையில் கொடுத்துச் செலுத்தச் சொன்னாள்.

''சாமி புண்ணியத்திலே என் மகள் பாசாயிட்டாள். அவளுக்கு நல்ல மாப்பிள்ளையாக் கிடைச்சுக் கல்யாணம் முடிய சாமிதான் அருள் தரணும்.''

ஒருவர்: (கோன் ஐஸ்கிரீம் சாப்பிட்டதும்) என்ன விலை?


கடைக்காரர்: ஒரு ரூபாய் ஐம்பது பைசா.

ஒருவர்: கோன் என்ன விலை?

கடைக்காரர்: அதுக்கு காசு இல்லே. அம்மா.

ஒருவர்: கம்மான்னு அதுல நாலு கொடுங்க அது கூட ருசியாகத்தான் இருக்கு.

-குபேந்திரன்



பூசாரிப் பிள்ளையிடம் வேண்டுகோள் விடுத்தாள். அவர் விபூதியைக் கையில் எடுத்துக் கண்களை மூடியவாறு தியானித்தார்.

''ஐக்கோட் ராஜா! இந்தப் பொண்ணுக்கு நீதான் வழிகாட்டணும்'' என்ற பூசாரி பேச்சியம்மாள் உச்சியில் விபூதியைத் தூவி நெற்றியில் பூசினார்.

தன் பெயர் உச்சரிக்கவும் ஐக்கோட் ராஜா கண்களைத் திறந்தான். விபூதி பெற்றுக் கொண்ட பேச்சியம்மாள் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

ஐக்கோட் ராஜா எனக்கு வழி காட்டணுமா? இது சுவாமியின் உத்தரவா?

அப்படியானால் சுவாமி சன்னதியில் செய்த பிரமாணம் காலாவதியாகி விட்டதா?

அவள் இதயத்தில் ஒரு படபடப்பு.

கோவிலை விட்டு வெளியே வந்ததும், ''அம்மா, ஐக்கோட் ராஜா எனக்கு வழி காட்டணும்னு சுவாமி உத்தரவு கொடுக்கிறாரே, பிரமாணப்படி நமக்கும் அவுங்களுக்கும் கொள்வினை கொடுப்பினை இடையாதே. இது எப்படி அம்மா?'' என்று தன் தாயிடம் கேட்டாள்.

''நம்ம சுடலை மாடசாமி பேரே ஐக்கோட் ராசாதான்.

''ஐக்கோட் ராஜா என்ற பேரே ஒரு காரணமா வந்தது பேச்சியம்மா. நம்ம சாமி மேலே பக்தியா இருந்த ஒருவன் ஒரு கொலை கேசுலே மாட்டிக் கொண்டான். உண்மையில் அவன் அந்தக் கொலையைச் செய்யலே. அவனுக்குத் தூக்குத் தண்டனை போட்டுட்டாங்க செயில்ல. அவன் சாமியை நினைச்சு அழுதுக்கிட்டிருந்தான். அந்தக் கேசு ஐக்கோட்ல (ஹை கோர்ட்) நடக்கும்போது நம்ம தெய்வம் ஒரு மனுஷனா மாறி நேரில் போய் சாட்சி சொல்லி அவனை விடுதலை பண்ணிக் கொண்டு வந்தாராம். அதிலிருந்து நம்ம வெம்படி சுடலைமாடசாமிக்கு ஐக்கோட் ராசான்னு பேரு. இந்தக் கோவிலுக்கு வருகிற அநேக குடும்பத்தில் இந்தப் பேர் இருக்கும்.''

தாய் விளக்கியதைக் கேட்டாலும் அந்த அருள்வாக்கில் ஏதோ ஒரு பொருள் இருப்பதாகப் பேச்சியம்மாளுக்குத் தோன்றியது.

ஐக்கோட் ராஜாவிடம் தன்னையறியாது ஒரு பற்று வளர்வதைப் பேச்சியம்மாளால் உணர முடிந்தது.

பேச்சியம்மாளின் நெருங்கிய காலேஜ் சிநேகிதி ஒருத்திக்கு மதுரையில் கல்யாணம் என்று இன்விடேஷன் வந்தது. அநேக தோழிகள் அந்தக் கல்யாணத்துக்குப் போவதாகவும் அவள் வருவதாக இருந்தால் முந்திய நாளே திருநெல்வேலிக்கு வந்து சந்திக்கும்படியும் கடிதம் எழுதியிருந்தனர். தாய் தந்தையரிடம் கெஞ்சி அனுமதி பெற்றாள். ஒரு பருவப் பெண் அடுத்த இடத்தில் இரவு தங்கலாகாது என்பதால் கல்யாணத் தன்று காலை நாலு மணி பஸ்ஸுக்கு அவளை அனுப்பி வைத்தனர்.

அதே பஸ்ஸில் ஐக்கோட் ராஜாவும் ஏறினான். பாங்க் அலுவல் நிமித்தம் அவனும் மதுரைக்குப் போகிறான்.

திருநெல்வேலியில் இறங்கியதும் ஒரு சிநேகிதியைத்தான் அவளால் பார்க்க முடிந்தது. மற்ற தோழிகள் அனைவரும் முந்திய பஸ்ஸில் சென்றுவிட்டதாக அவள் தகவல் சொன்னாள். பேச்சியம்மாள் மதுரைக்குத் தன்னந் தனியாகச் செல்ல வேண்டியிருந்தது.

பஸ் வந்ததும் கண்டக்டர் கவுண்டரில் டோக்கன் வாங்கி வரச் சொல்லிவிட்டார். அந்தக் கும்பலில் சிரமப்பட்டு நம்பர் வாங்கி வந்துவிட்டாள். இருபத்து மூன்றும் நம்பர் அவளுக்குக் கிடைத்திருந்தது. பஸ்ஸில் ஏறி நம்பரைத் தேடினாள். இருபத்து நான்காம் நம்பரில் ஐக்கோட் ராஜா உட்கார்ந்திருந்தான். அவன் சீட்டுக்கு அடுத்த சீட் இருபத்து மூன்றும் நம்பர்.

அவன் பக்கத்தில் எப்படி உட்காருவது...?

எல்லாப் பிரயாணிகளும் ஏறி அமர்ந்து விட்டனர். ஒருசிலரைத் தவிர அநேகர் தம்பதியினராக இருந்தனர். பேச்சியம்மாள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து ஐக்கோட் ராஜா எழுந்தான். இரண்டொரு சீட்காரர்களிடம் மாற்று இடம் கேட்டான். யாரும் இருந்தஇடத்தைவிட்டுஅசையவில்லை.

டிரைவர் ஆசனத்தில் ஏறி அமர்ந்து பஸ்ஸை ஸ்டார்ட் செய்தார். கண்டக்டர் அவரவர் இடத்தில் அமரும்படி பலமாகக் கத்தினார். வேறு வழியின்றி இருவரும் ஒன்றாக அமர நேர்ந்தது.

பேச்சியம்மாள் தன் உடம்பைக் குறுக்கிக் கொண்டாள். ஐக்கோட் ராஜாவும் அவள் மேல் பட்டுவிடாதபடி ஒடுங்கி இருந்தான்.

இது தெய்வத்தின் சோதனையோ? திரும்பத் திரும்ப என்னை அவரோடு ஒட்ட வைத்துக்கொண்டிருக்கிறாயே, இது ஏன்?

'ஏன் ஏன்' என்ற கேள்வி அவள் மனத்தை வட்டமிட்டுக் கொண்டே இருந்தது.

அந்த மூன்றரை மணிநேரப் பிரயாணத்தில் ஐக்கோட் ராஜாவின் தன்னடக்கமும், மரியாதையும், அவனை அவள் உள்ளத்தில் வெகுவாக உயர்த்தி விட்டன.

ஊருக்குத் திரும்புகையில் அவள் தோழி பக்கத்து சீட்டில் இருந்தாள். ஐக்கோட் ராஜாவே அருகில் இருப்பது போல் அவளுக்குப் பிரமை.

அறியாமையாலும், வீண் வீம்புத்தனத்தாலும் தெய்வ சந்நிதியில் முன்னோர்கள் செய்த பிரமாணம் பின் தலைமுறை வரை தொடர வேண்டுமா என்ற கேள்வி அவள் மனத்துள் எழுந்தது. ஐக்கோட் ராஜாவைப் போன்ற உயர்ந்தவர்களைப் பழைய விரோதம் காரணமாகப் புறக்கணித்து விடக் கூடாது.

அவள் மனத்தில் ஒரு தீர்மானம் உருவாயிற்று.

வீட்டுக்கு வந்ததும் ஒரு முக்கியமான செய்தி அவளுக்காகக் காத்திருந்தது. அவளுக்குக் கல்யாணம் ஏற்பாடாகி விட்டது என்பதை அவள் அம்மா மகிழ்ச்சி பொங்கக் கூறினாள்.

மாப்பிள்ளைப் பையன் திருநெல்வேலியில் காசுக்கடை வைத்திருக்கிறான். நல்ல வருமானம். வசதியான இடம். ஆறுமுகமங்கலம் கோவிலில் பேச்சியம்மாளைப் பார்த்தவன் அவள் அழகில் கிரங்கி விட்டான். உடனே பேசி முடிக்க அப்பாவை அனுப்பி



''தெரியாத்தனமா துணுக்கு எழுத்தாளரை மாப்பிள்ளையா தேர்ந்தெடுத்துட்டேன்.''

''ஏன்? அதுக்கென்ன?''

'' 'வீக்லி', 'டைம்ஸ்,' ''மிர்ரர்' மாதிரிப் பத்திரிகைகளுக்கு ஆயுள் சந்தா கட்டினுத்தான், தாலி கட்டுவாராம்.'' — என். கே. கண்ணன்

விட்டான். இந்த ஆவணியிலேயே முகூர்த்தம் வைக்கிறதாக முடிவு செய்து விட்டனர். பேச்சியம்மாளின் நெஞ்சில் ஒரு கீறல்.

கல்யாண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நாளாக ஆக பேச்சியம்மாள் மனசைத் தேற்றிக் கொண்டாள். கல்யாணப் பத்திரிகை அச்சடித்து வந்தாயிற்று. வெளியூரிலும் உள்ளூரிலும் உள்ள உறவினர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்பட்டது. பேச்சியம்மாள் தன் கல்லூரித் தோழிகள் அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பினாள். சிநேகிதிகள் ஒவ்வொருவரையும் நினைவுக்குக் கொண்டு வரும்பொழுது அந்தத் தோழிகளில் ஒரு தோழனாக ஐக்கோட் ராஜா காட்சி கொடுத்துக் கொண்டிருந்தான். தன் கல்யாணத்துக்கு அவனும் வர வேண்டும் என்று ஓர் ஆசை எழுந்தது. பத்திரிகை ஒன்றை எடுத்து அவன் பெயரை எழுதினாள். அதை எடுத்துக் கொண்டு நேராக அவன் வீட்டுக்கே சென்றாள்.

வாசலில் திடீரென்று வந்து நிற்கும் பேச்சியம்மாளைக் கண்டதும் ஐக்கோட் ராஜாவின் அன்னை திகைத்தாள். தன் மகனை அழைத்து வந்தாள்.

''எனக்குக் கல்யாணம் வைச்சிருக்கு. என் கல்யாணத்துக்கு நீங்க எல்லாம் வரணும்னு எனக்கு ரொம்ப ஆசை. அதனால்தான் பத்திரிகை வைக்க நானே நேரில் வந்தேன்.'' கெஞ்சும் பாவனையில் சொன்னாள் பேச்சியம்மாள்.

''அது எப்படியம்மா முடியும்? உங்க குடும்பத்துக்கும் எங்க குடும்பத்துக்கும் சத்தியப் பிரமாணம் இருக்கே?''

ஐக்கோட் அம்மா தயக்கத்துடன் மகனைப் பார்த்தாள்.

''அம்மா, நம்ம வீடு தேடி வந்தவங்ககிட்ட இதெல்லாம் சொல்லக் கூடாதம்மா. நம் முன்னோர்கள் சின்னத் தகராறுகளுக்கெல்லாம் சத்தியம் பிரமாணம்னு அலைஞ்சு, சேர்ந்து வாழ வேண்டிய நல்ல குடும்பங்களைத் தெரியாத்தனமாப் பிரிச்சுட்டாங்க, பிரமாணம் இருந்தாலும் அது அவுங்க தலைமுறையோடு முடிஞ்சு போன விஷயம். பத்திரிகையை வாங்கம்மா.''

தாய் பத்திரிகையை வாங்கி மகனிடம் கொடுத்தாள்.

கல்யாண நாள்.

உற்ருர் உறவினர் எல்லோரும் கூடி பந்தல் நிறைந்துவிட்டது. பேச்சியம்மாள் எதிர் பார்த்த தோழிகள் அனைவரும் வந்துவிட்டனர். முகூர்த்த நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. பேச்சியம்மாளுக்கு ஒரு தவிப்பு. ஜக்கோட் ராஜா இன்னும் வரவில்லையே?

ஜக்கோட் ராஜா வந்துவிட்டான்!

பந்தலில் ஒரு பரபரப்பு. முத்தம்மாள் ஓட்டமாக மாசானத்திடம் வந்தாள். ''ஜக்கோட் ராஜாவும் அவன் அம்மாவும் நம்ம கல்யாணத்துக்கு வந்து நிக்கிறுங்க''

''நம்ம வீட்டுக் கல்யாணத்துக்கு அவங்க எப்படி வந்தாங்க....?''

தாய் தந்தையரின் குழப்பத்தைப் பார்த்த பேச்சியம்மாள், ''அப்பா, அவங்க நம்ம வீட்டு வாசலுக்கு வந்துட்டாங்க. அவங்களை வரவேற்று உட்கார வைக்கிறதுதான் மரியாதை. அம்மா, அந்த அம்மாவை வீட்டுக்குள் கூட்டிவா'' என்று முடுக்கி விட்டாள்.

மகள் சொன்னது சரியாகப் பட்டது மாசானத்துக்கு. ஜக்கோட் ராஜாவை வரவேற்றுப் பந்தலில் உட்கார வைத்தார். முத்தம்மாள் ஜக்கோட் அம்மாவைப் பேச்சியம்மாள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்ருள்.

ஜக்கோட் ராஜா கல்யாணப் பந்தலில் அமர்ந்திருப்பது ஊராருக்கு அதிசயமாக இருந்தது. மாப்பிள்ளையின் தகப்பனுர் திடீரென்று மாசானத்தை அழைத்தார்.

''இப்போது வந்தானே ஜக்கோட் ராஜா, இவங்க குடும்பத்துக்கும் உங்க குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தை நன்மை தீமை கிடையாதில்லையா? கல்யாணத்துக்கு எப்படி வந்தான்? நீங்க அழைப்பு அனுப்பினீங்களா?'' — மாப்பிள்ளையின் தந்தை கேட்டார்.

''நான் அழைப்பு அனுப்பவில்லை''

''அந்தப் பையன் படிச்சவன். அழைப்பு இல்லாமல் வரமாட்டான். நீங்க ரெண்டு பேரும் அனுப்பலேங்கறது உறுதியாகிவிட்டது. பின்னே யார் அனுப்பினுங்கங்கறது தெரிஞ்சாத்தான் கல்யாணம் நடக்கும்.'' அவர் இப்படி ஒரு வெடி குண்டைப் போட்டதும் மாசானம் அதிர்ந்து விட்டார்.

''நான்தான் அழைப்புக் கொடுத்தேன்!'' பேச்சியம்மாள் துணிவோடு பேசினுள்.

''நாங்க வந்ததுமே கேள்விப்பட்டோம். அது சரியாப் போச்சு. நீ எப்படி ஒரு ஆண் பிள்ளைக்கு அழைப்புக் கொடுக்கலாம்?''

''அவர் உயர்ந்த பண்புள்ளவர். அவர் உறவு எங்க குடும்பத்துக்கு எக்காலமும் தேவையின்னு பட்டது. நேரில் கொண்டு போய் அழைப்புக் கொடுத்தேன். இது தப்பா?''

''தப்புத்தான்.''

''அப்படின்னு உங்க இஷ்டப்படி செய்யுங்க. நான் கவலைப்படப் போறதில்லே.''

மாப்பிள்ளைத்தந்தையின் முகத்தில் கோபக்கனல் பறந்தது. ''இந்த மமதை பிடித்த பெண் எங்களுக்குத் தேவையில்லை.''

''வேண்டாத வார்த்தை பேச வேண்டாம். நீங்க போகலாம்.''

அவர் விருட்டென்று கிளம்பினுர்.

கல்யாணப் பந்தல் குழப்பமடைந்து மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

''என்னம்மா இப்படிப் பேசிட்டியே!'' — மாசானம் தவித்தார்.

''நம்ம ஜக்கோட்ராஜா வழிகாட்டுவார்!''

அவர் திடுக்கிட்டார். ''நீ என்னம்மா சொல்றே?''

''நம்ம ஆறுமுகமங்கலத்து சுவாமி எனக்கும் ஒருவருக்கும் முடிச்சுப் போட்டு வச்சுட்டார். அந்த முடிச்சை அவிழ்க்க இனி யாராலும் முடியாதப்பா.''

ஜக்கோட் ராஜாவும் அவன் அம்மாவும் தங்கள் வருகையால் கல்யாணம் நின்று விட்டதே என்று குழம்பி நின்றனர். மாடியிலிருந்து வந்த பேச்சியம்மாள் ஜக்கோட் அம்மாவின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

''அம்மா, உங்களை நான் தெய்வமாக மதிக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் வந்ததுக்காகக் கல்யாணத்தைக் கலைத்துவிட்டுப் போனவங்களைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை'' என்ருள்.

''நான் ஒரு தீர்மானம் பண்ணிட்டேன் பேச்சியம்மா. என் மகனுல் நின்ற கல்யாணம் என் மகனுலேயே நடக்கும்'' என்ருள்.

மாசானமும் முத்தம்மாளும் இப்படி ஒரு வார்த்தையை எதிர்பார்க்கவில்லை.

''அம்மா, என் மகளுக்கு இப்படி ஒரு பாக்கியம் கிடைக்குமா என்று நாங்க பல முறை நினைச்சதுண்டு. ஆனு சத்தியப் பிரமாணம் ஒண்ணு குறுக்கே நிக்குதே?'' என்ருர் மாசானம்.

''மூனு தலைமுறையா நம்ம ரெண்டு குடும்பமும் சுவாமிக்குச் செய்த பூசையில் பிரமாணம் நீங்கிப் போச்சு. அன்று சுவாமி சன்னதியில் உங்க வீட்டம்மா மகளுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்கணும்னு வேண்டினப்போ பூசாரி வாக்கில் என்ன பேர் விழுந்தது? ஒரு கடலையாண்டின்னே மாயாண்டின்னே சொல்லியிருக்கலாமில்லையா? ஜக்கோட் ராஜா வழிகாட்டணும் என்கிறது தானே வாக்கு? இது வெறும் வாக்கில்லே. நம்ம தெய்வத்தின் உத்தரவுதான்.''


பேச்சியம்மாள் நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்த பாரம் விலகியது. ஜக்கோட் ராஜாவை ஏறிட்டு நோக்கினுள்.

மகிழ்ச்சி நிலவிய அவன் முகம், ''போக்கிரிப் பெண்ணே, ஓட்டி ஓட்டி வந்து ஒரேயடியாக உன்னிடமே இழுத்து விட்டாயே!'' என்று சொல்வது போலிருந்தது.

''நான் பத்திரிகைக்கு எழுதி அனுப்பும் எல்லாமே சுவரில் அடிச்ச பந்து மாதிரி திரும்பி வந்துடுதே....!''

'''Ball' பாயிண்ட் பேனுவில் எழுதறதை விட்டுப்பாரேன்!''

-கிரிஜாமணாளன்





துணைகள்

கதையின் தலைப்பு என்ன என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு: துணைகள்

— ரா. சுப்பிரமணியன்

"டாடி, ஸ்கூலுக்கு நேரமாச்சு டாடி."

மனுஷன் பாவம். வெங்காயம் நறுக்கிய கையில் கண்ணைக் கசக்கிவிட்டு, விழிக்க முடியாமல் அவதிப்படும் நேரத்தில் — மகள் ரமாவின் வார்த்தைகளை கிரகிக்க வெங்கடாசலத்துக்கு அவகாசம் இல்லைதான்.

கண்ணை மூடிக்கொண்டே, நிதானத்தில் வெங்காயம் நறுக்கிய வெங்கடாசலத்துக்கு விரலையும் நறுக்கிக் கொண்டபோது எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"இந்தக் கருமமே வேண்டாம்; ஹோட்டலுக்குன்னாலும் போய்த் தொலையலாம்" என்று வெங்காயத் தட்டையும், அரிவாள் மணையையும் தூரத் தூக்கி வீசினார்.

"ரமா, சீக்கிரம் புறப்படு. இன்றைக்கு ஹோட்டல்லேதான் டிபன்!" வெங்கடாசலம் டிரஸ் செய்துகொண்டே கூறினார்.

ரமாவை அழைத்துக் கொண்டு வெங்கடாசலமும் புறப்பட்டார்.

"ஏன் டாடி நீ போய் மம்மியை அழைச்சிட்டு வாயேன்? நீங்க கூப்பிட்டா வர மாட்டாங்களா?"

"நான் கூப்பிட்டா வருவாளா மாட்டாளான்னு எப்படிச்சொல்லட்டும்? என்னைக்கேட்டுக்கிட்டா அவள் அங்கே போனா? அவள் எடுக்கிற முடிவுக்கு என் கருத்து என்னன்னு எதிர்பார்க்காமல் போறவள், நான் சொன்னா வருவான்னு எப்படி நிச்சயமாச் சொல்ல முடியும்?" — அவளைச் சந்திக்க நேர்ந்தால் அவள் எப்படி வரவேற்பளிப்பாள் என்பதை அவர் மனம் படம் பிடித்துக் காட்டியது.

'எங்கிட்ட வந்து நீங்கதான் கெஞ்சணும். நான் இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டப்படுவீங்கன்னு தெரியுமா? என் உதவியில்லாமல் ஒரு நிமிஷம் கூட உங்களாலே வாழ முடியாது'ங்கற பொருள் பட்ற மாதிரி கர்வத்தோட பேசுவாளே. முந்திப் பேசியுமிருக்கிறாள்.

இரவு மணி ஒன்பது. பத்மா தனியறையில் இருந்தாள். பக்கத்து அறையில் அண்ணனின்-அண்ணியின் பேச்சும் சிரிப்பும்.

அடுத்த அறையில் பத்மாவின் தாய், கணவனின் காலை அமுக்கிக் கொண்டே, "என்னங்க, உங்க மருமகனைப் பற்றி இப்படி ரிப்போர்ட் கொண்டு வந்து உட்கார்ந்திருக்காளே பத்மா. 'மலைவின்னு இருக்காம நேந்து கலந்து பழகிக்கோணு'மின்னு சொல்

விக் காலையிலே அவளை அனுப்பி வைக்க வேண்டியதுதான்'' என்றாள்.

பத்மாவுக்கு என்னவோ போல் இருந்தது. 'ரமாவும் அவரும் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? ரமா இன்று ஸ்கூலுக்குப் போனாளோ இல்லையோ?' என்று மகளையும் கணவனையும் நினைத்துக் கொண்டிருக்கையில் யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. தொடர்ந்து ''மம்மி, மம்மி'' என்ற ரமாவின் குரல் கேட்டது. ஆவலோடு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

ரமா ஒருத்தி மட்டும் நிற்பதைக் கண்டு, ''நீ மட்டும்தான் வந்தயா?'' என்று அவளைக் கட்டிக் கொண்டாள்.

''செகண்ட் ஷோ சினிமாவுக்கு இது வழியாப் போறவங்க கூட வந்தேன்.''

''அப்பா என்ன சொன்னாரு?... ஆமா, சாப்பிட்டையா? காலையிலும் மாலையிலும் என்ன செய்தீங்க?''

''காலேலே டாடி சமைக்கலாம்னு வெங்காயம் நறுக்கப் போயி, வெங்காயம் நறுக்கின கையாலே கண்ணைக் கசக்கி... எரியத் தொடங்கிய கண்களை மூடிட்டே விரலை நறுக்கிக்க... விரலைப் பார்த்துட்டே வந்தவர் நிலை வாசலில் முட்டிக்க....''

''ஸ்....அடடா...ம்... அப்புறம்?''

''ஸ்....அடாடான்னு சப்புக் கொட்டினாச் சரியாப் போச்சா? உண்மையான இரக்கம் இருந்தா இப்படி யெல்லாம் கஷ்டப் பட விட்டுட்டு வந்திருப்பையா?''

''ஏன் ரமா இவ்வளவு கோவப்படறே?'' என்று அவள் தலையை வருடி விட்டாள்.

''அப்பா உன்னைப் பார்க்க முடியலை யென்னு எவ்வளவு வருத்தப்பட்டார்?..... இன்றைக்குப் பொழுதோடே மல்லிகைப்பூ வாங்கிட்டு வந்தாரு. 'ஏன் டாடி, எதுக்கு இத்தனை பூ? மம்மியில்லீங்கறது உனக்குத் தெரியாதான்னு' நான் கேட்டதும், 'போக்குனு' போயிட்டாரு! உனக்கு எங்களைப் பார்க்கணும்னு தோணலியா?.... ஆசையில்லையா?...''

''உங்களைவிட எனக்கு நிறைய ஆசை இருக்கு.''

''அப்பகன்னு நட. டாடிகிட்டே போகலாம்.''

''காலையில் போகலாம் இரு.''

''இரண்டு தெரு தாண்டினா வீடு. காலையிலென்ன, இப்பவே போகலாம்...''

''அவசரப்படாதே. நீ இப்பச் சாப்பிட்டையோ இல்லையோ?''

அமெரிக்காவில் இப்போது ஆண்கள் தலைமுடியை நீளமாக வளர்த்துக் கொள்ளும் பாஷன் மங்கி வருகிறது. அதற்குப் பதிலாக ஆண்கள் காதுகளில் வளையங்கள் போட்டுக் கொள்ளும் புதிய பாஷன் வெகு வேகமாகப் பரவி வருகிறது! நியூ டைம்ஸிலிருந்து - கோ. நிபா



''நீ பேச்சை மாத்தாதே. நீ இப்ப வரயா இல்லையா?''

பத்மா அண்ணனை அழைத்து, சொல்லி விட்டு ரமாவுடன் வீட்டுக்கு விரைந்தாள்.

''டாடி, டாடி... கதவைத் திற டாடி'' என்று ரமா கதவைத் தட்டிக்கொண்டிருக்கும்போது குரோட்டன்ஸ் செடிக்கு அப்பால் சென்று திறந்த ஜன்னலின் வழியாக உள்ளறையை எட்டிப் பார்த்தாள் பத்மா.

கதவைத் திறந்தவர், ''மம்மி வரலியா? துணைக்கு யார் வந்தாங்க?'' என்றார்.

''மம்மி கூடத்தான் வந்தேன்'' என்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு, ''எங்கியோ காணுமே?'' ஏமாற்றத் தொனியில் வினா எழுப்பினாள் குழந்தை.

''உன்னை இங்கு கொண்டு வந்து விட்டதும் போயிட்டாளோ என்னவோ?.... ஐயோ! தனியாகவா போனா?.... அறிவிருக்கா அவளுக்கு?... அதிக தூரம் போயிருக்க மாட்டா. விரைவாகப் போனாப் பிடிச்சுடலாம்.... உள்ளே போய் இரு. நான் சீக்கிரம் வந்து விடுகிறேன்'' என்று புறப்பட்டார். ரமா வீட்டுக்குள் சென்றாள்.

''அத்தான், என்னை மன்னிச்சுடுங்க அத்தான். என் இடத்தை என் புகைப்படத்தை வச்சு நிறைவு காண்கிற உங்களை 'அப்படி' நினைச்சதுக்கு மன்னிச்சுடுங்க.... நான் திருட்டுத்தனமா ஜன்னல் வழியாப் பார்த்ததற்குக் காரணமே நீங்கள் வேறு யாருடனாவது... ரமாவை என்னிடம் அனுப்பிவிட்டு... எப்படிச் சொல்லட்டும்... என் படத்துக்கு மல்லிகைப் பூப்போட்டு வச்சிருக்கிற உங்களைப் பற்றி இப்படி யெல்லாம் நினைத்தேனே... அத்தான்! இந்தப் பாவியை மன்னிச்சுடுங்க அத்தான்!'' என்று அவர் கால்களைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

அவர் மௌனமாக இருந்தார்.

''என்ன தண்டனை வேணும்னாலும் குடுங்க. இனி உங்களை விட்டுப் பிரிய மாட்டேன். பிரித்திடாதீங்க....''

''நீ எப்படி என்னைப் பற்றி அப்படி நினைக்கலாம்? என்னை நீ இன்னும் புரிஞ்சுக்கல்லே; நான் உன்னிடம் எதிர்பார்த்த அன்பு ரொம்ப ரொம்ப அதிகம். ஆனா, என்னை நம்பாத அளவுக்கு அது உன்னிடம் ரொம்ப சொற்பமா யிருக்கே?... நான் எதிர்பார்த்ததற்கும்....''

''அப்படி யெல்லாம் சொல்லாதீங்க. உங்களை நான் உயிருக்குயிராய் நேசிக்கிறேன்.'' என்று அவர் நெஞ்சிலே முகத்தைப் புதைத்துக் கரைந்தாள்.

''என் நெஞ்சிலே முகத்தைப் புதைக்க உன் மனத்தை லேசாக்கிட்டே... ஆனா அந்தச் சுமை யெல்லாம் என் நெஞ்சிலே ஏறியிருக்கு... உம்... உங்கப்பா, அம்மா... ஒருத்தர் பாக்கி யில்லாம, 'அவர் அப்படி' அதனால்தான் இங்கு வந்து விட்டேன்னு சொல்லிட்டியே. அவங்க எல்லாம் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க? நான் அங்கே போனால் என்னை எப்படி மதிப்பாங்க?''

''அப்படிப்பட்டவர் இல்லேன்னு அவங்ககிட்டே மறுபடியும் சொல்லிடறேங்க.''



ராமாயி வயசுக்கு வந்துட்டா

உலகம் தெரியாத — விகல்பம் அறியாத கிராமத்துப் பெண் ராமாயி — சின்னப் பயல் இருவரின் வாழ்க்கைக் கதை. செக்ஸைப் பற்றித் தெரிந்து கொள்ளாத வயது. வயது வந்தும் பக்குவப்படாத மனம். விளையாட்டாக ஊர்க் கிழவி அந்தப் பிஞ்சு ராமாயியிடம் நிபந்தனை விதிக்க அதன் அர்த்தம் புரியாமல் விபரீதம் விளைந்து அந்தப் பெண்ணின் வாழ்வே பாழாகிறது. இப்படியெல்லாம் இன்னமும் கிராமங்களில் நடக்கின்றன. ராமாயி கெட்டுப்போவது பச்சையும் கொச்சையுமாக இருந்தாலும் கதைக்கே அதுதானே வலு?

ராமாயியாக வரும் புது முகம் மேனகா அந்தப் பாத்திரத்துக்காகவே பிறந்தவர் போல அத்தனை கச்சிதமாக இருக்கிறார். கவடு சூதில்லாத முகம், பார்வை, சிரிப்பு. மன வளர்ச்சி அடைந்த பிறகும் அந்த நடிப்பும் பார்வையும் உருக்கம். கடைசியில் ராமாயியைக் கொன்றிருக்க வேண்டாம்.

புது இயக்குனர் அழகப்பனின் உதவியுடன் ராமாயிக்கு ஈடுகொடுத்து நடித்திருக்கிறார் புது முகம் உதயசங்கர் சின்னப்பயலாக. கங்கை அமரனின் இசை இனிக்கிறது.

—கௌசிகன்

''அதை நம்பினாப்போல இதையும் நம்பு வாங்கன்னு நினைக்கிறியா? உன் சந்தேகத்தின் காந்தல் இந்தத் தெரு பூரா பரவிக் கிடக்கு....ம்... வழக்கமா ஆபீஸ் விட்டு வாங்கற அளவே இன்னிக்கும் மல்லிகைச் சரம் வாங்கிட்டு வந்தேன். ஏன்னு தெரியுமா? நீ இல்லேங்கறதுக்காகக் குறைவா வாங்கியிருந்தா 'ஏன்'னு நண்பர் கேட்டிருப்பார். மனைவி சண்டை போட்டுட்டுப் பிறந்த வீட்டுக்குப் போயிட்டா. மகனுக்கு மட்டும்தான்னு நான் சொன்னா, 'என்ன, கணவன் கூட ஒத்து வாழத் தெரியாதவளா இருக்காளேன்னு உன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்? என்னைப் பற்றித்தான் என்ன நினைப்பார்? அவர் அப்படி நினைக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான் பூவைக் குறைக்காமல் வாங்கிட்டு வந்தேன். உன்னைப் பற்றி யாரும் தாழ்வாகப் பேசினாலும், நினைத்தாலும் என்னாலே நிம்மதியாயிருக்க முடியாது.. ஆனா... நீயோ?''

''உங்களைப் பற்றி ஒருவர் தாழ்வாகப் பேசினால் நான் மட்டும் நிம்மதியா இருப்பேனுங்களா?''

''இன்னொருத்தர் தாழ்வாகப் பேசறது என்ன, நீயே என்னைத் தாழ்வாகப் பேசிட்டயே? பேசவும் வச்சிட்டயே?''.

''இப்படியெல்லாம் ஆகுமென்று நான் நினைச்சுப் பார்க்கவேயில்லீங்க! அந்த எண்ணமே எனக்கு வரலீங்க! நீங்க சொன்ன பிறகுதான் விளங்குதுங்க.... இல்லாட்டி அப்படிச் சொல்லியிருப்பேனா?''

''சரி சரி. நீ அழாதே... எங்கே சிரி...'' என்று அவளின் முகவாயை நிமிர்த்தினான்.

அவள் அளவற்ற காதலோடு அவரை இறுக அணைத்துக் கொண்டாள்.

ஒற்றன் 4X-1   சித்திரக்கதை: புஞ்ஜாய்   5



புதிய தொப்பி

அழகிய பெண்மணி ஒருத்தி ரொம்பவும் பிரசித்தி பெற்ற தொப்பிக் கடை ஒன்றில் நுழைந்தாள். தான் அணிந்திருந்த புதிய உடைக்குத் தகுந்த பொருத்தமான தொப்பிக்காகக் கிட்டத்தட்ட 30, 40 தொப்பி களைப் பார்த்திருப்பாள். மணியோ ஓடிக் கொண்டிருந்தது. கடைசியில் ஒரு வழியாகத் திருப்தியுடன் ஒரு தொப்பி எடுத்தாள். "ஓ, ரொம்ப பிரமாதமாக இருக்கிறது. இந்தத் தொப்பியைத் தயவு செய்து 'பாக்' செய்து தருகிறீர்களா?" என்றாள்.

"ஓ, தாராளமாக மேடம்" என்றார் கடைக்காரர். "ஆனால் ஒன்று உங்கள் கவனத்துக்குக் கொண்டு வரலாமா? இந்தத் தொப்பி, நீங்கள் இந்தக் கடைக்குள் நுழையும்போது உங்கள் தலையில் இருந்ததுதான்!"

—ராதா சுப்பிரமணியன்

✖

நீங்கள் கோபமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும், அறுபது விநாடி மகிழ்ச்சியை இழக்கிறீர்கள். —ஜாம்ஸ்

—கமல்



உவமைகள்

※ நேரம் போகப்போக வெ ளுக்கும் சாயங்களைப் போல் ஒழுங்கின்றிச் சிதறிக் கிடக் கும் குடிசைகள்.

※ பத்துக் காசு விளிம்பு மாதிரி நெளிநெளியாய் இருக்கிற பிளேட்டில் தான் அவருக்குச் சாப் பிடப் பிடிக்கும்.

※ பிரசவித்த பிறகு முதல் முறையாகக் குழந் தையைப் பார்க்கும் தாயைப் போல அவன் தானியக் குவியலைப் பார்த்துக்கொண்டே நின் றிருந்தான்.

※ மனித உள்ளங்களைப் போல மேடும் பள்ளமும், குண்டும் குழியும் நிறைந்த ரோடு.

※ விளைந்த பனைமரம் போல் கறுத்த மேனி அவனுக்கு.

※ இரண்டாவது ஆட்டம் முடிந்தது. இடை ஆடுகள் கலந்து கூட்டமாய்ச் செல் வது போல் சாலையில் ஆட் கள் போய்க் கொண்டிருந் தார்கள்.

— இராகுலதாசனின் 'அக்கரைப் பூக்கள்' கதைத் தொகுதியிலி ருந்து. -தொகுத்தவர்: டாக்டர் இரா. மோகன்

※

எல்லோருக்கும் கதா நாயக வேடம் கொடுத்து நடிக்கச் செய்யும் ஒரே டைரக்டர்- இறைவன் தான்! —வ. தேனப்பன்


※

13, ஜனவரி 1979

லக்ஷ்மிக்கு ஒரு இருண்ட தினம்

16 பிப்ரவரி 1979

லக்ஷ்மி வாழ்க்கையைத் தனியே சமாளிக்க நம்பிக்கை யுடனும், பொருளாதாரப் பாதுகாப்புடனும் இருக்கிறாள்.



9 டிசம்பர் 1978

விஜய். கேரளாவில் கொச்சியைச் சேர்ந்த ஒரு மெகானிக், தனது ரூபாய் 5000 காப்புத் தொகைப் பாலிசியின் முதல் மும்மாதத் தவணைப் பிரீமியத்தைச் செலுத்தினர்.

13 ஜனவரி 1979

விஜய் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இறந்தார். மனைவி லக்ஷ்மியும், சிறிய பெண் குழந்தையும் தனித்து விடப் பட்டனர்.

20 ஜனவரி 1979

விஜய்யின் மரணம் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனுக்குத் தெரிவிக்கப்பட்டது. எல்ஐஸி உரிமைக் கோரிக்கை மனுக்களை வழங்கியது. உரிமை கோருபவர் மனுக்களைப் பூர்த்தி செய்து தேவைப்பட்ட பத்திரங்களுடன் அனுப்பினர்.

16 பிப்ரவரி 1979

எல்ஐஸியின் திருவனந்தபுரம் பகுதி அலுவலகம் உரிமைத் தொகையை வழங்கியது. லக்ஷ்மிக்கு காசோலை கிட்டியது.

1978 79ல் எல்ஐஸியால் தீர்க்கப் பட்ட 78000 உரிமைக் கோரிக்கைகளுக்கான மொத்த தொகை 55.05 கோடி ரூபாயில் இதுவும் ஒன்று.

(இது ஒரு உண்மைச் சம்பவம் ஆனால் வெளிப்படையான காரணங்களுக்காக புனைப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.)

எல்ஐஸி தன் அலுவலகச் செயல்முறைகளை எளிமையாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. உதாரணமாக, ரூபாய் 5000 அல்லது அதற்குக் குறைவான காப்புத் தொகை கொண்ட பாலிசிகள் வரை, சரியான வயதிற்கான சான்று, பாலிசிப் பத்திரம் காணாமல் போயிருந்தால் தரவேண்டிய உத்திரவாதம், முதல் நோக்கிலேயே உண்மையானதாகத் தோன்றும் உரிமைக் கோரிக்கைகளின் மீதான விசாரணை முதலியன அநேக முறை விட்டுக் கொடுக்கப்படுகின்றன. குறைந்த காப்புத் தொகைப் பாலிசிதாரர்களின் தேவைகளை மனதில் கொண்டு உரிமைக் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்காக வேண்டப்படும் ஆதாரங்களை மறு பரிசீலனை செய்வது என்பது இங்கு நடந்துவரும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும்.

பெரும்பாலான உரிமைக் கோரிக்கைகளில், கீழ்க்காணும் அடிப்படைத் தேவைகள் உரிமைத் தொகையைத் தீர்த்து வைக்க உதவும்:

- தகுதி வாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட மரணச் சான்றிதழ்
- பாலிசிப் பத்திரம்
- உரிமைத் தொகைக்கு நியமிக்கப் பட்டவர் அல்லது வாரிசுதாரரால் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கை மனு
- அனுபவப் பாத்தியம் உடையவரின் சார்பில் நியமனம் பாலிசிப் பத்திரத்திலேயே இருந்தால் உதவியாயிருக்கும்.

கண்டுபிடிக்கப்பட்ட மோசடி அல்லது முக்கிய தகவல் மறைக்கப்பட்டிருத்தல் என்ற அடிப்படையின் மீதிருந்தாலொழிய எந்த உரிமைக் கோரிக்கையும் நிராகரிக்கப் படுவதில்லை.

இருந்தாலும், எங்களின் பெரு முயற்சிகளை மீறி சில கோரிக்கைகளைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்த பின்னரும் எவரேனும் உரிமைக் கோரிக்கைகளை தீர்ப்பதில் தாமதத்தை உணர்ந்தால் எல்ஐஸியின் பகுதி அலுவலகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம். அவர் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் உதவுவார்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

RADEUS/LIC/SP-34



கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 27

பெண் சுதந்திரம்

சிந்தி துர்க்கத்தின் கருங்கல் சுவரில் கோயில் போல் சுற்றிலும் வெட்டப்பட்டு அதன் நடுவே இருந்த அந்தச் சிலையைத் தொட்டதும், தலையிலிருந்த வெள்ளிக் கிரீடத்தை அசைத்ததும் ராணி ஏன் அத்தனை தூரம் சினத்தின் வசப்பட்டாள் என்பதை உணராத டெய்லரும் இங்கலண்டும், அவளை வியப்புடன் நோக்கினார்கள். வியப்பைச் சிறிது அடக்கிக் கொண்டு, இங்கலண்ட் கேட்டான்: ''ராணி! ஒரு சிலையைத் தொட்டதற்கு ஏன் இத்தனை கோபம் உனக்கு?''

ராணியின் கண்களில் முதலில் துளிர்த்த கோபம் சிறிதும் அடங்கவில்லை யென்பதை அவள் சொன்ன பதிலும் நிரூபித்தது. ''இங்கலண்ட்! நீ அந்தத் தெய்வத்தைத் தொட்டதையோ கிரீடத்தை அசைத்ததையோ என்னைத் தவிர வேறு யார் பார்த்திருந்தாலும் இத்தனை நேரம் நீ எமலோகத்தில் இருப்பாய். நல்ல வேளை நான் பார்த்தேன்'' என்ற அவள் சொற்களிலும் கடுமை மிக அதிகமாக இருந்தது.

டெய்லர் ராணியின் சினத்துக்குக் காரணம் புரியாமல் விழித்தான். ''உங்கள் நாட்டில் சிலையைத் தொடுவது அத்தனை குற்றமா?'' என்று வினவவும் செய்தான்.

ராணியின் பதில் ரத்தினச் சுருக்கமாய் இருந்தது. ''தொடும் சிலையைப் பொறுத்தது'' என்று.

''இது என்ன அப்பேர்ப்பட்ட சிலை? விச் காட் ஈஸ் இட்? (இது எந்தத் தெய்வம்?)'' என்று வினவினான் இங்கலண்ட்.

''சிவாஜி மகாராஜா!'' என்றாள் ராணி அவன் அறியாமையை உணர்ந்ததால் சிறிது சினம் தணிந்து.

''சிவாஜி ஈஸ் நாட் காட் (சிவாஜி கடவுள் இல்லை)'' என்றான் இங்கலண்ட்.

''நாட் டு யூ. பட் டு அஸ். ஹி ஈஸ் எ காட் (உங்களுக்கல்ல. ஆனால் எங்களுக்கு அவர் கடவுள்.)'' என்ற ராணி மேலும் சொன்னாள்: ''ஹிந்து மதம் அழிய இருந்த காலத்தில் தோன்றிய தெய்வம் அவர். அவரில்லாவிட்டால் மகாராஷ்டிரர்களுக்கு இன்றுள்ள சாம்ராஜ்யம் கிடைத்திராது. இந்துக்கள் கதி அதோகதி ஆகியிருக்கும். ஹி ஈஸ் அவர் ஸேவியர் (அவர் எங்களைக் காப்பாற்றியவர்)'' என்றும் விளக்கினாள்.

அதற்குப் பிறகு மூவருமே சிறிது மௌனம் சாதித்தார்கள். இங்கலண்டே அந்த மௌனத்தைக் கலைத்து, ''ஸிஸ்டர்! வி ஆர் ஸாரி டு ஹேவ் அபெண்டட் யுவர் ஸென்டிமென்ட். பட் திஸ் ஹியர் ஹட் லுக்ஸ் லைக் எ ஸெய்லர் அன்ட் சிவாஜி வாஸ் நாட் ஒன் (சகோதரி! உங்கள் தெய்வீக நம்பிக்கைக்கு அபசாரம் விளைவித்ததற்கு வருந்துகிறோம். ஆனால் இங்குள்ள இந்தச் சிலை ஒரு மாலுமி மாதிரி இருக்கிறது. சிவாஜி மாலுமி இல்லையே)'' என்றான்.

ராணியின் முகத்தில் கோபம் மறைந்தது. பெருமை அதில் நிலவியது. ''யூ ஆர் ராங் இங்கலண்ட்! சிவாஜி வாஸ் தி கிரேடெஸ்ட் ஸெய்லர் ஆப் அவர் டைம் (தவறு இங்கலண்ட். சிவாஜி நமது காலத்திய சிறந்த மாலுமி)'' என்று கூறிய ராணி மேலும் தொடர்ந்து, ''இங்கலண்ட், டெய்லர்! சிவாஜி அசைக்க முடியாத மொகலாய சாம்ராஜ்யத்தை அசைத்தபோதே கடலால் தான் கரையைக் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்தார். அதனால்தான் கடற்கரை ஓரமாக இருந்த பல கோட்டைகளைப் பிடித்தார். இந்தக் கோட்டையை அதனால் தான் கட்டினார். அவர் கைகளைக் கொண்டே

நூறு மைல் வேகத்தில் கார் ஓட்டி வந்த ஒருவரை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

''நான் ரொம்ப வேகமாக ஓட்டினேனோ?'' காரோட்டி சந்தேகமாகக் கேட்டார்.

''இல்லை; ரொம்பத் தாழ்வாகப் பறக்கிறீர்கள்'' எரிச்சலுடன் சொன்னார் போலீஸ்காரர்.

-ஆர். எம்.



கட்டினார். "கூலிகளோடு சரியாக அவரும் கற்களையும், கட்டுச் சோற்றையும் தலையில் சுமந்து சென்றார்.'' இதைச் சொன்ன ராணியின் கண்களில் கனவு படர்ந்தது. ''இங்கலண்ட்! தமிழில் கதை ஒன்றிருக்கிறது உனக்குத் தெரியுமா?'' என்று கனவில் பேசுவது போல் கேட்ட ராணி அவன் பதிலுக்குக் காத்திராமல், ''சிவபிரான் கூலிக்காகப் பிட்டுக்கு மண் சுமந்தாராம். இங்கு பிட்டுகூடக் கொடுப்பார் இல்லை. சிவாஜி மகாராஜா கல் சுமந்தார். கடவுள் உட்பட பெரிய காரியங்களைச் சாதிப்பவர்கள் எந்தப் பணியையும் மரியாதைக் குறைவாக நினைப்பதில்லை. இட் சஸ் இவன் டு த பெட்டி டு திங்க் இன் டர்ம்ஸ் அப் எ கிரேட் ஜாப் அண்ட் எ ஸ்மால் ஜாப் (சின்ன மனிதர்கள்தான் சில பணிகளைப் பெரிதாகவும் சிலவற்றைச் சிறியதாகவும் நினைக்கிறார்கள்.) ஆகையால் சிவாஜி மகாராஜா தமது புத்தியால் திட்டமிட்டுக் கையால் கட்டியது இந்தக் கோட்டை. ஆகவே அவருக்கு இதில் ஒரு கோயில் அமைத்தோம். மாலுமி போன்ற உடையும் அளித்தோம். இந்தக் கோயிலைக் கட்டியது அவரது மகன் ராஜாராம்'' என்று விளக்கினாள்.

ராணியின் கனவுரை மேலும் தொடர்ந்தது: ''இங்கலண்ட்! இந்தக் கோட்டை உங்கள் கணக்கில் 48 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. இரண்டு மைல் சுற்றளவுள்ளது. இங்குள்ள ஸ்தூபிகள் மீது ஏற 45 சுழற்படிகள் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கோட்டையில் பவானி, மஹாதேவ், ஜரிமாயி, மகாபுருஷர் இவர்கள் கோயில்களும் இருந்தாலும் சிவாஜி மகாராஜாவின் சிலை மட்டுமே சாளக்கிராமக் கல்லால் கட்டப்பட்டது. நீ தொட்ட வெள்ளிக் கிரீடம் ராஜாராமே செய்தது. அதுவும் திட்டத்தட்ட மாலுமிகளின் குல்லாய் மாதிரி இருக்கிறதைக் கவனியுங்கள். இந்தக்கோட்டையின் வெளிச் சுவரில் சிவாஜி மகாராஜா வழிபட்டு வந்த மாருதி சிலை இருக்கிறது. இத்தனை கோயில்களில் சிவாஜி மகாராஜாவை மாத்திரம் யாரும் தொடக் கூடாது என்ற நிபந்தனை இருக்கிறது. நேபாளம் முதலிய வடநாடுகளிலிருந்து வருகிறவர்கள் அவர்கள் தேச வழக்கப்படி மற்ற தெய்வங்களைக் கையால் தொட்டும் அணைத்தும் வழிபடலாம். ஆனால் சிவாஜி மகாராஜாவை யாரும் தொட முடியாது. அப்பேர்ப்பட்ட சிலையைத்



தொட்டாய். கிரீடத்தை அசக்கினாய். மகா அபசாரம்.''

இதற்குப் பிறகு உணர்ச்சிகளை ஓரளவு அடக்கிக் கொண்ட ராணி ''தெரியாமற் செய்த குற்றம். மன்னிக்கத் தகுந்தது. இன்றிரவு மகாராஜாவுக்கு அபிஷேகம் நடக்கும். நீங்களும் வந்து பாருங்கள்'' என்று கூறினாள்.

''எதற்கு அபிஷேகம்?'' என்று கேட்டான் டெய்லர்.

''டு த ஸக்ஸஸ் ஆப் அவர் என்டர்ப்ரைஸ் (நமது திட்டத்தின் வெற்றிக்கு)'' என்றாள் ராணி. ''நமக்கு வெற்றி நிச்சயம். *பிரிட்டிஷ் கம்பெனிக் கப்பல்கள் இனி நமது வசம்'' என்றும் சொன்னாள் ராணி.

அவள் குரலிலிருந்த உறுதியைக் கவனித்த இங்கலண்டும் டெய்லரும் பிரமித்தார்கள். ''ராணி! இனி நாங்கள் எந்தச் சிலையையும் தொடுவதில்லை'' என்று உறுதியும் கூறிவிட்டுக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கச் சென்றார்கள். ராணி மகாராஜாவின் கிரீடத்தைச் சரிப்படுத்தி அவர் கால்களில் தலையை வைத்து வணங்கிவிட்டுச் சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கிச் சென்றாள்.


அன்று காலை மிகவும் ரமணீயமாயிருந்தது. சூரியன் நன்றாகவே எழுந்து விட்டதால் பனிகூட நன்றாக விலகி இதமான உஷ்ணம் அவள் கன்னங்களுக்குப் புது மெருகைக் கொடுத்தது. கடல் காட்டிய விந்தைகளைப் பார்த்துக் கொண்டே கோட்டை வாசலுக்கு வந்த ராணி அதன் பக்கவாட்டில் சென்று அங்கிருந்த ஒரு சிறு படகில் ஏறிக் கோட்டையின் மறு

* Maharashtra State Gazetteer-Ratnagiri Dt.-Page 770-Sub-head.-''Malavan Sindhudurg.''



பக்கம் சென்று அங்கிருந்த அந்தப் பழைய அறைக்குள் நுழைந்தாள். அங்கு எப்பொழுதும் போல் இருந்த தனது குளிக்கும் சேலையைக் கண்டு மகிழ்ந்து இடைச் சேலையைக் களைந்து அந்த நீராட்டக் குட்டைச் சேலையை மகாராஷ்டிரப் பெண்களின் பாணியில் மூலக்கச்சமாக அணிந்து மார்பை மறைத்துக் கழுத்தில் இறுகச் சுற்றிக் கொண்டாள். பிறகு வெளியே வந்து பாறைகளில் இறங்கி அலைகளில் மூழ்கி எழுந்து கடலில் கைமார் போட்டு நீந்திச் சென்றாள். அவளுக்கு முன்பே கொள்ளைக் கப்பலின் வெள்ளை மாலுமிகள் பலரும் கடலில் நீந்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் பலிஷ்டர்களுக்கு இணையாக ராணியும் நீந்தினாள். சில வேளைகளில் அவள் வேகத்தைப் பிடிக்க முடியாத வெள்ளைக்கார மாலுமிகள் வியப்பின் வசப்பட்டார்கள். சில சமயங்களில் நீருக்குள் மறைந்து நீந்தினாள் ராணி. சிலசமயங்களில் திடீரென வெளியே வந்து மல்லாந்து வாயிலிருந்து நீரை வாணம் போல் ஊதினாள். கால்களை உதைத்து வேகமாகமல்லாந்த நிலையிலும் நீந்தினாள்.

அவள் நீந்தியதைக்கண்டு சில மாலுமிகள் மலைத்தார்கள். சிலர் அழகைக் கண்டு மலைத்தார்கள். சிலர் அவள் நீச்சல் லாகவத்தைக் கண்டு மலைத்தார்கள். இவர்கள் மட்டுமல்ல மலைத்தது. சிந்து தூர்க்கத்தின் கழற் படிகளில் ஏறிக் கோட்டை மதிலின் மீது ஏறிய மற்றும்



பிறந்தநாள் பரிசு

டிபுன்னெல், ஷால் என்ற இருநண்பர்கள் ஒரு நாள் அந்த ஊர் மேயர் வீட்டு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். மேயர் வீட்டு மாடி அறை ஜன்னலில் ஒரு வாத்து தொங்கவிட்டிருப்பதைப் பார்த்தார்கள். நாக்கில் ஜலம் ஊறிற்று. அதை எப்படியாவது அபகரிக்க வேண்டும் என்று இருவரும் திட்டம் செய்தார்கள். அதன்படி அன்றிரவு ஒரு ஏணி கொண்டுவந்து அந்த ஜன்னற்புறமாகச் சாத்தி கீழே ஷால் ஏணியைப் பிடித்துக்கொள்ள டிபுன்னெல் மெள்ள ஏணியில் ஏறினான். வாத்தையும் மெள்ள எடுத்து விட்டான். அப்போது எதிர்பாரா விதமாக ஒரு போலீஸ்காரர் அந்தப்பக்கம் வந்து தொலைத்தார். "என்ன செய்கிறீர்கள் இங்கு இருவரும்?" என அதட்டினார்.

கீழே ஏணியைப் பிடித்திருந்த ஷால் கொஞ்சம் கூட தயங்கவில்லை. "நம் மேயருக்கு நாளை பிறந்தநாள் இல்லையா? அதுதான் அவரை சந்தோஷப்படுத்த அந்த வாத்தைப் பிறந்த நாள் பரிசாக அவருக்குத் தெரியாமல் இந்த ஜன்னலில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறோம்" என்றான்.

"ஓ, ரொம்பவும் நல்ல காரியம்தான்! ஆனால் அதைக்காலையில் நேரிலேயே கொடுத்துவிடுங்கள். இந்த மாதிரி நடுராத்திரியில் செய்வது ரொம்பவும் தப்பு" என்றார் போலீஸ்காரர்.

உடனே டிபுன்னெல்லை நோக்கி ஷால் கத்தினான்: "ஏய், அந்த வாத்தைத் திரும்பிக் கொண்டுவந்து விடு!" —ராதா சுப்பிரமணியம்

ஜெர்மானிய குட்டிக் கதை

சில மாலுமிகளும் அவன் நீச்சலைக் கண்டு வியந்து வாயைப் பிளந்து கொண்டு நின்றார்கள்.

அவர்களில் ஒரு மாலுமி சொன்னான்: "ஹீ ஈஸ் எ பிஷ் (அவன் ஒரு மீன்)" என்று.

இன்னொருவன் ஆட்சேபித்தான். "நோ! ஹீ ஈஸ் எ ஷார்க் (இல்லை. அவன் ஒரு சுறா)" என்று கூறினான்.

"ஷார்க் ஆல்ஸோ ஈஸ் எ பிஷ் (சுறாவும் மீன்தான்)" என்று இடைபுகுந்தான் இன்னொருவன்.

"வாட் எவர் ஹீ ஈஸ், ஹீ ஈஸ் ப்யூடிபுல் (அவன் எதுவாயிருந்தாலும் அழகாயிருக்கிறான்)" என்றான் மற்றொருவன்.

இப்படிப் பலரும் தன்னைப் பார்த்ததையோ பார்த்து வியந்ததையோ பற்றிக் கவலை சிறிதளவும் படாமல் நீந்திய ராணி சூரியன் உச்சிக்கு வந்து விட்டதைக் கவனித்து மீண்டும் நீந்தி துர்க்கத்தின் பெரும் சுவரை நோக்கிச் சென்றான். அவனைத் தொடர்ந்து நீந்த முற்பட்டவர்களைத் தனது சைகையினால் எச்சரித்து நிறுத்திவிட்ட ராணி திடீரென நீரில் மூழ்கிவிட்டான். அவன் எங்கு கிளம்புகிறான் என்பதைக் கொள்ளைக்கார மாலுமிகள் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவனும் ம் போட்டுப் போய.. ஆனால் மூழ்கிய ராணி கிளம்பவில்லை. அடியோடு நீரில் மறைந்து விட்டான். இதனால் திகைத்த கொள்ளையர்கள் தங்கள் வெள்ளைச் சடலங்களைக் கோட்டையின் வாயிலை நோக்கிச் செலுத்தினார்கள்.

எல்லோரையும் ஏமாற்றிவிட்ட உற்சாகத்துடன் கோட்டை மதிலுக்கு வெளியிலிருந்த அறைக்கு அருகிலிருந்த பகுதியில் நீரிலிருந்து வெளியே தலையைக் கிளப்பிய ராணி நகைத்தான் மிக இன்பமாக. பிறகு துரிதமாகப் பாறையில் தொத்தி ஏறி வந்து அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். சாத்திக் கொண்டு ஈர ஆடையைக் களைந்த ராணி யாருமில்லையென்ற தைரியத்தில் உடலை நன்றாகத் துடைத்துக் கொண்டு பிறந்த மேனியில் அந்த அறையில் உலாவினான். பிறகு ஏற்கனவே களைந்து வைத்த உலர்ந்த உடையைத் தரித்துக் கொண்டான். தலையை நன்றாகத் துவட்டிக் கொண்டான். பிறகு வெளியே வந்து கதிரவன் உஷ்ணத்தில் தனது கூந்தலை ஆற்றினான். இடம் ஏகாந்தமானதால் தனது மேலாடையையும் சிறிது நீக்கி மார்புக்கும் சிறிது உஷ்ணத்தைக் கொடுத்தான். "நல்லவேளை, இங்கு யாருமில்லை. இன்றாவது நான் சுதந்திரமாக இருக்க முடிகிறது" என்று கூறிக் கொண்டு திறந்த அறைக் கதவை மூட முயன்றான். முயன்றவன் சீற்றத்துக்கு இலக்கானான். அவன் நினைத்தபடி ஏகாந்தமில்லை அங்கு. அந்தப் பழைய சோம்பேறி கதவின் மறுபுறமிருந்த பாறையில் ஒருக்களித்துச் சாய்ந்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

'அவன் எப்பொழுது வந்தான்? எப்படி வந்தான்? தான் மார்பைக் கதிரவனிடம் உஷ்ணப்படுத்திக் கொண்டிருந்ததைப் பார்த்திருப்பானோ?' என்ற பல யோசனைகள் அவன் இதயத்தை ஊடுருவிச் சென்றதால் அவனை அணுகிப் பார்த்தான் அவன். அவன் உண்மையாகவே தூங்குகிறான் என்பது அவன் ஒரே சீராக விட்டுக் கொண்டிருந்த பெருமூச்சால் தெரியவே அவனிடம் பரிதாபப்பட்டு, "பாவம் அலுத்திருக்கிறார்!" என்று கூறிக்கொண்டு அவனை தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டான். ஆனால் ஓர் ஏமாற்றம்! அவன் நினைத்தபடி அவன் உறக்கம் உண்மை உறக்கமல்ல. அதற்குச் சான்றாக அவன் கை அத்தனை தூக்கத்திலும் அவன் இடையை நாடி வளைந்தது. "பெண்களுக்குச் சுதந்திரம் என்பது கிடையாது போலிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ராணி பெருமூச்செறிந்தாள்.

(தொடரும்)

கடுகு பதில்கள்!





⌘ ஆ. சீனிவாசன், திருச்செந்தூர்

கே. பச்சையாகச் சாப்பிட்டால் கசக்கும் கடுகு தாளித்தவுடன் சுவை பெற்று விடுகிறதே?

ப: இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள், ''பச்சை'' விஷயங்கள் ருசியானவை அல்ல என்று!

⌘ டி. எம். சி. வாசுதேவன், சென்னை-17

கே. தங்களுக்கு நோபல் பரிசு தரப் போவதாகக் கனவு கண்டேன்?

ப: நீங்கள் மட்டுமா? நானும் கூடத்தான் கனவு கண்டு கொண்டு இருக்கிறேன். அதுமட்டுமல்ல, தாங்கள் நல்ல கேள்வி என்றாவது ஒரு நாள் கேட்பீர்கள் என்றும் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்.

⌘ எஸ். நவநீதன், திருவொற்றியூர்

கே. தமிழில் யாருடைய சுய சரிதங்களைத் தாங்கள் சிபாரிசு செய்வீர்கள்?

ப: உ. வே. சாமிநாதய்யரின் 'என் சரித்திரம்', நாமக்கல் கவிஞரின் 'என் கதை' இரண்டையும்தான். சிறிதுகூடக் கற்பனை இல்லாத, இயல்பான, எளிமையான நூல்கள். கவிஞரின் 'என் கதை'யில் நவரசமும் உண்டு. அவரது முதல் மனைவி முத்தம்மாளின் மரணம் நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும்.

⌘ எஸ். கோபாலன், சென்னை-33

கே. திருவல்லிக்கேணியில் பழைய வீட்டை இடிக்கும் போது, 'என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் இடிக்காதீர்கள்' என்று ஆவி பேசியதாக 'ஹிந்து'வில் வந்திருக்கிறதே?

ப: ஆவி பேசியிருக்காது. அங்கு பல வருடங்களாக வசித்து வரும் பெருச்சாளிகளில் ஒன்று அப்படிப் பேசியிருக்கலாம்!

⌘ பி. ஆர். கண்ணன், ஆதம்பாக்கம்

கே. 'காஞ்சிப் பெரியவாள் அனுக்கிரகத்துடன்' என்று திருமணப் பத்திரிகையில் அச்சிட்டுவிட்டு அவரது கொள்கைக்கு மாறாக வரதட்சிணை வாங்குவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர்கள் இரட்டைக் குற்றவாளிகள். வரதட்சிணை வாங்கிய குற்றம் போதாதென்று பெரியவாளின் அநுக்கிரகத்தையும் வேண்டுவது மாபெரும் குற்றம்.

⌘ மல்லிகை மணாளன், பெரியகுளம்

கே. கோமளி என்ன கோமாளியா?

ப: இல்லை. கோபமாளி.

⌘ பத்ரிநாத், திருச்சி

கே. சர்க்கஸ் என்றால் எனக்கு பித்து; உங்களுக்கு?

ப: வெகுகாலம் வரை நானும் சர்க்கஸ் பித்தனாக இருந்தேன். கிட்டத்தட்ட எல்லாச் சர்க்கஸ்களிலும் ஒரே மாதிரி வித்தைகள்தான் என்றாலும், அவைகளின் கவர்ச்சி குறையவில்லை. ஒருசமயம், பத்திரிகைக்காரன் என்ற காரணத்தில் முதல் வரிசையில் உட்கார வைத்தார்கள். வித்தைகள் செய்யும்போது சிறுவர், சிறுமிகள் ஆண் பெண்களின் நரம்புகள் புடைப்பதும், மூச்சுத் திணறுவதும் விழி பிதுங்குவதும், முதல் வரிசையிலிருந்து பார்த்த போது தெளிவாகத் தெரிந்தது. இப்படி அவர்கள் கஷ்டப்படுவதுதான் — அவர்கள் செய்யும் வித்தைகளை விட என்னை வெகுவாக ஆக்கிரமித்துக் கொண்டது. அன்றிலிருந்து சர்க்கஸின் மேலிருந்த பித்தம் நீங்கிப் பச்சாத்தாபம் ஏற்பட்டது.

⌘ இரா. ஞானராமன், திருவாரூர்

கே. விதி என்றால் என்ன?

ப: நமக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கான காரணத்தை ஏற்கும் சுமைதாங்கி. நமக்கு ஏதாவது லாபம் வந்தால், ''என் விதி அதுதான் லாட்டரியில் பரிசு கிடைத்தது'' என்கிற மாதிரி யாராவது எப்போதாவது சொல்லிக் கேட்டிருக்கிறீர்களா?

⌘ மிஸ். பி. மது, திருச்சி 18

கே. லாபகரமான கேள்வி-பதில் பகுதிக்கு எந்தப் பத்திரிகையைச் சிபாரிசு செய்வீர்கள்?

ப: இதை என்ன வியாபாரமாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கேள்விக்குப் பதில்: பிலிம்-பேரில் ஜோஜருக்கு எழுதுங்கள் மிஸ். பரிசு அதில் அதிகம். செக்ஸ் கேள்விகள் 'செக்ஸஸ்புல்லாக' இருப்பதைப் பார்த்து வருகிறேன்.

⌘ மாலினி கிருஷ்ணசாமி, சென்னை 17

கே. எந்த எழுத்தாளரின் வார்த்தை ஜாலங்கள் உமக்குப் பிடிக்கும்?


ப: புஷ்பா தங்கதுரையின் கதைகள் ஏறத்தாழ இருந்தாலும் நடையும் சொல் சிலம்பமும் பிரமாதமாக இருக்கின்றன. வார்த்தைகளும் கருத்துக்களும் புதுமையாகவும் அழகாயும் விழுகின்றன. நூறு உதாரணங்களைச் சொல்ல முடியும். என்றாலும் சாம்பிளுக்கு ஒன்று: என் பார்வை மட்டும் கத்திகளானால் அவள் பெண் தன்மைகளில் பல கீறல்கள் விழுந்திருக்கும்!

ரூ. 5 பரிசு பெறுபவர்:

பி. ஆர். கண்ணன்
பிளாட் நெ. 2, லக்ஷ்மிஹயக்ரீவ நகர்,
சென்னை-600 088

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

படுத்தி வைக்கும் பாப்பாவையும் பாராட்டி வளர்க்கும் பாசக் கரமே



தீராத விளையாட்டுப் பிள்ளை
அவன். எனினும் அவனை
சீராட்டி வளர்க்க நீங்கள்
எதனையும் செய்வீர்கள்:
குளிப்பாட்டி, உடை உடுத்தி,
உணவூட்டி, உடல் நலம்
பேணிக்காப்பதில் நீங்கள்
எடுத்துக் கொள்ளும்
கவனம்தான் எவ்வளவு?

கருத்துள்ள அதே கவனம்
பளிச்சிடுமே நீங்கள் அவனுக்கு
தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டிலும்.
திண்ணம் அதுவே, தீவிர
சுகாதார முறையில் கைபடாத்
தூய்மையோடு தயாரித்த
பிஸ்கட். நீங்கள் அவனுக்கு
ஊட்டும் உணவிலே உள்ளதைப்
போன்ற நிகரான ஊட்டச்சத்து
அதிலே: பால், சர்க்கரை,
க்ளுகோஸ், செரிப்பதற்கு
எளிதாக இழைய அரைத்த
கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள்
கரம் தொடும் அந்த பிஸ்கட்.
கரகரப்பானது சுவைமிக்கது.
கொரித்து ரசித்து மகிழ்வானே
உங்கள் குழந்தை.

எண்ணிப் பாருங்கள்: 7 உலக
விருதுகளை வென்ற இந்தியாவின்
அதிநவீன பிஸ்கட்
தயாரிப்பாளர்களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த
வண்ணமய உறையை பார்த்து
வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

everest/79/PP/195 tm

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

பகலில் ஓர் உறவு!

'ஜெயசுதா'



திருமபுரி மாவட்டத்திலுள்ள தெங்கணிக் கோட்டை. வெளிச்சம் புகாத அடர்ந்த காட்டுப் பகுதி. அங்கே—

பகலில் ஓர் இரவு!

பெரும் புதர் மறைவில் ஓரிடத்தில்—

இருளியை உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டு வெறியோடு கிடந்தான் கூழன்.

அவர்கள்—

அந்தக் காட்டுப் பகுதியில் வசிக்கும் பழங்குடி இனத்தவர்கள்.

கூழனுக்கு இருளியின் மேல் பல நாட்களாகவே ஒரு கண் — அந்தக் கருத்த கற்பாறை போன்ற மேனியும், கலயம் போன்ற இளமை எழில்களும் —அவனைக் கிறுகிறுக்க வைத்திருந்தன.

இருளிக்கு அவன்மீது எப்போதுமே பிடிப்பு இருந்ததில்லை.

சுள்ளி பொறுக்க வந்த இடத்தில், தனிமையில் அவனிடம் இன்று மாட்டிக்கொண்டு விட்டாள் அவள். ஆனமட்டுக்கும் எதிர்த்துப் பார்த்தாள். பெண் பல்லியைப் பற்றிக் கொண்டுவிடும் ஆண் பல்லி போல், அவன் பிடி விடாததாக இருந்தது. இறுதியில்—

மனத்தில் மாந்துரையை நினைத்துக் கொண்டு மரக் கட்டை போல் கிடந்துவிட்டாள் அவள்.

தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ளப் போகும் அந்தத் தருணத்தில்—

இருளி கிசுகிசுத்தாள்.

''கூழா, ஆபத்து....''

ஆம். புதரின் மறுபக்கம் பெருஞ்சலசலப்பு.

ஆயிரம் பேர் ஒருசேரப் பெருமூச்சு விடுவது போன்ற சப்தம். அத்துடன் ஒரு விசேஷ வாசனை.

காட்டிலேயே பிறந்து, காட்டிலேயே வளரும் இருளிக்கு அது என்னவென்று புரிந்து விட்டது.

யானைகள் இணைசேரப் போகின்றன.

சட்டென்று உணர்வுக்கு வந்தான் கூழன்.

'சோடி ஆனைங்கன்னு ஆபத்துதான்.'

பிடி தளர, இருளி பட்டென்று எழுந்து புதரின் மறுபக்கம் எக்கிப் பார்க்க—

அங்கே, இரண்டு பெரு மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டுக் கிடக்க, அருகே ஆணும் பெண்ணுமாக இரு யானைகள். பெண் யானையின் உடலோடு உடல் உராய்ந்து கொண்டு, துதிக்கையோடு துதிக்கை பிணைத்துக்கொண்டு இணை சேரும் ஆயத்தத்தில் ஆண் யானை—

மனித வாசனையும், சலனமும் புரிந்து விருட்டென்று திரும்பிப் பார்த்தது பெண் யானை. இருளியைக் கண்ட மறு கணம் அங்கிருந்து விரைந்து ஓடலாயிற்று.

இணை பறிபோன கோபாவேசத்தில் மூர்க்கத்தனமாகத் திரும்பிப் பார்த்தது ஆண் யானை. அதே நேரம் கூழனும் அதைக் கவனிக்க, முதலில் அவன் கவனத்தை ஈர்த்தது—யானையின் நீண்ட பருத்த தந்தங்கள்.

யே அம்மாடி.....!

எம்மாம் பெரிசு....!

ரெண்டு தந்தமும் சேர்ந்தா இருபத்தைந்து கிலோவுக்குக் குறையாது. கிலோ ஆயிரம் ரூபாய்னு...?

அதற்குள் அந்த யானை இவர்களை நோக்கி வர ஆரம்பிக்க, திடீரென்று உயிர் மேல் ஏற்பட்ட பயத்தில்—

இருளியும் கூழனும் கண்மண் தெரியாமல் ஆளுக்கொரு பக்கமாய்ச் சிதறிக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.



வரிப் புலியால் துரத்தப்பட்டு மான் கூட்டத்திலிருந்து பிரிந்த ஒற்றை மான் பாய்ந்து பாய்ந்து ஓடுவது போல், நெடுந் தூரம் மூச்சிரைக்க ஓடிவந்த இருளி, சற்றுப் பயம் நீங்கி ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

அப்போது—

சற்றுத் தொலைவில்—

அவள் கண்ட காட்சி...

ஒரு பெரிய கரும் பாறை வெடித்துச் சிதறிக் கிடக்க, அதன் அருகே அவள் காதலன்—

மாந்துரை—

தோளில் 0.303 மஸ்கட்டைச் சுமந்து கொண்டு, காக்கி உடுப்பில்—

அவன் ஒரு வனத் துறைக் காவலன்.

குதித்துக் கொண்டு அவனிடம் ஓடினாள் இருளி.

அவள் வந்ததைக் கூடக் கவனிக்காமல் திகைத்துப் போய் நின்றிருந்தான் மாந்துரை. அவன் பார்வை நிலைத்திருந்த பக்கம் தன் விழிகளை ஓட்டினாள் இருளி.

அங்கே—

அது கரும்பாறையல்ல. யானை! தும்பிக்கை அறுந்து, கால்கள் ஒடிந்து சிதறிக் கிடந்தன.

"தொர.... என்ன இது?"

மாந்துரை திரும்பினான்.

"இருளி, எல்லாம் என் கெட்ட காலம். யானையை வெடி வச்சிக் கொன்னுருக்காங்க."

"வெடி வச்சா?"

"ஆமா. பாரு அதை. அது ஆண் யானை. அதோட தந்தத்தை அறுத்து எடுத்திட்டுப் போயிருக்காங்க பாரு. ஆனைத் தந்தத்துக்காக, அது வர்ற வழியிலே வெடிவச்சே சிதைச்சுக் கொன்னிருக்காங்க. திருட்டுப் பசங்க. சாதாரணமா துப்பாக்கியாலேதான் சுடுவாங்க. குறி தவறித் தப்பிச்சுப் போயிடுதுன்னு இப்பல்லாம் இந்த மாதிரி குரூரமா கிரானேட் வெடி வச்சே கொல்ல ஆரம்பிச்சிருக்காங்க, திருட்டுத்தனமா ஆனை வேட்டை ஆடுறவங்க. இதுனாலே என் வேலையே போயிடும்போலிருக்கு."

"ஒன் வேலை ஏன் தொரை போகணும்?"

"பின்னே இந்த மாதிரி திருட்டுத்தனமெல்லாம் நடக்காமப் பார்த்துக்கத்தானே என்னைப் போட்டிருக்காங்க."

"ஆனா, இவ்வளவு பெரிய காட்டிலே நீ என்னதான் குறியா இருந்தாலும் என்னத்தைச் செய்ய முடியும்?"

"அப்படியில்லே இருளி, என்னைப் போல பல வனத்துறைக் காவலர்கள் இருக்காங்க. எல்லாருக்கும் ஏரியா பிரிச்சுக் கொடுத்திருக்காங்க. எனக்கு ஏழு சதுர கிலோ மீட்டர் பார்த்துக்கணும்."

"அப்ப...?"

"ஆமா, இருளி. என்னோட ஏரியாவிலே இப்ப அந்தத் திருட்டுப் பசங்க சாகடிச்சிருக்கிறது மூணாவது ஆனை. வனத் துறை அதிகாரி எம்மேலேயே சந்தேகப்படுறாரு—நானே திருட்டு வேட்டைக்காரங்களுக்கு உடந்தையா யிருக்கிறேனென்னு."

"ஒம்மேலே அப்படி ஏன் சந்தேகப்படணும்?"

"நான் இந்தப் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவனா இருக்கிறதுனாலேதான். நம்ம உறவுக்காரங்களுக்கு நானே உளவு சொல்றேனென்னு நினைக்கிறாங்க. ஆனை நட-

மாட்டம் துல்லியமாத் தெரிஞ்சவங்க நூப்புக் குடுத்தாத்தான், சரியாத் திட்டம் போட முடியும்.''

ஆம். இருட்டுத் தந்தம் அறுத்து விற்கிறவர்கள், யானையைக் கொல்ல தொழில் முறை வேட்டைக்காரர்களுக்குப் பணம் கொடுத்து அழைத்து வருகிறார்கள். அவர்கள் திட்டமிட்டுக் கொல்வதற்கு நீண்ட தந்தமுள்ள யானைகள் காட்டுப் பகுதியில் எந்த இடத்தில் எந்த நேரத்தில் நடமாடும் என்கிற விவரங்கள் முன்கூட்டியே தேவைப்படுகின்றன. அதற்கு அந்தக் காட்டிலேயே வாழும் பழங்குடி மக்களைத்தான் நம்பியிருக்கிறார்கள்.

மாந்துரை வெறும் காவலனாக இருந்திருந்தால் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

அவன், அந்த ஏரியாவைச் சேர்ந்த பழங்குடி இனத்தவனாகவும் இருந்துவிட்டதனால்தான் சந்தேகமே.

தமிழ் நாட்டில் யானைகளின் சரணாலயங்கள் உள்ள சங்கரன்கோவில், சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், நந்தியூர், பர்கூர், முதுமலைக்காடுகள், அஞ்செட்டி, ஒசூர் ஆகிய எல்லா இடங்களிலும் ஓரிரு வருஷங்கள் வேலையும் பார்த்துவிட்டான். அங்கெல்லாம் அவனுக்கு நல்ல பெயர். அவனுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் திருட்டு நடந்ததேயில்லை.

சமீபத்தில்தான் தெங்கனிக்கோட்டைக்கு மாற்றல் ஆகியிருந்தான். இதுநாள்வரை நல்ல பெயர் வாங்கியிருந்ததே, அவனுக்கு எதிராக வேலை செய்தது. இங்கு மட்டும் ஒரே மாதத்தில் இரு யானைகள் கொல்லப்படவே, அவனது பழைய ரிகார்டுகளையெல்லாம் புரட்டிப் பார்த்த புது அதிகாரி, அவன் இதே தெங்கனிக்கோட்டையைச் சேர்ந்த பழங்குடி இனத்தவன் என்பதைத் தெரிந்து கொண்டபோது—

மனித மனத்தின் இயல்பான பலவீனம்—

அவன் மேல் தீவிரமான ஐயம் கொள்ளச் செய்தது. இதை அவர் வெளியே சொல்லவில்லையாயினும், அவர் இவனைப் பார்க்கும் பார்வையிலேயே கூர்த்த மதியுடைய மாந்துரைக்கு இந்தச் சந்தேகம் புரிந்தது. மேலும் இவனுக்கு மட்டும் அவர் விடுத்த எச்சரிக்கை ஒன்று—

''இனி ஒரு யானை, உன்னோட ஏரியாவிலே கொல்லப்பட்டதுன்னு, உனக்கு வேலை நிலைக்கிறது சந்தேகம்தான்.''

அதுதான் மாந்துரை நிலைகுலைந்து போனதற்குக் காரணம். எல்லா விவரமும் தெரிந்தபோது இருளிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

'உண்மையாக ஊழியம் புரியும் தன் காதலனுக்கு இப்படி ஒரு கெட்ட காலமா?'

அவள் மனத்துக்குள் அவர்களது முண்டத்துருத்தி அம்மனைப் பிரார்த்தனை செய்து கொண்டாள். 'இந்த இக்கட்டிலிருந்து மாந்துரையை எப்படியாவது காப்பாத்து.'

அன்று இரவு. பழங்குடியினரின் இருப்பிடம். காட்டரவிக் கொத்தாக நாற்பது குடிசைகள். கூழனின் குடிசையருகே ஆட்களின் நடமாட்டம். அடுத்த குடிசையில் உறங்கிக் கொண்டிருந்த இருளிக்குத் திடீரென்று விழிப்புக் கொடுத்துவிட்டது.

கிசுகிசுப்பான குரல்கள்.

அவள் மெல்ல மெல்ல உருண்டு குடிசை வாசலுக்கே வந்து விட்டாள்.

இருளில் ஒரு உருவமும் தெரியவில்லை. அப்படி ஒரு கும்மிருட்டு.

திடீரெனக் கூழனின் குரல் புரிந்தது.

''எடம் நானே வந்து காட்டறனுங்கய்யா. இன்னிக்கு உச்சி வேளையிலே பாத்தோம்.''

''பார்த்தோமுன்னு...?''

''அ.... ஒரு பொண்ணு என்னைச் சுத்திக் கிட்டுக் கெடக்குதுங்க. இருளின்னு பேரு. அதுவும் நானுமா அங்கன தனியா....அந்தக் கழுதையப் பத்தி நீங்க ஒண்ணும் பயப்பட வேணாங்கய்யா. அதுக்கு இந்த விவகாரமெல்லாம் தெரியாது.''

''அப்பச் சரி. எதுக்கும் ஜாக்கிரதையா இருக்கணும் பாரு.''

''அது கெடக்கட்டுங்க. எனக்கு எம் புட்டுப் பணம்னு இன்னும் அய்யா சொல்லலீங்களே.''

''பணம் என்ன? வழக்கம் போல வாங்கிக்க வேண்டியதுதானே...''

''அய்யா, எனக்கும் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் புரிஞ்சு போச்சுங்க. அந்த ஆனையை மட்டும் கொன்னா, ஒங்களுக்கு இருபத்தஞ்சாயிரம் கிடைக்கும். எனக்கு ஆயிரமாவது குடுத்திரணுங்க.''

''என்னய்யா இது? அநியாயமா இருக்கே? ஆயிரம் ரூபாயா? வழக்கமாத் தர்றது நூறுதானே?''

''எது நியாயம், எது அநியாயம்னு...''

''சரி சரி. ஐநூறு வச்சுக்க. நாளைக்கு உச்சி வேளைக்கே அங்கே போயிடுவோமா? பகல்லே ஒண்ணும் ஆபத்து வராதே...''

''ஒண்ணும் வராதுங்க. அந்த எடம் பகல்லேயே ஒரு ராவுங்க.''


எல்லோரும் கலைந்து செல்லும் சப்தம். இருளி மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டாள். கூழனும் தன் குடிசைக்குள் நுழைந்து கொண்ட பின்—

உருண்டு உருண்டு உட்புறம் நகர்ந்த இருளி மாந்துரையை உசுப்பி எழுப்பினாள்.

ஆம். மாந்துரை அங்கேதான் படுத்திருந்தான்.

ராஜஸ்தான் பகுதியில் ஒரு ஒட்டகம் எத்தனை பேரை சுமக்கிறது என்பதை வைத்து அதன் வலிமையும் விலையும் நிர்ணயிக்கப்படுகின்றன. அதன் கழுத்தில், முதுகில் என்று ஆட்கள் ஏறி உட்கார, உட்கார்ந்திருக்கும் ஒட்டகம் எழுந்து நின்று அவர்களைத் தாங்குமானால் அந்த ஒட்டகம் நல்ல விலைக்குப்போகும். சமீபத்தில் ஒரு ஒட்டகம், அப்படி பத்துபேரைத் தாங்கி ரிகார்டு ஏற்படுத்தியிருக்கிறது.

-நேஷனல் என்கொயரர் -ராமு



இருளிதான், அவனை இருட்டிய பின் யாருமறியாமல் அழைத்து வந்தாள்.

இரண்டு காரணத்துக்காக.

அதிகாரி அவன் மேல் நடவடிக்கை எடுத்திருந்தார். அவன் மனம் நொந்து போயிருந்தான். அவன் மனப் புண்ணை ஆற்றும் அருமருந்தாகத் தான் மாறுவதற்காகவும், கூழன் எந்த நேரமும் தன்னை அடைந்து விடக் கூடிய அபாயமிருப்பதால், புதுத் தேனாகவே தான் தன் காதலனுக்கு முதலில் அர்ப்பணமாகி விடவேண்டும் என்பதற்காகவும்-

நோக்கம் இரண்டானாலும் காரியம் ஒன்றே. அது முடிந்த இன்பக் களைப்பில் ஆழ்ந்து உறங்கினான் மாந்துரை.

இருளி உசுப்பியவுடன், ''என்ன என்ன'' என்று பதற,

அவள் அவன் காதோடு கிசுகிசுக்க,

அந்த இரவில் டார்ச் விளக்கின் மங்கிய ஒளியின் உதவியுடன் வனத் துறை அதிகாரியின் வீட்டுக்கு ஓடினான் மாந்துரை.

இருளியின் மனத்தில் எல்லையற்ற நிம்மதி. அந்தக் குறிப்பிட்ட ஆண் யானை கொல்லப்படாமல் இருப்பதில் அவளுக்கு இரட்டிப்பு அக்கறை இருந்தது.

ஏனெனில், அது, தன் காதலனின் நற்பெயரையும், வேலையையும் காப்பாற்றப் போகிறது.

அது, ஏற்கனவே மன இணக்கமற்ற ஒரு கட்டாய உறவிலிருந்து தன்னைக் காப்பாற்றியிருக்கிறது.

மறுநாள், யானைக்காக வைத்திருந்த வெடி, இடம் மாறியிருக்க, கூழன் அதில் சிக்கிச் சிதறிக் கூழாகிப் போனான்.

திருட்டு யானை வேட்டைக் காரர்களை வனத்துறை வளைத்துப் பிடித்துக் கொண்டது.

அதற்கடுத்த நாள், பகலில் ஓர் இரவான அந்த இடத்துக்கு மாந் துரையைச் சந்திக்கும் ஆவலில் இருளி சென்றபோது— ஒரு மரத்தின் மீது அமர்ந்திருந்தான், மாந்துரை.

''மாந்தொரே...''

''உஸ்... சத்தம் போடாதே. மேலே ஏறு.''

இருளி மரத்தில் ஏறி அவனை ஒட்டி உட்கார்ந்தபோது: ''அதோ பாரு!''

அங்கே— பகலில் ஓர் உறவு!

—அதே களிறும் (ஆண் யானையும்) பிடியும் (பெண் யானையும்.)

களிறின் பிடிக்கு இணங்கிய பிடி, களிப்புடன் தன்னை மென்ன மென்ன இழந்து கொண்டிருந்தது!



பௌர்ணமி நிலவில்

ஆர்வமும், உழைப்பும், புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற துடிப்பும் உள்ள எம். ஏ. காஜாவுக்குக் கருத்தான கதை மட்டும் கிடைக்குமானால் பிரகாசிக்க முடியும். ஆனால் இப்படத்தில் தேவர் பாணியில் யானையையும் குரங்கையும் பாம்பையும் புகுத்திக் கதை பண்ணியிருக்கிறார்.

பாம்பின் விஷத்தைச் சிறு வயதிலிருந்தே ஒருவனுக்கு ஊட்டி வளர்த்தால் அவன் பாம்பின் குணங்களோடு பாம்பாகவே 'ஸ்னேக்' ஆகிவிடுவான் என்று நிரூபிக்க நாகப்பன் பாத்திரத்தை (விஜயன்) உருவாக்கி விளையாடியிருக்கிறார். ரூபா சக்கரவர்த்தி என்ற புது முகப் பிரவேசம் வேறு. போலிப் பாம்பாட்டி மன்னாரு — கருணிராஜன் — கதையோடு ஒட்டாவிட்டாலும் கலகலப்பூட்டுகிறார்.

குரங்கு, யானையின் நம்ப முடியாத வேலைத்தனங்களும் நடுங்க வைக்கும் பாம்பின் தெளியதும் ஓட்டமும் குறைவின்றி உள்ளன. பௌர்ணமி நிலவில் பாம்பின் ஓட்டத்துக்கு இணையாகப் படம் ஓடுமா?

—கௌசிகன்

இலக்கியங்களிலே
துகில் படைப்புக்கள் — 3

பட்டுத்துகில்

துஷ்யந்த மன்னனை காந்தர்வ மணம் செய்து கொண்டாள் சகுந்தலை. இது கேட்ட கண்வ மகரிஷி, ''பட்டத்தரசியாக வேண்டியவளே நீ'' என்று கூறி மகிழ்ந்தார். நாட்கள் ஓடின. சகுந்தலையை அவள் கணவனிடம் சேர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார் கண்வரிஷி.

புகு வீடு செல்லும் சகுந்தலையை அலங்கரிக்க தாதிகள் ஆசைப்படுகிறார்கள். அரசனிடம் செல்ல வேண்டிய அவளுக்கு ஏற்ற அலங்காரப் பொருள்கள் ஆசிரமத்தில் ஏது? கண்வரிஷி தன் சீடர்களை காட்டுக்கு அனுப்பி மலர்களைக் கொண்டு வரச் சொல்கிறார். மலர் கொய்யச் சென்ற சீடர்களுக்கு மரங்கள் பட்டுச் சேலைகளையும், ஆபரணங்களையும், செம்பஞ்சுக் குழம்பையும் அளித்து அனுப்புகிறது. இப்பொருட்களைக் கண்ட ஆசிரம வாசிகள் வியக்கின்றனர். அவற்றை எப்படி அணிவிப்பது என்றுகூட அறியாத தோழிகள் எப்படியோ அவைகளைச் சகுந்தலைக்குப் பூட்டி விடுகின்றனர். பின்னர் சகுந்தலையிடம், ''நகைகளை அணிவித்தாகி விட்டது. சந்திர கலை போன்ற இந்த வெண்மையான பட்டுத் துகில்களையும் அணிந்து கொள்'' என்று கொடுக்கின்றனர். அவளும் எடுத்து அவைகளை அழகுற அணிகிறாள். ராணியாகவே மாறுகிறாள்.

—காளிதாசனின் அபிஞான சாகுந்தலம்
4 வது அங்கம் ஒரு காட்சி

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம் காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. ''செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்'' என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.



லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்.

பூணுகிறாள் சகுந்தலை



ADWAE/LM/1149/TAM D



இரண்டாவது மகத்தான வெற்றி!

இந்திய காப்டனின் ராஜதந்திரம்

பம்பாய் வெற்றிக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது வெற்றிக்கு வித்திட்டவர்கள் கபில்தேவும் காப்டன் கவாஸ்கரும். காப்டன் கவாஸ்கரின் 166 ரன்கள் வெற்றிப் பாதைக்கான மைல் கல். ஆனாலும் கபில் தேவை அவர் மைதானத்தில் 'திட்டி'க்கொண்டே தான் இருந்தார். 166 ரன்களை எடுத்த சுனில் கவாஸ்கர் கபில் தேவை ஏன் திட்ட வேண்டும்! எல்லோருக்குமே இது புரியாத புதிர்!

காப்டன் கவாஸ்கர் பல தடவை கபில் தேவை இப்படிக் கடிந்து கொண்டதுண்டு. ஆனால் கபில்தேவ் அதை யெல்லாம் 'ஜீ.ஜீ' என்று மரியாதையுடன் ஏற்றுக் கொள்வார். மோதிரக் கையால் குட்டுப்படுகிறோம் என்ற பெருமை போலும். கபில்தேவே சிதம்பரம் ஸ்டேடியத்தில் மாபெரும் வெற்றிக்குக் கதாநாயகனாகத் திகழ்ந்ததோடு Man of the Match பரிசையும் பெற்று விட்டார்! அவருக்குக் கிடைத்த பரிசுகள் பல! ஒரே கபில்தேவ் கோஷம்தான்!

சுனில் கவாஸ்கர் இந்த இரண்டாவது மகத்தான வெற்றியைச் சம்பாதித்து ரப்பரைப் பெற்றுத் தந்த பெருமையோடு, ராஜதந்திரமாகத் தாம் காப்டன் பதவியை விட்டுக் கொடுப்பதாக வேறு சொல்லியிருக்கிறார்! கல்கத்தா டெஸ்டுக்குச் சாதாரண ஆட்டக்காரராகப் போவதாகவும் கூறியிருக்கிறார்! மேற்கிந்தியத் தீவுப் பயணத்தை அவர் மேற்கொள்ளப் போவதாகத் தெரியவில்லை. இந்தியா முழுதும் 'கவாஸ்கர் வேண்டும்' என்ற ஏகோபித்த குரல் ஒலிக்க வேண்டும் என்று வெற்றிப் பவுண்டரி அடித்த கவாஸ்கர் எதிர்பார்க்கிறாரோ என்னவோ? அல்லது மாப்பிள்ளை விசுவநாத்துக்கு வாய்ப்பும் கௌரவமும் தர எண்ணமோ?

அஸீப்பின் பெருந்தன்மை

"**பா**கின்தான் தோல்விக்கு எங்கள் பாட்ஸ்மன்கள் சிறப்பாக ஆடாததுதான் காரணம். ஒருவேளை எனது காப்டன் பொறுப்பும் சரியாக அமையவில்லையோ என்னவோ? இந்தியக் கோஷ்டிக்கு கபில் தேவ் ஒரு பொக்கிஷம். இந்தியா இத்தகைய தலைசிறந்த ஆட்டக்காரரைப் பெற்றிருப்பதற்குப் பெருமைப்பட வேண்டும்'' என்கிறார் காப்டன் அஸீப் பெருந்தன்மையோடு.

அஸீப் இக்பால் தாம் பிறந்த பூமியான ஹைதராபாத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவரது மாமா குலாம் அஹமதுக்கு அஸீப்பின் தந்தை 34 வருஷங்களுக்கு முன்பு எழுதிய கடிதத்தைப் பார்த்துக் கண்ணீர் உகுத்தார்! ஆம். அஸீப் நடக்கும் பருவத்தை எய்துவதற்கு முன்பே தம் தந்தையை இழந்து விட்டார்! தந்தையின் கடிதம் தனயனை உருக வைத்து விட்டது. அஸீப் இக்பால் மட்டுமே தம் குடும்பத்தோடு சிதம்பரம் ஸ்டேடியத்துக்கு வந்திருந்தார்.

ஒரு விமர்சகர் அனுபவம்

இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவினரோடு 'ஹிந்து' பத்திரிகையின் விசேஷ கிரிக்கெட் நிருபர் மோகன் அத்தனை டெஸ்ட்களுக்கும் சென்று கலந்து கொண்டிருக்கிறார். அவர் தரும் சில ருசிகரமான தகவல்கள்:

''டெல்லியில் இறங்கியவுடனேயே பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் தாஜ் மகாலைத்தான் முதலில் பார்க்கச் சென்றார்கள். முஸ்லிம் கலாசாரத்தின் தலைசிறந்த பட்டணமான லக்னோவுக்கு இந்நாறு ஆட்டக்காரர்கள் சென்றார்கள்.

''சென்னையில் விமானத்தை விட்டு இறங்கியவுடனேயே அஸிப் என்னிடம் கேட்ட கேள்வி: 'மெரினா மைதானம் எங்கே இருக்கு' என்றுதான். ஆம்! அங்குதானே அவர் 'செஞ்சுரி' போட்டுக் கல்லூரிகளுக்கான பந்தயத்தில் நற்பெயர் வாங்கினார்?

''தாடி வளர்ப்பதும், மீசை வளர்ப்பதும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு 'பாஷன்' மட்டுமல்ல, அதில் ஒரு விநோத நம்பிக்கையும் கூட அவர்களுக்கு இருப்பதாகத் தெரிகிறது. பெங்களூர் முதல் டெஸ்டில் முதாஸர் நஸர் ஹாண்டில்பார் மீசை வளர்த்திருந்தார். அவரைப் பார்த்தால் பழைய காலத்து ராணுவ மேஜர் போல் இருந்தது. செஞ்சுரி போட்டார்! பிறகு மூன்று தொடர்ச்சியான தோல்விகளில் சலிப்புற்று மீசையை எடுத்தெறிந்தார்! பம்பாய் டெஸ்டிலும் அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை. கான்பூரில் வெட்டி எறிந்த மீசையை வளர்த்தார். விசுவநாத்துக்குத் தாடி மீதுள்ள ஆசை அனைவருக்கும் தெரியும். வாஸிம் ராஜாவும் ஒரு தாடிப் பிரியர்.

''பம்பாயில் பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் லதா மங்கேஷ்கர் வீட்டுக்கு விஜயம் செய்தனர். அவரது இசையில் அவர்களுக்குக் கொள்ளை ஆசை. இரண்டு மணி நேரம் அவரது இசையை ரசித்தனர். லதா மங்கேஷ்கரும் பாகிஸ்தான் ஆட்டக்காரர்களுக்கு ஒரு விருந்து வைத்து உபசரித்தார். பம்பாயில் மனோஜ் குமார், திலீப் குமார், ஷபனா ஆஸ்மி ஆகியோரும் பாகிஸ்தான் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு விருந்து கொடுத்து உபசரித்தனர்.

ம. பொ. சி.யின் பாராட்டு

''ரேடியோ, டி. வி.யில் தமிழ் வர்ணனைகள் கேட்டேன். ரசிக்கும்படி இருந்தன'' என்று திரு ம. பொ. சிவஞானம் மனம் விட்டுப் பாராட்டினார். கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தை விடாமல் ஐந்து நாளும் கண்டு களித்தவர்களில் தலைவர் ம.பொ. சி.யும் ஒருவர்.

அழகு மன்னன் இம்ரான்

அழகு மன்னன் இம்ரான் கான் முதலில் பாட்ஸ்மனாகத்தான் ஆடி வந்தார். 1971ம் வருஷம் இங்கிலாந்தில் லில்லி (Lilee)

1. தர்ரோ கபில்தேவ் போலிங் 2. பின்னி விக்கட்

—போட்டோ : பாலாஜி

3. ரேடியோ, டி. வி. தமிழ் விமர்சகர்களில் சிலர்:


கணேசன் ஜப்பார் வி. ராமமூர்த்தி
















ரிகார்டு வீரருக்கு ரிகார்டு!

சென்னை கிரிக்கெட் டெஸ்டின் இடையே ஓய்வு நாளன்று கன்னிமரா ஓட்டலில் நடந்த வைபவத்தில் இன்ரிகோ நிறுவனம், கவாஸ்கரது சாதனைகளைப் புகழும் ஒரு 45 ஆர். பி. எம். இசைத்தட்டை வெளியிட்டுள்ளது. இசைத்தட்டின் தலைப்பு : Gavaskar-The Century maker

இந்தப் பாடலை பிரபல இலங்கை பாப் பாடகர் நவ்ஸேரு நெல் பாட, ஜி. ஜெயசேகர் இசையமைத்துள்ளார்.

விறுவிறுப்பூட்டும் பாப் பாடலின் முதல் இசைத் தட்டினை, பாகிஸ்தான் ஆட்டக்காரர் அப்துல் காதர் வெளியிட இந்திய விக்கட்கீப்பர் சையத் கிர்மானி பெற்றுக் கொண்டார்.

இந்தியக் குழுவில் 'பேபி' என்றழைக்கப்படும் கபில்தேவுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

''எந்த ஒரு கிரிக்கெட்காரருக்கும், இதுவரை ரிகார்டு வெளிவந்ததில்லை. பல ரிகார்டுகளை நிறுத்திய இந்த கிரிக்கெட் ராஜாவுக்காக, முதல் ரிகார்ட் வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம்'' என்று கூறினார் இன்ரிகோ விசுவநாதன்.

—''சிக்கி'' படம் : உத்ரா

பௌலிங் இவரைக் கவர்ந்தது. பௌலிங்கில் இம்ரான் கான் கவனம் செலுத்தினார். 76-77ல் ஆஸ்திரேலியாவில் சிட்னியில் இம்ரான் பௌலிங்கில் உலகப் பிரசித்தி ஆனார். இம்ரானுக்கு ஆதர்ஸ பௌலர் ஜான் ஸ்னோ.

ஆல்ரௌண்டர் ஜாவேத் மியாதாத்

ஜாவேத் மியாதாத் ஒன்பது வயதிலிருந்து கிரிக்கெட் ஆடுவதில் ஆர்வம் காட்டி வருபவர். முஸ்லிம் ஜிம்கானாவில் ஒரு பந்தயத்தில் சோபித்த ஜாவேத் மியாதாத்துக்கு அவரது தந்தை அதிக ஊக்கமளித்தார். வாசிம் ராஜாவும் மியாதாத்தும் இந்தியா வெற்றிப் பாதையில் வேகமாய் முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போட்டார்கள்!

பாக்கில் டி. வி. காட்சி

''டெலிவிஷன் காட்சி எப்படி பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகிறது?''

டி. வி. பிரதம இன்ஜினியர் வெங்கடேசவரலு பதில் சொன்னார்: ''சென்னையில் எடுக்கப்படும் காட்சிகள் பெங்களூர், கோவா, பம்பாய் வழியாகப் பூனா சாடலைட் ஸ்டேஷனுக்குச் செல்கிறது. ஒலிபரப்புக்கு உதவும் செயற்கைச் சந்திரனிலிருந்துதான் பாகிஸ்தான் டி. வி. படங்களை எடுத்துக்கொள்கிறது. பாகிஸ்தானில் டி. வி. பார்க்க முடியாத இடம் கிடையாது.''

இந்தியா வெற்றி பற்றி நிபுணர்கள்

கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் சின்னசாமி:

''இந்தியக் குழுவில் அனைவருமே இள ரத்தங்கள். பாட்டிங், பீல்டிங், பௌலிங் ஆகிய எல்லா அம்சங்களிலும் உயர்ந்து விளங்கியதால் கோஷ்டி வெற்றி பெற்றிருக்கிறது..

கிரிக்கெட் சங்கத் தலைவர் திரு எம். ஏ. சிதம்பரம்:

''எக்ஸலெண்ட் மாட்ச். பிட்ச் நல்ல கண்டிஷனில் இருந்தது. இந்திய ஆட்டக்காரர்கள் ரொம்ப ஜோரா ஆடினாங்க.. ரசிகர்கள் இந்தத் தடவை ஒழுங்கா, கட்டுப்பாடோடு நடந்து கொண்டதைப் பாராட்ட வேணும். தமிழக முதல்வர் பல பரிசுகளை இந்திய ஆட்டக்காரர்களுக்கும் பாகிஸ்தான் ஆட்டக்காரர்களுக்கும் வழங்கிக் கௌரவித்திருக்கிறார். போலீஸ் இலாகாவினர் கட்டுப்பாடோடு திறம்பட நிர்வகித்ததற்கு அவர்களுக்கு முதல்வர் ஒரு வெள்ளித் தட்டு வழங்கிப் பாராட்டியிருக்கிறார்.''

கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராமன்:

''நான் இதுவரை பார்த்துள்ள சேப்பாக்கம் டெஸ்ட்களில் இது திரில்லிங். காப்டன் கவாஸ்கருக்கும் அவரது குழுவினருக்கும் பாராட்டுக்கள்! இந்தியா ஆட்டத்தின் எல்லா அம்சங்களிலும் பாகிஸ்தானைவிட மேன்மையாக விளங்கித் தோல்வியடைய வைத்திருக்கிறது.. பாகிஸ்தான் காப்டன் ஆசிப்பையும் அவரது குழுவினரையும் 'Sporting' ஆக ஆடி மகிழ்வித்ததற்குப் பாராட்டுகிறேன்!''


ரேடியோ விமர்சகர் ஆர். பி. அழகண்ணன்:

''பதினைந்து வருஷ கிரிக்கெட் சரித்திரத்தில் சிதம்பரம் ஸ்டேடியத்திலே இப்போது முதல்தர பிட்ச் தயாரிச்சிருக்காங்க. பாகிஸ்தான் தோல்விக்கு அவர்களேதான் காரணம். கபில்தேவுக்கு ஹேட்ஸ் ஆஃப்! ஒவ்வொரு டெஸ்டிலும் நன்று ஆட்டத்தில் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறார்.''

முடிவுரை :

23 செஞ்சுரிகளை டெஸ்ட்களில் கண்ட உலக பாட்ஸ்மன் கவாஸ்கர், சோபர்ஸ் (26) பிராட்மன் (29) செஞ்சுரிகளைக் கடக்க வேண்டாமா? சீக்கிரமே அந்தப் பெருமையை அவர் அடைய வாழ்த்துவோம்.

சிதம்பரம் ஸ்டேடிய ஹீரோ கபில்தேவ் டெஸ்ட்களில் 977 ரன்களையும் 98 விக்கெட்டுகளையும் சரித்துப் புகழேணியில் கிடுகிடுவென்று ஏறிக் கொண்டிருக்கிறார்! அவருக்கும் 'குட் லக்' கூறுகிறோம். —குண்டுமணி



கிரிக்கெட் மைதானத்தில் தாணு
ஆஸிப் இக்பால்
Mudassar Nazar
முதாஸர் நஸர்
Imran Khan
இம்ரான் கான்
ஜாவெத் மியான்தாத்
Javed Miandad
Wasim Raja
வசிம் ராஜா
பின்னி
Dilip Doshi
தோஷி



நீங்காத நினைவு

குறள் ஆசிரியர்

மீ.ப.சோமு

திவான் பகதூர் ஆவுடையப்பப் பிள்ளை என்றால் சென்ற தலைமுறையில் திருநெல்வேலி பெரிய மனிதர்களில் மிகவும் பெரியவர் என்று பொருள். மாபெரும் உருவம். மாபெரும் அன்பு. மாபெரும் கண்ணியம். எல்லா விதத்திலும் உண்மையிலேயே ஒரு பெரிய மனிதர் அவர்!

'பப்ளிக் பிராஸிக்யூட்டர்' பதவி. மற்றப்படி அந்த மாவட்டத்தில் உள்ள முக்கியமான வங்கிகள், பொது நலத் தொண்டு நிறுவனங்கள் எல்லாவற்றிலும் பெரிய பெரிய பொறுப்புக்கள். திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் டி. கே. சி. அவர்களின் வீட்டுக்கு அருகிலேயே வீடு! ரசிகமணிக்கு அனைத்திலும் அருகிலேயே இருந்தவர். பள்ளித் தோழர். ஆலோசகர். எதிலும் ஒவ்முகச் செல்லும் ஆப்த நண்பர். எந்தப் பொதுப் பணியிலும் டி. கே. சி.க்கு வலது கரமாக விளங்கி, டி.கே.சி. மறைவதற்கு முன்பே இந்த உலகிலிருந்து மறைந்துவிட்ட ரசிகமணியின் ஒப்பற்ற நண்பர் அவர்.

ரசிகமணிக்கு நண்பர் என்றால் என்ன அர்த்தம்? ராஜாஜிக்கும், கல்கிக்கும், இருவருக்குமே நண்பர் என்றுதானே சொல்ல வேண்டும்? நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னையிலிருந்து ராஜாஜி, கல்கி மற்றும் இலக்கிய நண்பர்கள் திருக்குற்றாலத்தில் தங்கியிருக்க வரும்போதெல்லாம் டி. கே. சி. யோடு சேர்ந்து விருந்துபசாரத்தில் ஆர்வத்தோடு ஈடுபடுவார். சதாசிவம் தம்பதிகள் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தால் அவர்களுக்கு உறு துணையாக இருப்பவர் திவான் பகதூர்தான்!

எல்லாரிடத்திலும் இனிமையாகப் பழகுகிற இயல்பு. கட்சிக்காரர்கள் தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருப்பதை விரும்பாத ஒரு வக்கீல் அவர். பெரிய பெரிய வழக்குகள் எல்லாம் அவரிடம் வரும்போது எதிரிகளை எப்படிச் சமரசப்படுத்தலாம் என்றே பார்ப்பார். எத்தனையோ பெரிய செல்வந்தர் குடும்பங்களில் சிக்கல் அதிகமாகிப் பின்னிக் கொண்டிருந்த மாபெரும் வழக்குகளை உடன்படிக்கை செய்து தீர்த்து வைத்த பெருமை அவருக்கு உண்டு.

ஒரு பிரமுகரைப் பார்க்கப் போகிறார் என்றால், ஆங்கில ஆண்டின் முதல் தேதியோ அல்லது கிறிஸ்துமஸ் பண்டிகையோ (அந்தக் காலத்தில் கலெக்டர்களும் பெரிய நீதிபதிகளும் துரைமார்கள்) எந்த முக்கிய நாளாக இருந்தாலும் உரிய மரியாதைகளோடு புறப்படுவார். புறப்படு முன்பு தமது குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்துக் கொள்வார். அந்த ஆங்கிலேயரின் கொடி வழி, வம்ச வரலாறு முழுதும் அதில் இருக்கும். அவருடைய குழந்தையின் பெயர், சம்பந்திகளின் விவரம், யாருக்கு எது பிடிக்கும், அவர்கள் வீட்டின் நாய்க்குட்டியின் பெயர் — எல்லாம் அந்தக் குறிப்பிலே இருக்கும். பிரமுகரைச் சந்தித்ததும் திவான் பகதூர் அவர்கள் க்ஷேம லாபங்களை சாங்கோபாங்கமாக விசாரிப்பதைப் பார்த்தால் ஆசாமி அப்படியே அசந்து போய்விடுவார்!

நீதிமன்றத்துக்குச் செல்வதற்கும், பிள்ளை அவர்கள் வெளியே போவதற்கும் என்று 'கோச்' வண்டி வரும். அந்தக் காலத்தில் திருமண வீடுகளில் ஊர்வலத்துக்கு வருமே குதிரை பூட்டிய ''பீட்டன்'' வண்டி, அதில் தான் திவான் பகதூர் அவர்கள் கோர்ட்டுக்கும் மற்ற இடங்களுக்கும் போய் வருவார். அதில் ஏறி இறங்குவதும், அந்த வண்டி வந்து வாசலிலே நிற்பதும் எல்லாம் கோலாகலமாக இருக்கும்!

இதெல்லாம் திவான் பகதூர் என்ற பிரமுகரைப் பற்றி! ஆனால் அந்தப் பெரிய உடம்புக்குள் ஒரு கவிஞரும் இருந்தார்! அவர் குறளாசிரியர்!

திருக்குறளைப் போலவே இரண்டு அடிகளில் பல வேடிக்கைக் குறள்கள், நையாண்டியாகப் பாடியிருக்கிறார் ஆவுடையப்ப பிள்ளை. சில சமயங்களில் வட்டத் தொட்டியிலேயே ஏதாவது ஒரு ''க்ளைமாக்ஸ்''ின் போது தமது குறளை அடிப்பார் அவர்!

டைகட்டி வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
கைகட்டிப் பின்செல் பவர்!

இப்படி ஒரு குறள்!

வகைவகையாய்ச் சேர்த்த
பொருள், மக்கள் வாயிற்
புகைபு கையாய்ப் போகுது பார்!

இப்படி ஒன்று!

ஒரு சமயம் மேலப்பாளையம் முகம்மதியர் பண்டிகையில் நின்றுகொண்டு அவர் பாடிய குறள் ''முகஸ்துதி'' செய்கிறவர்களுக்குப்

பொருந்துகிற முறையிலும் அமைந்திருக்கிறது.

குல்லாக்குள் குல்லாக்குள்
குல்லாக்குள் குல்லாக்குள்
குல்லாக்குள் எல்லாம்
தலை!

இத்தகைய வேடிக்கைக் கிறுக்கள் நூற்றுக் கணக்கில் பாடியிருப்பது தவிர மெய்யான கவிப் பண்பு கொண்ட ஓர் அரிய விருத்தமும் பாடியிருக்கிறார் ஆவுடையப்பப் பிள்ளை. அது டி. கே. சி. மீது பாடிய பாடல்!

டி. கே. சி.யின் கவித்துவம் நாடறிந்த உண்மை. அவர் நெல்லை மாவட்டத்தின் புகழ் பெற்ற செல்வச் சீமான்களின் மரபில் வந்தவர். அவரோடு பழகியவர்களுக்கு ரசிகமணியின் சுவையும் தயையும் வாரி வாரி வழங்கும் வள்ளன்மையும் பற்றித் தெரியும். சரஸ்வதியும் லக்ஷ்மியும் சேர்ந்ததுபோல் அல்லவா, கவியும் செல்வ சுவையும் இணைந்தது. இந்தப் பெருமையைப் பாடுகிறார் திவான் பகதூர்.

கவிச் சக்கரவர்த்தி கம்பர். அவரை ஆதரித்த வள்ளல் திருவெண்ணெய் நல்லூர் சடையப்பர். இந்த உண்மையைப் பாட்டிலே எப்படி இணைத்துவிட்டார் ஆவுடையப்பப் பிள்ளை என்பதைப் பாருங்கள்:

சருடலும் ஒருயிருமாக விளங்கிய
கம்பரும் சடையப்பரும் மறு
பிறவியில் ஒருடலும் ஒருயிரு

மாகவே பிறக்க எண்ணி, பிரமனிடம் வரம் கேட்டுப் பிறப்பெடுத்தார்கள் ரசிகமணியாக, என்று பாடுகிறார் திவான் பகதூர் ஆவுடையப்பப் பிள்ளை:

கம்பரும் வெண்ணெய் நல்லூர் வள்ளலும்
கலந்து பேசி
இம்பரில் பிறக்க எண்ணி இருவரும்
ஒருவ ராக
சம்பரின் தேவ தேவை ஒருவரம்
உவந்து கேட்கச்
செம்மலர் பூத்தோன் செய்தான்
சிதம்பர நாத மாலே!

பம்பாய் மெயில் 109

படவிமர்சனம்

மனம் விட்டுச்சிரித்துக் கவலைகளை மறந்து மகிழ ஒரு படம் — பம்பாய் மெயில் 109. முகமூடி — புதையல் படம் கடத்தல்— தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்கும் தனயன் இதெல்லாம் பழசுதான். கதையை விட்டுத் தள்ளுங்கள் — நம்ம வி. கே. ராமசாமிதான் கதை வசனம் பண்ணியிருக்கிறார். அதோடு இதில் அவர் நடிப்புத்தான் ஸுபர்ப். அவரது பேச்சிலும் வசனங்களிலும் அநாயாசமான நடிப்பிலும் அநுபவம் பளிச்சிடுகிறது. தமிழ்ப் படங்களுக்கே உரியதான கன்னியைத் தொட்டதுமே காதல் கனவுக் காட்சிகள். அயல் நாட்டுப்படங்களின் அடிநடி பாணிகள். இதையெல்லாம் மீறித் தம் நடிப்பாலும் ஹாஸ்ய வசனங்களாலும் சிரிக்கடித்து விடுகிறார் வி. கே. ஆர். போலீஸ் இலாகாவிலுள்ளவரை முட்டாளாக்குவது போலிருந்தாலும் 'ஆல் இ கான்ஸ்டபிள்ஸ் கீபாலோ மீ' என்று நடைபோடும் தேங்காயும் இப்புக்குச் சர்க்கரை சேர்க்கிறார். மற்றபடி... மற்றபடி என்ன?.... இது போதாதா?

—கௌசிகன்



ரிகர்ஸல்

பிரதிபா ராஜகோபாலன்

காரைப் போர்டிகோவில் நிறுத்தினேன். நர்ஸிங்ஹோமின் சுற்றுப்புறம் பசுமையாய் இருந்தது. தென்னை மரங்கள் தோட்டக்காரனின் கார்டியன்ஷிப்பில் உயர்ந்துகொண்டிருந்தன.

திறப்பு விழா தேதி சலவைக்கல்லில் ஆழமாய் இருந்தது.

ஒரு வருஷத்தில் நர்ஸிங் ஹோம் செங்கல் செங்கல்லாக, நோயாளிக்கு மேல் நோயாளியாக வளர்ந்து கொண்டிருந்தது. தரையின் மொஸைக் வழுக்கி விட்டது. வழக்கமான வாசனை மிக லேசாக இருந்தது.

முன் ஹாலில் பிரதான டாக்டரின் தந்தை ஜரிகை மாலையில் போட்டோவாக இருந்தார். எதிர்ப் புறத்தில் மூன்றடி உயரத்தில் பித்தளைக் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சுவரைப் பணக்காரக் குழந்தைகள் சிரிப்பில் ஆக்கிரமித்தன. கதவுகள் வார்னிஷ் பளபளப்பில் முகத்தைக் காட்டின. அடுத்த ஹாலில் சிவப்பு கார்பெட் நீண்டிருந்தது.

ரிஸப்ஷனிஸ்ட் நான்கைந்து போன்களில் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் பிளாஸ்டிக் எழுத்துக்களில் அங்கு பணிபுரியும் டாக்டர்களின் பெயர்கள் இருந்தன. இதுவரை என்னென்ன ஆபரேஷன்கள், எத்தனை எத்தனை என்று விவரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. டி அண்ட் சி தான் மெஜாரிட்டியாய் பிரைஸ் வாங்கிக் கொண்டிருந்தது.

''மிஸ்?'' என்றேன்.

''எஸ்?'' என்றாள்.

''டாக்டரைப் பார்க்கணும்.''

''பேஷண்டா?'' என்றாள்.

''இவிபேஸ்தான்'' என்றேன்.

அவள் எலக்ட்ரானிக்ஸால் இயங்கும் பொம்மை போல் ஒரு செகண்ட் புன்னகைத்து வாபஸானாள்.

சில நிமிடங்கள் நகர்ந்தன.

ரிஸப்ஷனிஸ்ட் போன்களை வைத்துவிட்டு விரல்களைச் சொடுக்கிக் கொண்டாள்.

ஒரிரு நிமிடத்தில் இரண்டு நர்ஸ்கள் தொடர டாக்டர் வந்தார். ஒல்லியாக இருந்தார். தலையில் பத்து வருடத்துக்கு முன்பேயே முடி வாபஸ் வாங்கத் தொடங்கி இருக்க வேண்டும். முகத்தில் கடுமை இருந்தது. மீசை பட்டையாய் அழுத்தமாய்ப் பட்டாக்கத்தி பைரவனுக்கு இருப்பது போல் இருந்தது. அவரைத் தொடர்ந்து ஒரு லேடி டாக்டர்.

என் பார்வையைக் காமிரா போல முழுதாகத் திருப்பினேன். மிட் ஷாட்டிலிருந்து குளோஸப்புக்குக் கொண்டு வந்தேன்.

தலை முடியில் ஷாம்புவினால் பளபளப்பு. நெற்றியில் சின்னப் பொட்டு. புருவங்கள் நீண்டு கருமையாய் இருந்தன. கண்களில் தெளிவு. பார்வையில் வயதுக்குரிய இங்கிதம். முகத்தில் பெண்மையும் செம்மையும் இரண்டறக் கலந்திருந்தன.

மிக அருகில் வந்ததும் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்தாள்.

எனக்கு முன்னால் இருந்த நோயாளிகள் உள்ளே போவதற்குத் தயாராயினர். நான் அவசரப்படவில்லை.

''சிஸ்டர், இப்போப் போன லேடி டாக்டர் பேர் சொல்ல முடியுமா?''

''எதுக்கு?'' என்று கேட்பது போலப் பார்த்துவிட்டுச் சொன்னாள் ரிஸப்ஷனிஸ்ட்.

''சுமித்ரா:''

''மிஸ்?''


''யெஸ்.''

என் முறை வந்தபோது உள்ளே போனேன்.

டாக்டர் டேபிளில் இண்டர்காம் இருந்தது. டேபிளில் அவரின் தலை பிரகாசித்தது. ஸ்டெதஸ்கோப்பை ரெடியாகக் காதில் வைத்திருந்தார். பக்கத்து நாற்காலியில் சுமித்ரா. அவளின் முகத்தில் சிறு தவிப்பு இருந்தது. நான் போனதும் பேசிக் கொண்டிருந்ததற்குத் தொடரும் போட்டு நிறுத்தினார்கள்.

என்னைப் பார்த்ததும் டாக்டர் ''டேக் இட் ஸீட்'' என்றார். நான் லேடி டாக்டரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தேன்.

அப்போது இண்டர்காம் அழைத்தது. டாக்டர் எடுத்துப் பேசினார்.



புத்தாண்டு வாழ்த்துக்கள்! நன்றி: ஜெர்மன் டிரிப்யூன்

''ம்... இன்னும் டையமாகுமா?...இங்கே சுமித்ரா அர்ஜண்டாப் போகணும். ஆமா... நாலரை மணிக்கு வீட்டில் இருக்கணும்... பொண்ணு பார்க்க வராங்க... சீக்கிரமா வந்திடச் சொல்லு...''

நான் சுமித்ராவைப் பார்த்தேன்.

பெண் பார்க்க வருகிறார்களாம்.

''சுமித்ரா அரை மணிலே கார் வந்திடும். இல்லேன்னு டாக்ஸியிலே போயிடலாம்'' என்றார் டாக்டர். அப்புறம் என் இருமலைப் பற்றி கேட்டுக் கொண்டு, ''இருமினா கல்கல்லு சவுண்ட் வருதா? வீசிங் இருக்கா?'' என்றார்.

''ரெண்டும் இருக்கு டாக்டர்.''

''ஈஸினோபிலியாவாக இருக்கும். இப்போ இன்ஜக்ஷன் ஒண்ணு போடறேன். டெஸ்ட்டுக்கு எழுதித் தரேன். ரிஸல்ட் பார்த்திட்டு ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாம். சுமித்ரா... நர்ஸ் பார்கவி எங்கே?''

''வந்திடுவா'' என்றாள் சுமித்ரா.

''இன்ஜெக்ஷன்இவருக்குப்போட்டுடுங்க.''

நான் எதிர்பார்க்கவில்லை. சுமித்ராவின் பார்வையிலிருந்து அவளும் எதிர்பார்க்கவில்லை என்று தெரிந்தது.

நான் எழுந்து கொண்டேன்.

சுமித்ரா தடுப்புக்கு அந்தப் பக்கம் எழுந்து போனாள். நான் பின்தொடர்ந்தேன். சில விநாடிகளில் மருந்தை சிரிஞ்சில் ஏற்றி என் வலது தோளுக்குக் கீழ் ஊசியைச் செலுத்தினாள். மிக அருகில் நின்றதால் அவள் சுவாசம் என்னுள் கலந்தது.

''உங்க மஸல்ஸ் ரொம்ப ஹார்டா இருக்கு'' என்றாள்.

''எக்ஸஸைஸ்'' என்றேன்.

''காரிலேயா வந்தீங்க?''

''ம்...''

ஊசி போட்ட இடத்தைப் பஞ்சால் தேய்த்து விட்டாள்.

''என் வீட்டுக்கு அர்ஜண்டாப் போகணும்.''

''அதுக்கென்ன, வீட்டுல விட்டுட்டுப் போறேன்'' என்றேன்.

''தாங்க்யூ'' என்றாள்.



டாக்டரிடம் இருவரும் வந்தோம்.

''டாக்டர், இவரோட காரிலே போயிடறேன்'' என்றாள் சுமித்ரா.

டாக்டர் எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார். ஒன்றும் பேசவில்லை.

''மிஸ்டர், நாளைக்கு வாங்க. வரும்போது டெஸ்ட் ரிசல்ட் கொண்டு வாங்க.''

''வர்றேன்'' என்றேன்.

''சுமித்ராவைப் பத்திரமாய்க் கூட்டிட்டுப் போங்க.''

''போகிறேன்'' என்றேன்.

''சுமித்ரா உங்க தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலேயே இறங்கிடுங்க. முன்பின் தெரியாத இவரோடு உங்க வீட்டு முன்னாலே எறங்கினா, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க தப்பா நெனச்சுடுவாங்க..''

''அதுவும் சரிதான் டாக்டர். முன் யோசனைக்கு ரொம்ப நன்றி.''

''டாக்டர் வரட்டுமா?'' என்றேன்.

''வாங்க.''

இருவரும் காரில் ஏறினோம். ரிவர்ஸில் வந்து போர்டிகோவில் இருந்து மீண்டும் கேட்டைத் தாண்டினேன்.

''வீட்டுக்கு ரொம்ப அவசரமா?''

''யெஸ். ஏன்?''

''டைம் இருந்தால் அன்னபூர்ணாவில் ஒரு காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்.''

''வண்டியை நிறுத்துங்க'' என்று பதறினாள்.

''என்ன சொல்லிவிட்டேன்?''

''வண்டியை நிறுத்தணும். இல்லேன்னா குதித்துவிடுவேன்'' என்று கதவைத் திறக்க முயற்சி செய்தாள்.

வண்டியை நிறுத்தினேன்.

''இறங்க வேண்டாம். உங்க வீட்டுக்கே போய்க் காப்பி சாப்பிடலாம்.''

''உங்க கூட நான் வரலே. இறங்கிக் கொள்கிறேன்: பேசாமல் ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு போயிருப்பேன். நீங்க டீஸண்டா இருக்கீங்கன்னு காரில்ஏறினேன்.''

''சுமித்ரா!'' என்றேன். நான் பேர் சொல்லி அழைத்த விதம் அவளிடம் மாறுதலை ஏற்படுத்தியது.

''உங்களைப் பெண் பார்க்க வரது யார்னு தெரியுமா?''

''தெரியும்.''

''யார்?''

''யாரா இருந்தா உங்களுக்கு என்ன?'' வெடித்தாள்.

''நான்தான்'' என்றேன்.

''என்னது?''

''நான்தான் மெட்ராஸிலிருந்து கோவை எக்ஸ்பிரஸில் வந்தேன். அப்பா, அம்மா எல்லோரும் உன் பெரியப்பா வீட்டில் தங்கி விருந்துவிட்டு. இப்போது உங்க வீட்டுக்கு வந்திருப்பார்கள். நான்தான் உங்களை நர்ஸிங் ஹோமில் பார்க்கணும் என்று, இப்போது இருக்கிற இருமலைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தேன்...''

''....''

''நம்பலியா?''

அந்தச் சமயம் எதிர்ப்புறத்தில் இருந்து டாக்ஸி ஒன்று வந்தது. எங்களைப் பார்த்ததும் உள்ளிருந்தவர் ஆச்சரியத்துடன் இறங்கினார்.

''என்னம்மா, இங்கே, மாப்பிள்ளையும் நீயும்.... இவர் தான் மாப்பிள்ளை... உன்னைக் கூட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

சுமித்ரா புன்னகைத்தாள். வேறு வழியில்லே.

வந்தவர் அவள் அப்பா.

கைகூப்பினேன்.

''நீங்க ரெண்டு பேரும் இங்கே எப்படி?''

''சொல்கிறேன்'' என்றாள்.

எங்கள் கார் புறப்பட்டது. சுமித்ரா என்னுடன் மௌனமாய் முகம் சிவந்து. ஆனால் மனத்துக்குள் ரொம்பப் பேசிக் கொண்டு வந்தாள்.



கல்கியிடம் சண்டை!

'கல்கி' அவர்கள் ஆனந்தவிகடனில் ஆசிரியராக இருந்த சமயம் 'கல்கி'யிடம் ஒரு கட்டுரையாளர் கடும் சண்டைக்கு வந்து விட்டாராம். அவர் ஒரு கட்டுரை அனுப்பியிருந்தார். அது திரும்பிவிட்டது. அதைப் பார்த்தபோது எழுத்தாளருக்குக் கடும் கோபம் வந்து விட்டது. விகடன் காரியாலயத்துக்கு வந்து கல்கியைச் சந்தித்து, 'என் கட்டுரை உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் திருப்பியனுப்ப எல்லா உரிமையும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் என் கட்டுரையை, ரப்பிஷ் என்று வர்ணித்து என் கட்டுரை மேலேயே எழுத உமக்கு என்ன அவ்வளவு கர்வம்!' என்று ஏகமாகச் சண்டை போட்டார்.

'உங்கள் கட்டுரையை 'ரப்பிஷ்' என்று குறிக்க அவ்வளவு பண்பாடு அற்றவனல்ல நான். ஒரு நாளும் அப்படி எழுதியிருக்க மாட்டேன்' என்றார் கல்கி.

கட்டுரையாளர், ஆவேசத்தோடு திரும்பிவந்த கட்டுரையை எடுத்துக் காண்பித்தார். கட்டுரையின் முதல் பக்கம் இடது கோடியில் ''ரப்பிஷ்'' என்று ஆங்கில எழுத்துக்களில் எழுதப் பட்டிருப்பதைக் காண்பித்தார்.

அதைப் பார்த்ததும் கல்கி விழுந்து விழுந்து சிரித்தார். ஏனெனில் அவர் எழுதியிருந்தது ரப்பிஷ் அல்ல பப்ளிஷ்!

ஆ. வி. யில் கட்டுரைகளைத் திருப்பியனுப்பும் பொறுப்பிலிருந்த ஒருவர் கல்கியின் Publish என்ற வார்த்தையை Rubbish என்று படித்ததால் இவ்வளவு களேபரம் ஏற்பட்டது. திரும்பப் பெற்ற கட்டுரையாளரும் அப்படியே படித்திருக்கிறார்.

''குற்றவாளி நானல்ல; என் கையெழுத்துத் தான்!'' என்றார் கல்கி. —எஸ். வி. எஸ்.



கபில்தேவ் நிகழ்த்திய உலக சாதனை என்ன?

[கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரி தங்கு விடுதி. வானொலி தேர்தல் முடிவுகளை அறிவித்த வண்ணம் இருந்த சமயம். நூற்றுக்கும் மேலான மாணவிகள் இந்திரா காந்தியின் வெற்றிகளைக் கையொலி எழுப்பி வரவேற்றபடி மகிழ்ச்சியில் ஆழ்ந்து கிடந்தவர். 'க்விஸ்' நிகழ்ச்சிக்காக 'கல்கி' நிருபர் வந்ததனை அறிந்ததும் சுறுசுறுப்புக் கொண்டு செயல்படலாயினர். விடுதியின் உதவி வார்டனும், விலங்கியல் பிரிவின் உதவிப் பேராசிரியருமான செல்வி ஆர். ருக்மிணி உடனடியாக நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யலானார். கல்லூரி முதல்வரின் அனுமதியுடன் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. ஆறு மாணவிகள் 'க்விஸ்' போட்டியில் பங்கேற்க விடுதியின் எல்லா மாணவிகளும் பார்வையாளராகக் குழுமி விட்டனர். செல்வி ருக்மிணி 'க்விஸ்' மாஸ்டராக இருந்து 'கல்கி' தயாரித்தளித்த கேள்விகளைக் கொண்டு நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்தார்.]

போட்டியில் பங்கேற்ற மாணவிகள்

1. வி. பி. ஆர். இருதய ஜெயராணி
2. என். சுமித்ரா
3. வி. சாவித்திரி
4. ஆர். வசந்தா
5. என். ஏ. சலாமத் நாச்சய்யா
6. கே. தனுசுராணி

கேள்விகள் :

1. திருநள்ளாறு என்றதும் சனீஸ்வர பகவானின் தலம் என்றிடுவோம். இம்மாதிரி நவக்கிரகங்களில் இரண்டான ராகுவுக்கும் கேதுவுக்கும் தலங்கள் எங்கு உள்ளன? (சரியான விடையை ஜெயராணி கூறினார்)

2. இந்தியாவில் மாநில முதலமைச்சர் பதவியை வகித்த இரண்டு பெண்மணிகள் பெயரைக் கூற முடியுமா? (சரியான விடையை சுமித்ரா கூறினார்.)

3. 1978ம் ஆண்டுக்கான ஞான பீட பரிசைப் பெற்றவர் யார்? (சாவித்திரி சரியான விடையைக் கூறினார்.)

4. Zulfi, my friend! என்ற புத்தகத்தை எழுதியது யார்? (சரியான விடையை எவரும் கூறவில்லை.)

5. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா எந்த ஆண்டு அங்கத்தினர் ஆயிற்று? (சலாமத் சரியான விடையைக் கூறினார்)

6. B.A.R.C என்பதன் விரிவு என்ன? (தனுசுராணி சரியான விடையைக் கூறினார்.)

7. இந்தியப் பொதுத் தேர்தலிலே போட்டியிட குறைந்தபட்ச வயது தகுதி என்ன? (சரியான விடையை எவரும் கூறவில்லை)

8. கபில் தேவ் சமீபத்தில் ஓர் உலக கிரிக்கெட் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அது என்ன? (சாவித்திரி சரியான விடையைக் கூறினார்.)

9. ஹாலந்து நாட்டின் தேசியப் பூ எது? (எவரும் சரியாக விடையளிக்கவில்லை.)

✖ க்விஸ் மாஸ்டரும் போட்டியிட்ட மாணவிகளும்

கல்லூரியில் 'குவிஸ்'



⌘ மாணவிகளின் மகிழ்ச்சி வெள்ளத்தில் குமாரி சாவித்திரி பரிசு பெறுகிறாள்

10. ஜுபிடர் கிரகத்துக்கு மொத்தம் எத்தனை சந்திரன்கள் உள்ளன?
(மூன்று, ஒன்பது, எட்டு என்று மனத்தில் தோன்றியதைக் கூறினரே தவிர சரியான விடையை எவரும் கூறவில்லை)

11. Free lance writer என்று எவர் அழைக்கப்படுகிறார்?
(தனுகராணியும், சாவித்திரியும் பாதிப் பாதி சரியாகக் கூறினர்.)

12. திருமதி இந்திரா காந்திக்கும், திருமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கும் உள்ள உறவு முறை என்ன?
(ஜெயராணி சரியான விடையைக் கூறினார்.)

13. விண்வெளியில் நடந்த முதல் மனிதர் யார்?
(ஆம்ஸ்ட்ராங், ககாரின் என்று கூறினரே தவிர சரியான விடையை எவரும் கூறவில்லை)

14. நோபல் பரிசு பெற்ற மூன்றாவது இந்தியர் யார்? எத்துறைக்காக நோபல் பரிசு பெற்றார்?
(சாவித்திரி சரியான விடையைக் கூறினார்.)

15. தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் முழு நீள சினிமாஸ்கோப் படம் எது?
(வசந்தா சரியான விடையைக் கூறினார்)

16. Quisling என்ற வார்த்தை எவரைக் குறிக்கும்?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

17. ராமன், கிருஷ்ணன், கோபு, பாஸ்கர் ஆகிய நால்வரும் வரிசையாக உட்கார்ந்திருக்கின்றனர். ராமனும் கோபுவும் இடம் மாறி உட்கார்ந்து கொள்கின்றனர். பிறகு கிருஷ்ணனும் ராமனும் இடம் மாறிக் கொள்கின்றனர். இப்போது நால்வரையும் வரிசைப்படுத்தவும்.
(குறிப்பிட்ட கால அளவுக்குள் எவரும் சரியான விடையைக் கூறவில்லை.)

18. பண்டிட் மதுன் மோகன் மாளவியா ஸ்தாபிதம் செய்த ஓர் இந்திய சர்வ கலாசாலையின் பெயரைக் கூறவும்.
(சென்னை சர்வகலாசாலை, மாளவியா சர்வ கலாசாலை என்றெல்லாம் விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)

19. ரேஸ் குதிரைகளுக்குப் பிறந்த தினம் எந்த நாளில் கணக்கிடப் படுகிறது?
(மே மாதம் முதல் தேதி என்று ஒரு தவறான விடை வந்தது.)

20. ஓர் அங்குலத்தில் எத்தனை சென்டி மீட்டர்கள் உள்ளன?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

21. இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளம் எவ்வளவு?
(ரூ. 2500 என்று ஒரு விடை வந்தது. சரியான விடை எவருக்கும் தெரியவில்லை.)

காமராஜ்



கார்ல்தேக்



மாளவியா



சிவாஜிகணேசன்



22. கல்லில் சிற்பம்வடிக்கும் கலையைப் பயில்விக்கும் தனிக் கல்லூரி தமிழ்நாட்டில் எங்குள்ளது? அதன் முதல்வர் யார்? (பாதிக் கேள்விக்குச் சாவித்திரி விடையளித்தார்.)

23. Polyandry என்பதன் பொருள் என்ன? (தனுக ராணி சரியான விடையைக் கூறினார்.)

24. சென்னை மாநகராட்சி மன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ள கட்சி எது?

(அண்ணா தி. மு. க., இந்திரா காங்கிரஸ் என்று பதில்களில் பல கட்சிகளின் பெயர்கள் அடிபட்டன!)

25. காமராஜ் அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது எந்த ஆண்டு அளிக்கப்பட்டது? (சுமித்ரா சரியான விடையைக் கூறினார்)

26. குடந்தை ராமலிங்கம் முதன் முதலில் சட்ட சபைத்தேர்தலில் போட்டியிட்ட போது எந்த அரசியல் தலைவரை எதிர்த்து நின்றார் என்று கூற முடியுமா? (சாவித்திரி சரியான விடையைக் கூறினார்.)

27. எவ்வித சப்தமும் எழுப்ப முடியாத ஒரு விலங்கு எது? (எவரும் சரியான விடையைக் கூறவில்லை.)

28. தமிழகத்தில் 'மீட்டர் கேஜ்' பாதையில் ஓடும் மிகத் துரிதமான வண்டி எது? எவ்விடங்களுக்கு இடையே ஓடுகிறது? (ஜெயராணியும் சுமித்ராவும் பாதிப் பாதி சரியாக விடையளித்தனர்.)

29. ஒரு கண்ணாடிக் குடுவை நிறைய பால் உள்ளது. அதனை எடை போட்டால் ஒரு கிலோ உள்ளது. மொத்தப் பாலில் பாதியைச் செலவழித்துவிட்டு மறுபடியும் குடுவையை எடை போட்டால் முக்கால் கிலோவாக உள்ளது. குடுவையின் எடை என்ன? (தனுகராணி சரியான விடையளித்தார்)

30. சிவாஜி கணேசனும், எம். ஜி. ராமச்சந்திரனும் இணைந்து நடித்த முழு நீளப் படங்கள் எவை?

(இக்கேள்வியைக் கேட்டதும் ஐஸ் சாப்பிட்டது போன்று 'ஸ்...ஸ்...' என்று ஒலி எழுப்பியபடி, பார்வையாளர்களிடையே ஒரே உற்சாகம். இக்கேள்விக்கான பதிலை அளிக்கும் முதல் வாய்ப்பு கிடைத்த வசந்தா பளிரென்று விடையளித்தார். ஒரே உற்சாக ஆரவாரங்கள்.)

(போட்டியில் அதிக மதிப்பெண்களைக் குமாரி வி. சாவித்திரி பெற்று 'கல்கி'யின் பரிசான ரூ. 50ஐ தட்டிச் சென்றார். விருது உதவி வார்டன் செல்வி ருக்மிணி பரிசை வழங்கினார்.


போட்டியின் முடிவில் குமாரி கனிமொழி கடம் வாசிக்க நிலகவதி சினிமாப் பாடல்கள் இரண்டைப் பாடினார். பிறகு கனிமொழியும் பதுருன்னிஸாவும் 'விண்ணோடும் முகிலோடும்' பாட்டை டூயட் பாடினார்கள். கனிமொழி தனியாக 'உதிரிப் பூக்கள்' படத்தின் பாட்டைப் பாடி எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டார்.

'கல்கி' நிருபர் நன்றி கூற விழா முடிந்தது.

விடைகள்: (1) ராகுவுக்கும், கேதுவுக்கும் திருக்காளத்திதான் தலமாகும். (2) நந்தினி சத்பதி, சசிகலாகாகோத்கர். (3) சச்சிதானந்த வாத்ஸ்யாயன் அக்யே என்ற ஹிந்திக் கவிஞர். (4) பிஜு மோடி. (5) 1945 (30-10-45). (6) Bhaba Atomic Research Centre. (7) 25 வயது. (8) 1979ல் மட்டும் 74 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரே ஆண்டில் உலக டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை ஏற்படுத்தி உள்ளார் கபில்தேவ். (9) டியூலிப். (10) பன்னிரண்டு. (11) எப்பத்திரிகையிலும் சம்பளம் பெறும் ஊழியராக இல்லாமல், தான் விரும்பும்போது தன்னிச்சையாக எந்த இதழுக்கும் எழுதும் சுதந்திரம் பெற்ற எழுத்தாளர். (12) இந்திரா காந்தியின் அத்தை விஜயலட்சுமி பண்டிட். (13) Aleksei A. Leonov (14) அன்னை தெரசா. நோபல் சமாதானப் பரிசைப் பெற்றுள்ளார். (15) ராஜ ராஜசோழன். (16) தனது தேசத்துக்குத் துரோகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுபவரை. (17) கோபு, ராமன், கிருஷ்ணன், பாஸ்கர். (18) பனாரஸ் ஹிந்து சர்வ கலாசாலை. (19) ஜனவரி முதல் தேதியன்று. (20) 2.54 சென்டி மீட்டர். (21) ரூ. 500. (22) மகாபலிபுரத்தில்; கணபதி ஸ்தபதி. (23) ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை ஒரு பெண் அடைவது. (24) சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட நிலையில் விசேஷ அதிகாரியின் நிர்வாகத்தில் தற்போது உள்ளது. (25) காமராஜின் மறைவுக்குப் பின்னர் 1976ல் அவ்விருது அளிக்கப்பட்டது. (26) மு. கருணாநிதியை. (27) ஒட்டைச்சிவிங்கி. (28) வைகை எக்ஸ்பிரஸ். சென்னை—மதுரைக்கு இடையே ஓடுகிறது. (29) அரை கிலோ. (30) இருவரும் இணைந்து நடித்த ஒரே படம் 'கூண்டுக் கிளி'.

தொகுப்பு: நாயகன்

புகைப்படம்: சந்திரா போட்டோ ஸ்டுடியோ, கும்பகோணம்



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

காந்தி வி. ஆருக்கு எழுதியிருந்தார்: ''நாம் இப்போதெல்லாம் மிக முக்கியமான சில விஷயங்கள் குறித்து ஒத்துப்போக முடியாதது பயங்கரமானதாக இருக்கிறது. மற்ற எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். கௌரவமான தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே நான் வெளியேற விரும்புகிறேன். நான் ஒரு குகைக்குள் போய்ப் பதுங்கிவிடப் போவதில்லை. யார் வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளும்படிதான் விளங்கப் போகிறேன். இதில் கஷ்டம் என்ன இருக்கிறது? இப்போதுள்ள நிலைமை இயல்பானதாக இல்லை என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? எல்லாரும் மூச்சுத் திணறுவதை உணர்கிறார்கள். நான் விரும்புவது நீங்கள் கவலைப்படாதிருக்க வேண்டும் என்றுதான். அன்புடன், பாபு.'' —

முன்பு பலதடவைகள் நிகழ்ந்ததுபோலவே வி. ஆர். கடைசியில் விட்டுக் கொடுத்து ஒத்துப் போனார். தமது ஆங்கிலேய நண்பர் ஒருவருக்கு அவர் விளக்கம் கூறினார்: ''மகாத்மா காங்கிரஸிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளத் திட்டமிட்டிருப்பதானது விவாகரத்து போன்றதல்ல. பிரிந்து வாழ நீதி மன்ற அனுமதி பெறுவது போல்தான். ஏன் அந்த அளவுக்குக் கூட மோசமானதல்ல எனலாம்.''

• • •

ஹரிஜனப் பணியும் அதையொட்டிய சர்ச்சைகளும் வி. ஆரின் கவனத்தைத் தொடர்ந்து கவர்ந்து வந்தன. ஜூன் இறுதியில் சீர்திருத்தங்கள் குறித்து மனக் கசப்பு அடைந்திருந்த ஓர் எதிர்ப்பாளன் ஒரு குண்டை வெடிக்கச் செய்திருந்தான். காந்தியைக் கொன்றுவிடுவதே அவன் நோக்கம் என்பதில் ஐயமிருக்கவில்லை. நல்லவேளையாக அவனுடைய நேரக் கணக்குத் தப்பிப் போயிற்று.

குண்டுகளை வழிபடுவதில் உள்ள ஆபத்தான விளைவுகளைப் பற்றி வி. ஆர். விமர்சித்தார். அந்தக் குண்டே பேசுவது போல் பின்வருமாறு கூறினார் அவர்:

''பிரிட்டிஷ் மாஜிஸ்டிரேட்டின் கழுத்தை நோக்கி மட்டுமல்ல; காந்திஜி மீதும் நான் பாய்வேன். எனக்கு இடமளித்தால் என் சகோதர சகோதரிகள் மீதும் பாய்வேன்.''

திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த ஹரிஜனச் சிறுவர்களுக்காக ஆசிரமத்தின் ஒரு நற்பணியாக ஒரு மாணவர் விடுதி ஆரம்பிக்க அவர் முயன்றார். ஆனால் நகரத்தில் யாரும் அத்தகைய மாணவர் விடுதிக்கு அறைகளை வாடகைக்குத் தர முன்வரவில்லை. ஒரு வீடு கட்டவே தயாராக இருந்த ஆசிரமம், பள்ளியை நிர்வகித்த ஜில்லா போர்டிடம் பள்ளி மைதானத்தின் ஒரு பகுதியை நீண்ட கால வாடகைக்குத் தருமாறு வேண்டியது. ஆனால் ஜில்லா போர்டு இதற்கு இணங்க மறுத்தது. சென்னை அரசு தலையிட முடியாது என்று கூறிவிட்டது.

தீண்டாதார் வசித்த பகுதியில் ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ள ஆசிரம சகாக்கள் சிலர் விரும்பினர். ஆனால் வி. ஆர். இந்த யோசனையை நிராகரித்தார். ''நமது விடுதியை ஹரிஜனப் பகுதியிலேயே ஆரம்பிப்பது மோசமான கொள்கையாகும். வேறெங்கேனும் ஒரு வீட்டைப் பெற நாம் முடிந்த மட்டில் முயல வேண்டும். அது சாத்தியமில்லை என்றால் ஹரிஜனப் பகுதியில் ஆரம்பிப்பதை விட, காத்திருப்பதே மேல்.''

மாணவர்களை ஆசிரமத்திலேயே வைத்திருக்கலாம் என்று அவர் எண்ணினார். ஆனால் நாலு மைல் தூரத்திலிருந்து பள்ளிக்குப் போக வர வாகன வசதி ஒரு பிரச்னையாயிருந்தது. கடைசியில் வி. ஆரின் நண்பர் சுப்பராயன் கொஞ்சம் நிலம் கொடுத்தார். அதில் ஆசிரமம் கட்டிய மாணவர் விடுதி 1935ல் காங்கிரஸ் அக்கிராசனர் பிரசாத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

1934 தேர்தலில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் காங்கிரஸினால் ஒரு நேரடிப் பிரச்னையாக்கப்படவில்லை. இதன் அடிப்படையில் வி. ஆரும் மகாத்மாவும் தங்கள் சீர்திருத்த நம்பிக்கைகளைக் கைவிட்டு விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டை அபத்தம் என வர்ணித்தார் வி. ஆர். ''ஓர் அரசியல் கட்சி எந்தெந்த விஷயங்களிலெல்லாம் சிரத்தை கொண்டிருந்ததோ அவை எல்லாவற்றையும் ஒவ்வொரு தேர்தலிலும் முன்வைக்க முடியாது'' என விளக்கம் தந்தார். அவரும் காந்தியும் தங்களது நம்பிக்கையில் நிச்சயம் பின்வாங்கிவிடவில்லை. இருப்பினும் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைக் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் சேர்க்காததன் மூலம், அந்தப் பிரச்னையில் சட்ட பூர்வமான சீர்திருத்தத்தில் மெத்தனப் போக்குக் காட்டிய காங்கிரஸ் பகுதியினருக்கு அவர்கள் விட்டுக் கொடுத்திருந்தனர்.



ஆலயப் பிரவேச மசோதா சட்ட சபையில் வி. எஸ். ரங்க அய்யர் என்பவர் பெயரில் அறிமுகமாகவிருந்தது. அவையில் காங்கிரஸ்காரர் யாருமில்லாததால் காங்கிரஸ்காரர் அல்லாத அவர் மூலம் மசோதாவைக் கொணர ஏற்பாடாகி யிருந்தது. இந்த மசோதாவை அறிமுகப்படுத்தி ஆதரவளிக்க முன்வந்ததற்காக ரங்கய்யர் ஆசாரக்காரர்களின் அதிருப்திக்கு ஆளாகியிருந்தார். ஆகஸ்டு இறுதியில் அவர் மசோதாவை வாபஸ் பெற்றுக் கொண்டார். காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில் இந்தச் சீர்திருத்தம் பற்றி உறுதிமொழி ஏதும் அளிக்கவில்லை என்று சுட்டிக் காட்டித் தமது செய்கையை நியாயப்படுத்தினார். ''சட்டி சுட்ட தடா' என்று நீங்கள் விட்டுவிட, காங்கிரஸ் அல்லாத ஒருவன் அதைப் பிடித்துத் தாங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்'' என்பதாகக் குற்றம் சாட்டி வி. ஆருக்கு அவர் எழுதினார்.

இந்தக் குற்றச்சாட்டு நியாயமானதல்ல. சட்ட சபை அங்கத்தினர்களாக இருந்திருந்தால் வி. ஆர். உள்பட பல காங்கிரஸ்காரர்கள் இந்த மசோதாவைத் தாங்கி நிறைவேற்ற முயன்றிருப்பார்கள். எப்படியிருந்தாலும் வி. ஆர். அந்த மசோதாவிடம் விசுவாசத்துடன் இருந்தார் என்பதை எதிர்காலம் நிரூபிக்கத்தான் செய்தது. ஆயினும் அந்தத் தருணத்தில், எதிர்ப்புகளைச் சமாளித்து நிதானமாகப் பாய்கிற சீர்திருத்தம் என்கிற நீரோடையானது தேர்தல் அரசியலால் குழப்பப்பட்டுச் சேறாகியிருந்தது.

• • •

காங்கிரஸுக்கு ஓர் அக்கிராசனர் தேவையாக இருந்தது. வி. ஆர். அல்லது பிரசாத் இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தாகவேண்டும். காங்கிரஸ் அமைப்பின் மீது வில்லிங்டன் தீவிர நடவடிக்கை எடுப்பதற்குச் சற்று முன்பாக, 1931 இறுதியில், மாகாணக் கமிட்டிகளால் இருவர் பெயர்களுமே பிரேரேபிக்கப்பட்டிருந்தன. இருவருமே ஒருவர் மற்றொருவரைப் பதவி ஏற்குமாறு கோரியிருந்தனர். இப்போது சட்ட சபைத் திட்டத்தைத் தாங்கியிருந்த வி. ஆர்., அக்கிராசனர் சுமையையும் தாங்குகிற நிலையில் இல்லை.

வி. ஆரை இப்போது தேர்ந்தெடுப்பது சாத்தியமில்லை என்று மகாத்மா பிரசாத்துக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சொன்னார். பிரசாத்துக்கே கிரீடத்தை அளித்தார். பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ பிரசாத் எடுத்துக் கொண்ட பிரயாசைகள் அந்தக் கிரீடத்தைச் சூட்டிக் கொள்ள அவர் அருகதையானவர்தான் என்பதை உறுதிப்படுத்தியிருந்தன.

அக்டோபரில் பிரசாதின் தலைமையில் காங்கிரஸ் பம்பாயில் கூடியபோது காந்தி சம்பிரதாயமான முறையில் காங்கிரஸிலிருந்து விலகினார். அவரிடம் விசுவாசத்தைக் காண்பித்துக்கொள்ள, பெருந் திரளாகக் கூடியிருந்தவர்கள் எழுந்து நின்றார்கள். காங்கிரஸுக்கும் மகாத்மாவுக்கும் இடையில் தொடர்பு விட்டுப் போவதாக ஒரு சடங்கு நடந்து முடிந்த போதிலும் உண்மையில் பந்தம் நீடிக்கவே செய்யும் என்பது தெளிவாயிற்று. கிராமப்புறப் பணிகளைத் தீவிரமாக்கத் தாம் அகில இந்திய கிராமத் தொழில்கள் சங்கம் ஒன்றை காங்கிரஸின் இணைப்பாக உருவாக்கப் போவதாகக் காந்தி அறிவித்தார்.

இந்த மகாநாட்டின்போது, இரு சந்தர்ப்பங்களில் வி. ஆரும் மகாத்மாவும் எதிர் எதிர் கட்சிகளில் தாங்கள் இருக்கக் கண்டார்கள். சிறையில் இருந்த ஜவாஹர்லால், உத்தரப் பிரதேசத்தை இனி காங்கிரஸ், ஹிந்த் என அழைக்க வேண்டும் என யோசனை வெளியிட்டிருந்தார். காந்தி இந்தக் கருத்தை ஆமோதித்தார். ஆனால் பலருக்கு ஹிந்த் என்பது இந்தியாவையே குறித்தது. 'ஹிந்த்' என்பது உத்தரப் பிரதேசத்தின் பெயராக ஏற்றுக் கொள்ளப்படுமானால் தேசிய கீதங்களிலும் கோஷங்களிலும் பல மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்று வி. ஆர். சுட்டிக் காட்டினார். ஜவாஹர்லாலின் யோசனை முறியடிக்கப்பட்டது.

ஜயப்பிரகாஷ் நாராயணனும் மினூ மஸானியும் காங்கிரஸ் கமிட்டிகளில் தங்களது சோஷலிஸக் கோஷ்டி போன்ற பல கோஷ்டிகளுக்கும் விகிதாரப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றனர். வி. ஆர். இதனை எதிர்த்தார். பட்டேலும் அவ்வாறே செய்தார். ஆனால் மகாத்மா தமது நெருங்கிய சகாக்களை வியப்பில் ஆழ்த்தும் விதமாக ஜே. பி. மஸானி திட்டத்துக்கு ஆதரவாக வோட்டளித்தார்! அது நிறைவேறியது.

காந்திக்கும் வி. ஆருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் பெரிதல்ல. இந்த மகாநாட்டின்போது வங்கத்தின் பி.சி. ராய்க்கு மகாத்மா எழுதிய ஒரு கடிதம், அந்தத் தருணத்தில் வி. ஆருடன் அவருக்கு இருந்த உறவு முன்னெப்போதையும்போல் நெருங்கியதாகவே இருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது. (தொடரும்)

தமிழாக்கம்: கெ. ராஜேந்திரன்

''பன்னிரண்டு தினசரி காலண்டர் வாங்கிட்டுப் போறீங்களே, எதுக்குங்க?''

''எங்க குடும்பத்தில் உள்ள பன்னிரண்டு பேருக்கும் தினசரி பல்போடி மடிக்கணுமே அதுக்குத்தான்!''




VEP
VEP
மேனியழகு மிளிர
இயற்கையின்
கைவண்ணம்
வேப்
சோப்பு
மறைந்திருக்கும்
அழுக்கை ஈர்த்து வெளி
யேற்றி உங்கள்
சருமத்தின் மினு
மினுப்பும் மெருகும்
கலையா வண்ணம்
போற்றிப் பாதுகாக்கிறது
வேப் சோப்பு.
கேரளா சோப்ஸ் &
ஆயில்ஸ் லிமிடெட்
(ஒரு அரசு நிறுவனம்)
கோழிக்கோடு.

மகரிஷி காட்டும் நேர்வழி





✱ ரமணர் ✱ பேராசிரியர் கே. சுவாமிநாதன்

அபாரமான நாவல் இது. புத்தம் புது உத்தி. முதல் பாராவிலேயே ஆள் க்ளோஸ்! பட்டப் பகலில் ஒரு பெரும் படுகொலை நிகழ்ந்து விடுகிறது.

கொலைகாரனைப் பிடிக்க வேண்டியது ஒன்று தான் பாக்கி. எப்படியாவது பிடித்தே தீர வேண்டும் என்று ஊரே அல்லோலகல்லோலப் படுகிறது. அந்த அக்கிரமக்காரனை மடக்கிப் பிடித்து விட்டால் பிறகு அந்தச்ச மூகத்திலே வேறு தொல்லை ஏதும் மூச்சுக் காட்டாது. எல்லோரும் வெகு நிம்மதியாய் வளைய வரலாம்.

ஆளைக் கண்டு பிடிக்க ஊர் ஜனங்கள் அனைவரும் அந்தத் துப்புத் துலக்கும் அதிகாரியின் சாமர்த்தியத்தையே நம்பியிருக்கிறார்கள். டிப்டாப்பாகக் காக்கி உடையில் வளையவரும் அவர் 'கொலையாளியைப் பிடித்தே தீருவேன்' என மீசை முறுக்கி வீராப்புரைக்கிறார். 'ஜீப்'பில் கன வேகமாய் அங்கு மிங்கும் விரைகிறார்.'

ஊர்க் கோடியில் கற்பாறை மீது அன்பும் சாந்தமுமே உருவாய் சும்மா உட்கார்ந்திருக்கிறார் ஒரு சாது. கோவணாண்டி. ஊருக்குப் புதுசு.

ஊர் அமளியிலும் நிதானம் இழக்காத ஒருசில நிறைகுட ஆசாமிகள், குந்தியிருக்கும் அம்முனிவரை அணுகுகிறார்கள். ஊர் விவகாரம் பற்றி விநயமாகத் தெரிவிக்கின்றனர். கொலைகாரனை எளிதில் கண்டுபிடிக்க அவரால் சுளுவான வழி சொல்ல இயலும் என்பது அவர்களின் ஊகம், நம்பிக்கை.

மந்தகாசமாய் முறுவலிக்கிறார் அம்மகான். மெலிதாய் சுருங்கக் கூறுகிறார்: ''கொலை புரிந்தவனைத்தானே பிடிக்க வேண்டும்? ரொம்பச் சுலபமாச்சே! அதோ, போலீஸ் உடையில் சவடாலாக அமர்க்களம் பண்ணி வருகிறானே, அவன்தான் நிஜக் கள்ளன். போலீஸ் அதிகாரி மாதிரி வேஷம் போட்டு நடித்துச் சும்மா பாச்சாக் காட்டிக் கொண்டிருக்கிறான், அவ்வளவுதான். அவனை மடக்கினால் உண்மை வெட்ட வெளிச்சமாகிவிடும்''

வேடக்காரக் கொலையாளி இவ்வாறு உடனே பிடிபடுகிறான். ஊரில் களவு கொலை பயம் ஒரு மொத்தமாக ஒழிந்து விடுகிறது.

இப்படி இந்த நாவலின் முதல் அத்தியாயத்திலேயே மர்மம், கொலை, பூசல், ஆட்டம் அவுட். அடுத்தடுத்து வரும் அத்தியாயங்களில் தெவிட்டாத இன்பக் காதல் கதைகள்தாம்.

இந்த நவீன நாவல் போலத்தான் ரமண போதனை இருக்கிறது என்கிறார் ஸ்ரீ ரமண மகரிஷியுடன் பல ஆண்டுகள் பழகி ரமண சித்தாந்தத்தைக் கரைத்துக் குடித்து அனுபவித்து வரும் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்கள்.

நான் எனப் பொய்யாக உலவி இழையும் அகந்தை பாவனைதான் பாடாய்ப் படுத்தும் நிஜக் குற்றவாளி. 'நான்' ஆகத் தானே எழும் அவ்வெண்ணமே, 'நீ', 'மற்றவை' ஆகிய முன்னிலைப் படர்க்கைகளுக்குக் காரணமாகிறது; வேண்டாத வித்தியாசங்களைப் புகுத்துகிறது; உலக உபாதைகளுக்குப் பாதை வகுக்கிறது.

யாரடா அது அந்த 'நான்'?, என்று தீவிரமாய்த் தேடி, அவனைக் 'கப்'பென்று பிடித்து உலுக்கினால் அந்த 'நான்' பேர்வழி வெலவெலத்து ஒடுங்கி அடங்கி அட்ரஸ் இல்லாமல் ஓடியே போய்விடுவான். அதன் பின் மிஞ்சும் ''தான்'' தன்னறிவாய் தனித்து நின்று விளங்குவதை உணர்வதே நித்திய உண்மை. அதுவே இன்பம், வீடு, விடுதலை.

இத் தூய உணர்வில் தினமும் சில நிமிடமேனும் திளைப்பவர்கள் அகந்தை அகன்று சமூகத்தில் இதமாய், இயல்பாய், இன்பமாய் அனைவருடனும் அன்பொழுக இயங்க வல்லவர்கள்.

ஆனால், இந்த நிஜக் குற்றவாளியான, 'நான்' என்பவனோ படா போக்கிரி. வெளி வேஷக்காரன். நழுவலில் எம்டன். மனம், உடல், ஜீவன் எல்லாவற்றுக்கும் தானே அதிகாரி போல ஜாலக்குகள் காட்டிக் கொண்டே வளைய வருபவன். அவனைப் பற்றி விசாரிக்கப் புகுந்தால் ஜகா வாங்கி டபாய்க்கப் பார்ப்பான். அவனை நழுவ விட்டுவிட்டு மற்ற எதையும் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தால் விமோசனம் இல்லை. அவனைக் கையும் களவுமாகக் கண்டு பிடிப்பதற்கான நேர்வழி மகரிஷி ரமணரின் 'நான் யார்?' எனும் அக முக சிந்தனையே ஆகும்.

—பேராசிரியர் கே. சுவாமிநாதன் பேச்சு வாக்கில் சொன்னதைக் கோத்து எழுதியவர்: லா. சு. ரங்கராஜன்.

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran



அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்
மிகத்துரித
நிவாரணம் அளிக்கும்
வியர்க்குரு பவுடர்
Glaxo
nycil
PRICKLY HEAT POWDER
வாங்குவீர் நைஸில்—
விரட்டுவீர் வியர்க்குருவை.
விலை ரூ. 63 பைசாதான்.*
* அதிகபட்ச சில்லறை விற்பனை விலை.
உள்ளூர் வரிகள் தனி.
அரிப்பு, எரிச்சல் போன்ற தொல்லைகளிலிருந்து மிகத் துரித நிவாரணம் தரவல்லது வியர்க்குரு பவுடர் ஒன்றுதான் நைஸில். விசேஷ மருந்துக் கலவையுள்ள நைஸில், ஒவ்வொரு கட்டத்திலும் வியர்க்குருவை எதிர்த்துப் போராடுகிறது.
1. அதிகம் வியர்க்காமல் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமூட்டுகிறது.
GN-79-364 E Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு

